ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

வருட சந்தா முன் பணம் — ரூ. 3—0
6-மாத சந்தா ,, — ,, 1--12
வெளி நாட்டிற்கு ,, — ,, 5—0

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 ச்கு ரூ. 2.
ஜோடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

| மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹு புரட்டாசி-மீ 3-உ (18—9—1932) | மலர் 21. |
|---|---|---|


# நீங்கள் விரும்புவதென்ன?

## அறிவுள்ளவர்களாகவும், மூட நம்பிக்கையற்ற வர்களாயும், வாழ விரும்புகிறீர்களா?

அர்த்தமற்ற ஓர்வார்த்தையை நம்பி ஏமாந்து, காலத்தை வீணாக்கி, செல்வத்தையழித்து சிதைந்து சோம்பேரிகளாய், வறியராய், வாழ விரும்புகிறீர்களா? இல்லையெனில் தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி.எல்., எழுதிய "கடவுளும் பிரபஞ்சமும்" என்ற நூலை இன்றே வாங்கிபாருங்கள். உண்மைதெரியும், அஞ்ஞானம் தெளியும், சந்தேகம்தீரும், கடவுளைப்பற்றிய அர்த்தமற்ற பயமும், சந்தேகமும் நீங்கும். சிறந்த ஆராய்ச்சி நூல் 80-பக்கங்களுக்கு மேற்கொண்டது விலை 4-அணா,

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபாற்பில்லைகள் அனுப்பவும்.

கிடைக்குமிடம்:— மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

Read the
"SUPERSTITION OF KHADI"
A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.
Published by Kudi Arasu Publishing House, Erode.
Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.
*Apply to:—*
Manager "Kudi Arasu" Erode.

உங்கள்
கண்ணையும்
காதையும்
கவனித்துக் கொள்ளுங்கள்
பூவிழல்!!
கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.
செவிடு!!
பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.
விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.
"Sri" Works
Beadon St. Calcutta

சுயராஜியம்
யாருக்கு?
தோழர் ம.சிங்காரவேலுபி.ஏ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமைஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.
பிரதி 1க்கு விலை 0—1—0.
கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

குஷ்டம்
வெண்குஷ்டம் · பத்து.
சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.
Post Box No- 11413
Calcutta- (k)

காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வறவேற்புக்கு பதிலளிக்கு முகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.
21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோரும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.
100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0
தபால் சிலவு 0—6—0
கிடைக்குமிடம்:—
மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

டாக்டர் சிங்காரம் அவர்களின்
கெந்தக நெய்.
இம்மருந்தால் குணமாகும் நோய்கள்.
செம்மேகம், கருமேகம், மேகஊரல், தடிப்புடன் கூடிய மேகப்படைகள், கண்டமாலை, விப்புருதி கட்டிகள், வலி குன்மம், கிரந்தி, குஷ்டம், லிங்கப்புற்று, சூலை, கணுச்சூலை, பாரிச வாய்வு, முடக்கு வாய்வு, சர்மத்தில் ஸ்பரிச உணர்ச்சியில்லாதிருத்தல், கை கால் பிடிப்பு, மதமதப்பு, திமிர்வாய்வு, புண், புரைகள் ஆராத ரணங்கள், நரம்பு பிடிப்பு முதலிய பலவித கடின நோய்களை குணம்செய்யும். இரத்தத்திலுள்ள எவ்வித துர் நீரையும் போக்கி சரீரத்திறகு நல்ல தேஜஸைக் கொடுக்கும். பத்தியமில்லை.
60 வேளை மருந்து விலை ரூ. 10—0—0
20 ,, ,, 4—0—0
வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம்.
மலாய்நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும்.
முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்கு கேட்லாக் இனமாய் அனுப்பப்படும்.
டி. சி. சிங்காரம் அன் கோ.,
சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

இனம்! இனம்!!
கிராமபோன்.



ஓட்டோக்களிலெல்லாம் சிறந்தது பாஸ்டாஜ் ஓட்டோர்தான். மணம் சிறந்தது, வாசனை மிக்கது, மூடியைத்திறந்ததும் பூந்தோட்டத்திலிருப்பதாகவே எண்ணுவீர்கள். எவ்வித மனோ நோயையும் போக்கவல்லதிவ்ய ஔஷதம்.
1 பாட்டல் விலை அணா 8.
6 பாட்டல் வாங்குபவர்களுக்கு ஒரு டேபிள் டைம்பீஸ் இனம்.
9 பாட்டல் வாங்குபவர்களுக்கு ஒரு வாட்டர் புரூப் ரைஸின் இனம்,
12 பாட்டல் வாங்குபவர்களுக்கு ஒரு கிராமபோன் இனம்.
கிராமபோன் ரிகார்டுகள் டஜன் 12 ரூபாயாகும். பாக்கிங் தபால் செலவு வேறு இந்த நல்ல சந்தர்ப்பத்தை இழந்து விடாதீர்கள் 1-மாதமட்டுந்தான்.
Universal Stores
2|3 Hazarimul Saha lane
Bandagat Salkia
Howrah.

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.
(1330ம்ஞு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி பி சேலவு ரூ. 0—5—0.
மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

# (Scientific Method and Ignorant Beliefs.)

# மெஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்.

"கடவுளும், பிரபஞ்சமும்" என்ற வியாசத்தின் மேல் எழும் பிரச்னை.

## மதங்களின் மூடக் கோட்பாடுகள்.

[தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

(9)

உலகில் முக்கியமான மதங்கள் நான்கு. அவையாவன:—1. இந்து மதம், அதாவது பிராமண மதம். 2. புத்தமதம், 3. கிறிஸ்துமதம், 4. மகமதியமதம், இந்நான்கு மதங்களும் மேற்கூறிய வரிசைப்பிரகாரமாகவே, உற்பத்தியாயின. இந்நான்கினுடைய மதக் கோட்பாடுகள் ஒன்று ஒன்றிலிருந்து பெறப்பட்டவாயினும், கால அளவில் வித்தியாசமடைந்துள்ளன. ஆதியில் பிராமணமதம் அதாவது வேதாகமம், இந்தியாவில் பரவியிருந்தது. அதிலிருந்து புத்தமதம் கிளம்பியது. யூதர்கள் மதம் (Jewish religion) ஈஜிப்ட் (Egypt)பாலஸ்தின்(Pslastine) முதலியபரவி வந்தது. அதிலிருந்து ஏசுவின் மதம் பெறப்பட்டது. யூதர்கள் மதத்தை ஆதாரமாகக்கொண்டு அதாவது பழய ஏற்பாட்டை கொண்டு (Old Testament] மகமதுநபி தனது மதத்தை ஸ்தாபித்தார். இவ்விதமாக தற்காலம் உலகில் பரவி இருக்கும் மதங்கள் அந்தந்தக்காலத்தில்ஒன்றின்பின் ஒன்றாக உண்டாயின. மெஞ்ஞான முறைப்படி விசாரித்ததிலிருந்து இந்தக்கால வரை ஏற்பட்டது.

இந்த மதங்களுக்கு வெவ்வேறு கோட்பாடுகள் உண்டு. ஆனால் ஒரு விஷயத்தில் மாத்திரம் இந்த நான்கு மதங்களும் ஒன்றெனக்கூறலாம். இந்த ஒரு இலக்கணத்தை பெற்று இருப்பதால்தான் இவைகள் மதங்களாக வழங்கப்படுகின்றன. அந்த குணம் யாதெனில் மறைவான கோட்பாடுகளை (Mysterious Doctrines] உடைத்தாய் இருந்தால் இந்நான்கு மதங்களும் மதங்கள் (Religions) என்பதற்கு பாத்திரமாகின்றன. மறைவான சித்தாந்தங்களை உடைத்தாய் இருத்தலால்தான் அவைகளுக்குள்ள சிறப்பும், மகிமையுமென அறிக. எவ்வளவு மறைவாக இருக்கின்றனவோ, அவ்வளவு பிரபல்யத்தை அடைகின்றன. இறந்த பிறகு துக்கமற்ற வாழ்வை அடையலாமென்ற கோரிக்கை மனிதனுக்கு ஆழ்ந்து கிடப்பதால் முக்திமேல் அவ்வளவு ஆசை உண்டாயிற்று. இந்நான்கு மதங்களும் முக்தி மார்க்கத்துக்கு வழிகாட்டிகளாகவே மதிக்கப்படுகிறது. பக்திமார்க்கம் (Faith) புத்த மார்க்கத்தில் இல்லை என்பார் சிலர். அது தவறு. மதவைராக்கியமுடையவர்கள் (Religious Bigots) அவ்வாறு கூறலாமேயொழிய அறிஞர்கூறார். புத்த மதத்திலும் பக்தி மார்க்கம் உண்டு. (Salvation by Faith) அதாவது பக்தியால் மோட்சம் பெறும் சித்தாந்தம் மகாயான (Mahayana) புத்தகத்தில் சிறந்ததோர் கற்பிதமாகும்.

முதலாவது இந்து; அதாவது பிராமணமதத்தை எடுத்துக்கொள்ளுவோம். அதன் முக்கிய சித்தாந்தக் கோட்பாடுகள் என்னவெனில் 1. கடவுள் ஒருவரோ பலரோ உண்டு, 2. அவரை பக்தியால் அறியக்கூடும். 3. அவரால் மோட்சம் நரகம் கிடைக்கும். 4. அவரவர் வினைக்கீடாக (Karma) அதாவது கர்மத்திற்கீடாக பலன் கிடைக்கும். 5. அந்தப் பலனாவது மறுபிறப்பில் அடையக்கூடியது (Rebirth) 6. சிற்சில யோக அப்பியாசத்தால் மோட்சம் பெறலாம். இந்த யோக மோக்ஷத்தை வேதாந்திகள் ஐக்கிய முக்தி அல்லது சிவன் முக்தி என்பார்கள். இந்தக் கோட்பாடுகள்தான் பிராமண மதத்தில் முக்கியமானவை.

இந்த இந்துமதக் கோட்பாடுகளை விஞ்ஞானமுறைகளாகிய பார்த்தல்பரீட்சித்தல் எனும் கருவிகளைக்கொண்டு அறியக்கூடியவைகள் அல்ல. இவை யாவும் மறைந்த விஷயங்களே. கடவுளை ஊனக்கண்ணால் பார்க்கக்கூடாதாம்! பக்தியுடையவர்களே ஞானக்கண்ணால் பார்க்கக்கூடுமாம்! கடவுள் என்னும் பொருள் மனத்திற்கும், வாக்குக்கும், காயத்திற்கும் எட்டாதாம்! 'கடவுள்' என்பதற்கே மறைபொருள் என்று அர்த்தமாம்! இரண்டாவது கடவுளை பக்தியால் அறியக்கூடுமாம்! பக்தி என்றால் விஸ்வாசம், விஸ்வாசத்தால் ஒருவரை அறியக்கூடும் என்றால் அது விளங்கவில்லை. அமெரிக்காவிலுள்ள கோவிந்தன் கோபாலன் என்ற இருமனிதர்களை 'பக்தியால்' எப்படி அறிவது? நம்மைப் போன்ற மனிதர்களை 'பக்தி' யால் அறியக்கூடாமல் இருக்கும்போது மனவாக்குக் காயத்திற்கு எட்டாத ஒன்றை விஸ்வாசத்தாலாகிலும் (Faith)அல்லது அன்பாலாகிலும் (Love) எப்படி அறியக்கூடும்? ஆதலின் கடவுளை பக்தியால் அறியக்கூடுமென்பது தூங்குமூஞ்சிகள் செய்யும் வாதமேயாகும், இதையும் மூடபக்தியில் சேர்க்கவேண்டியதே. மூன்றாவது கடவுளால் மோட்சம் நரகம், தத்தம் வினைக்கீடாக கிடைக்குமென்பதும் மூடச்சொற்களே. மோட்சமென்பதும், நரகமென்பதும் யார் பார்த்தார்கள்? எந்த பூகோள நூலில் கண்டுள? இந்த இடங்கள் எங்கே இருக்கின்றன? பூச்சிதின்ற புத்தகங்களில் [Moth Eaten) தான் நரகமோட்சமென வரையப்பட்டுள்ளதேயொழிய இன்னவை என்று தெரியக்கூடவில்லை. மெஞ்ஞான விசாரணைப்படி இவை இரண்டும் வெறுஞ்சொற்களே. ஐந்து கண்ணன் என்று சிறு குழந்தைகளை பயமுறுத்துவதைப்போல் நரகமோட்சமென்று பெரிய குழந்தைகளாகிய நம்மை பயமுறுத்த ஏற்பட்ட சொற்களாகும். நான்காவது அவரவர் வினைக்கீடாக பலன் கிடைக்குமாம்! அவரவர் வினையை யார் அளிக்கின்றார்கள் என்று தெரியவில்லை? ஒருவன் திருடினான் என்று வைத்துக்கொள்ளுவோம். அவனை இவ்வுலகில் தண்டிக்கின்றார்கள். இந்தத்தண்டனை மனிதர் கொடுக்கும் தண்டனை, அந்தந்த சர்க்கார் பினல் சட்டப்படி தண்டிக்கின்றார்கள். இது கடவுளால் கொடுக்கிற தண்டனை அல்ல. எத்தனையோ பேர் திருடி தண்டனை அடைவதில்லை. இவர்களை யார் தண்டிப்பது? எப்போது தண்டிப்பது? மறுஜன்மத்தில் தண்டிக்கப்படுவார்கள் என்றால் யார்பார்த்தது? யார் கணக்கெடுத்தது? ஜட்காவண்டி குதிரைகளெல்லாம் முன்ஜன்மத்தில் பாபம் செய்த மனிதர்களா? சுகமாக வாழும் பந்தயக்குதிரைகள் முன் ஜன்மத்தில் புண்ணியம் செய்த மக்களாவெனக்கேட்கின்றோம்? இதைத் தெரிந்து உரைக்க சக்தி அற்றவர்கள் எட்டிச்சுரைக்காய்க்கு உப்பு இல்லை என்று சொல்வதுபோலாம்! இவை இரண்டும் மூட சொற்களே. யோக்கியப் பொறுப்பை யுடையவர் யாரும் இந்தப் பொய் வார்த்தைகளை நம்பவாவது அல்லது நம்பும்படி செய்யவாவது துணியார். ஐந்தாவது மறுபிறப்பில் அனுபவிப்பார்களாம்! யார் அனுபவிப்பார்? இறந்தவன்தான் குஷ்டரோகியாகப் பிறந்தான் என்பதற்கு என்ன அத்தாட்சி? எந்த மனிதன் என்ன குற்றத்தைச்செய்து மறு ஜன்மத்தில் தரித்திரனாகப் பிறந்தான்? இறந்த பிறகு ஒருவன் பிறக்கின்றான் என்பதற்கு என்ன அத்தாட்சி? இரேகம்சாம்பலாகவாவது மண்ணாகவாவது போனபிறகு எது மறுஜன்மம் எடுப்பது? அவன் உயிரென்றால் அது எப்படி தெரியும்? யார் பார்த்தார்கள்? அல்லது யார் பரீட்சித்துப்பார்த்தார்கள்? மறுபடியும் பிறக்கும்வரை அந்த உயிர் எங்கு தங்கி இருந்தது? கதையில் சொல்வதுபோல் காடிப்பானையிலா செத்தவன் உயிர் தங்கி இருந்தது? இந்த மறுபிறப்புக்கதைகளை கேட்கும் குழந்தைகளும் சிரிக்கின்றன! (These are Stupid fictions pure and Simple] என்று சொல்லவேண்டும். அதாவது இந்த மறுபிறப்புக்கதைகள் Rebirth stories யாவும் வெறும் மூடமக்கள் கதைகளெனக்கருதல் வேண்டும். மெஞ்ஞான முறைப்படி விசாரித்து வந்ததில் 'கடவுள்' 'நரகம்' 'மோட்சம்' 'தர்மம்' 'முக்தி' முதலிய மத சித்தாந்தங்கள் யாவும் ருசுவில்லாத உத்தேசங்களெனப்படும். ஆங்கிலத்தில் இதனை (Unverified Hypothesis] என்பார்கள். அதாவது ருசுவற்ற கற்பனைகளெனப்படும். ஆனால் மெஞ்ஞானத்திலும் கற்பனைகளை உபயோகிகின்றார்கள். ஆனால் அவை ருசுவாகும் வரை வெறுங்கற்பனையாகவே மதிக்கப்படுகின்றன. எதுவும் ருசுவாகாவிடில் அவ்வித கற்பனைகளைத் தள்ளி விடுகிறார்கள். மெஞ்ஞான கற்பனை ஒன்றை எடுத்துக்கொள்ளுவோம்.

ஜீவராசிகளின் உற்பத்தை எடுத்துக்கொள்ளலாம். முதலாவது கற்பனை என்னவெனில் புல், பூண்டு, மிருகங்கள், நடப்பன முதலிய ஜீவன்கள் யாவும் சிருஷ்டி என்றோம். அந்த சிந்தனைக்கு ருசு ஏற்படாமையால், அதாவது யாரும் பார்த்ததில்லையாதலால் அந்தக் கற்பனையை தள்ளிவிட்டு பரிணாமம் அதாவது ஒன்றிலிருந்து வொன்று பெறப்பட்டதென்று சிந்தித்தோம். இது கற்பனா சித்தாந்தமே. ஆனால் இந்த பரிணாம சித்தாந்தத்திற்கு பல சாட்சியங்கள் இருக்கக்கண்டோம். கோடானகோடி வருஷங்களுக்கு முன்பு வாழ்ந்திருந்த உயிர்கள் தற்கால உயிர்களுக்கு மூதாதைகளாக இருப்பதை பூமியில் புதைக்கப்பட்டுள்ள செடிகளையும், எலும்புகளையும் பார்க்கலாம். நமது குதிரையின் மூதாதைகள் முதலில் 5 விரல், பிறகு 4 விரல், 3விரல், 2 விரல், கடைசியில் நமது கால குதிரைகளைப்போல் ஒரு குளம்பு (hoof) உடைய குதிரைகளாகபரிணமித்து, அதாவது மாறியதாகக்காணலாம். மேலும் ஒருவகைப் பிராணியை[species) மற்றொரு வகைப்பிராணியாக மாறும்படியாகச் செய்யலாம். காட்டுக்கோழியிலிருந்து [Wild fowl] மாறி பல் வேறுபட்ட நமது வீட்டுக்கோழிகள் பெறப்பட்டன. காட்டுப்புறாவிலிரு

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

# கடவுள் வெறியும், மதவெறியும்.

[தோழர் அ. இராகவன்]

(சென்ற வாரத்தொடர்ச்சி)

இவர் நமது இந்துசமயத்தில் தான்பகுத்தறிவிற்குப் பொருந்தாத புராணக்குப்பைகள் குவிந்து கிடக்கின்றன, பிறசமயத்தில் அவ்வொன்றும் கிடையாதென்றும் எண்ணியிருக்கின்றனர். இது முற்ற முற்றத் தவறேயாகும். இந்து மதம் புராணக்குப்பை மலைகளைக் கிளறி அதைத் தீயிட்டொழிக்க காலம் போதாதிருக்கிறது. ஆகையால் பிற சமயப் புராணக் குப்பைகளைப் பற்றிக் கவனிக்கச் சமயம் கிடைக்கவில்லையே யொழிய, பிறசமயத்தில் புரோகிதப் புல்லுருவிகளால் மக்களின் புத்திக்கும், யுக்திக்கும் விஞ்ஞான சாஸ்திரத்திற்கும், சரித்திரங்கட்கும் மாறுபட்ட பல கொள்கைகளை எழுதி மக்களின் பகுத்தறிவு வளரவிடாது தடுத்திருக்கவில்லையென்று எவரும் கூறமுடியாது. எடுத்துக்காட்டாக இஸ்லாமிய சமயத்திலே பகுத்தறிவிற்கு மாறான புராணக் குப்பைகளைக் கிண்டிக் கிளறி அவைகளை அக்கினி பகவானுக்கு அர்ப்பணஞ் செய்ய "தாருல் இஸ்லாம்" என்னும் அரிய பெரிய வாரவெளியீட்டின் வாயிலாகப் புரோகித சம்ஹாரரும், இஸ்லாமிய சுயமரியாதை வீரருமாகிய தோழர் தாவுத்ஷா பீ.ஏ. அவர்களும், அவர்களின் சகாக்களும் அரியதொண்டாற்றி, புரோகிதத்தையும், புத்திக்கும், யுக்திக்கும் பொருந்தாத நூற்களையும், பத்திரிகைகளையும், கொள்கைகளையும் ஒழித்து முஸ்லிம்களிடையே பகுத்தறிவை வளர்க்கப் பாடுபட்டு வருவதினாலே நம் "குடி அரசு" இதுவரையில் அதிகக் கவனம் செலுத்தவில்லையென்று கூறல் மிகையாகா. ஆனால் நம்மியக்கப் பகைவர்கள் இஸ்லாமியப் புராணக் குப்பைகளைப் பற்றிச் சுயமரியாதைக்காரர்கள் கிண்டினால் தங்கட்கு சித்தானந்தர், இராஜபால் முதலியோர்க்கு நேர்ந்த கதிதான் என்பதை யுணர்ந்தே இஸ்லாமிய விஷயத்தில் தலையிடுவதில்லை. வேண்டுமானால் இஸ்லாத்தைப்பற்றி எழுதிப் பார்க்கட்டும். அவர்களுக்கு சரியான புத்திகற்பிக்க இஸ்லாமிய வைதிகப் பத்திரிகைகள் தவறாது முன்வந்து சு. ம. காரர்களாகிய காபிர்களைக் கண்டகண்ட இடத்தில் கொல்லுங்கள். அப்பொழுது ஆண்டவன் உங்கட்கு மோட்சத்தின் வாயிலைத் திறந்துகொண்டிருப்பான் என்று எழுதி முஸ்லிம் பொது ஜனங்கட்கிடையே ஓர் கிளர்ச்சியை ஆரம்பித்துவிட்டால், இவர்கள் கதி அதோகதிதான் என்று பிதற்றிக் கொண்டிருப்பதை யாம் கண்டும், கேட்டும் வருகின்றோம். ஆனால் இம் மூடமாக்கள் நினைக்கிறபடி சுயமரியாதைக்காரர்கள் தங்களுக்கு யுக்தமாகத் தோன்றும் வழிகளில் பிரவேசித்துத் தொண்டாற்ற எந்த மனிதருக்கும், மதத்தார்க்கும், அரசாங்கத்தாருக்கும் பயந்தவர்களில்லையென்பதோடு எம் மதப் புராணக் கூளங்களையும் தகனஞ்செய்ய முனையும்பொழுது அம் மதங்களிலேயுள்ள பகுத்தறிவை வளர்க்க விரும்பும் பன்புள்ளார்கள் லட்சக் கணக்காக—இல்லை—கோடிக்கணக்காக எங்கட்கு ஆதரவு காட்ட தயாராக இருக்கிறார்கள் என்பதையும் அவர்களுடன் நெருங்கிப் பழகியும் அவர்கள் பத்திரிகைகளையும், நூற்களையும் வாசித்தும் அவர்கள் கூட்டங்களிற் போய் பிரசங்கித்தும் இன்னும் பல வேறு ஹேதுக்களைக் கொண்டும் அறிந்தேயிருக்கின்றோம். சிலர் இந்துமதத்தைப்பற்றிய சுயமரியாதைக்காரர்கட்கு நன்கதியாயிருக்கும் பொழுது ஏனைய சமயங்களைப்பற்றி அவர்கட்கு என்ன தெரியப்போகின்றது என்று கூறுகின்றார்கள். இஃதும் சுத்தத் தவறேயாகும். ஏனைய இயக்கங்களைவிட சுயமரியாதை இயக்கத்தில்தான் உலகத்திலுள்ள பல்வேறு சமயக் கொள்கைகளையும் நன்கு அறிந்தவர்களிருக்கின்றார்கள். கூடிய சீக்கிரம் சுயமரியாதை இயக்கத்தார் சர்வமத மூடக் கொள்கைகள் என்றொரு நூல் எழுதி அதில் எல்லாச் சமயங்களின் மூடக் கொள்கைகளையும் வெளியிடுவார்கள். அப்பொழுது அறியாமையால் பிதற்றும் நண்பர்கள் உண்மையை உணர்ந்துகொள்வார்கள். சில அறிவிலிகள் முஸ்லிம்களது தனவான்களிடம் பணஉதவிபெற்று இந்துமதத்தைத் தாக்கிக்கொண்டு இஸ்லாத்தைப்பற்றி யொன்றும் கூறாது மௌனஞ் சாதிக்கின்றார்களெனக் கூறிக் குழறிக்கொட்டுகின்றார்கள். இவைகளெல்லாம் வெறும் புரட்டும் தன்மதப் பக்ஷத்தின் பேரில் கொண்ட அழுக்காறுமாகுமேயொழிய வேறில்லை. உதாரணமாகச் சென்ற ஆகஸ்ட்டு மாதம் வெளியான சைபுல் இஸ்லாம் பத்திரிகையில் தோழர் மௌல்வி எஸ். எஸ். அப்துல் காதிர் சாஹிப் பாகவி என்பார் குத்புகறையகம் முஹய்யத்தீன் அப்துல்காதிர் ஜீலானி அவர்களின் வரலாற்றை எழுதும்பொழுது அன்னார் செய்த அற்புதமென்று பின்வரும் விஷயத்தை எழுதியுள்ளார். அவை வருமாறு;—

“........பக்தாத் அரசர் அவர்கள் பத்து வயதுப் பாலகராயிருந்த காலத்திலேயே மலக்கு (தேவதூதர்)களைப் பார்ப்பவர்களாக இருந்தார். அவர்கள் பாடசாலைக்குப் படிக்கப் போகும்போது அவ்வமரர்கள் “அல்லா(ஹ்)வுடைய வலிக்கு வழி விடுங்கள்” எனக் கூறுவதை அந்நாயகர் அவர்களுக்கு கலிர் என்ற ஒரு ஊழியரிருந்தார். அவரை நோக்கி நாயகர் அவர்கள் நீர் மோசூல் நகருக்குச் செல்க! உமக்கு அவ்விடத்தில் சந்ததியுண்டாகும். அஜ்மி நாட்டைச் சேர்ந்தவரும், பக்தாதில் வசிப்பவருமான அலி என்னும் நாமம்கொண்ட அந்தகர் ஒருவர் அக்குழந்தைக்குக் குர்ஆன் ஓதிக் கொடுப்பார். அக்குழந்தை ஏழாம் பிராயத்திலேயே அக் குர்ஆனையும் மனனஞ் செய்து கொள்ளும் நீர் 91 வருஷம் 1-மீ 7 தினங்கள்வரை கஷ்ட நஷ்டமில்லாமல் வாழ்வாய்” பாபிலோன்பட்டணத்தில் மரிப்பாய் எனக்கூறி அனுப்பிவைத்தார்கள். இவ்விஷயம் முழுதும் எவ்விதமாறுதலுமின்றி நடைபெற்றது.

ஒரு ஸ்திரி தன் புதல்வனை அழைத்துவந்து நாயகமே! என்னுடைய இப் புதல்வன் தங்கள்மீது மிக மிகப் பற்றுடையவனாக இருக்கிறான் எனக்கூற அதற்கவர்கள் அந்த ஸ்திரியின் விருப்பத்திற்கிணங்கி அப்பையனை ஏற்றுக்கொண்டு தெய்வ வழிபாட்டில் பழக்கிவந்தார்கள். சில காலத்திற்குப்பின் தன் மகனைக்காண அத் தாயார் வந்தபோது தன் புதல்வன் கோதுமை ரொட்டித் துண்டை உப்புத் தண்ணீரில் புரட்டிப் புசிக்கவும், வியாதியஸ்தனைப் போல் மஞ்சணிந்து மெலிந்திருக்கவும் கண்டனள். பின்னர் கௌதுல் அஃலம் அவர்களிடம் செல்லவே அவர்கள் பொரித்த கோழி இறைச்சியை அருந்தி அதன் எலும்புகளை ஒரு பாத்திரத்தில் போட்டு வைத்திருக்கக்கண்டு மனம் பொறாமல் “நாயகமே! தாங்களோ! பொரித்த இறைச்சியைப் புசிக்க என் பையன். கோதுமை ரொட்டியைப் புசிக்கிறான்” என வினயமாய்க் கேட்க, நாயகம் அவர்கள் அவ் வெலும்புகளின்மீது தமது திருக்கரத்தை வைத்து “இத்துப்போன எலும்புகளை உயிர்ப்பிக்கிற அல்லாஹ் வின் கட்டளைப்படி எழுந்திரு” எனத் திருவாய் மலர்ந்தருளவே அது உயிர்பெற்றெழுந்து கூவிற்று. பின்னர் அந்த ஸ்திரீயை நோக்கி” உன் புத்திரன் இந்த நிலைமைக்கு வந்தபின் தனக்கிஷ்டமானதை அவன் அருந்தலாம்” என அறிவித்தார்கள்.

ஒரு நாள் நாயகம் அவர்கள் பிரசங்கஞ்செய்துகொண்டிருந்தபோது ஒரு பருந்து அச் சபைக்குப் பறந்துவந்து கூச்சலிட்டது. அதனால் அச் சபையினருக்கு பிரசங்கம் கேட்பது கஷ்டமாக இருந்தது. உடனே அவர்கள் “காற்றே! அப் பறவையின் தலையை வாங்கு” எனக் கட்டளையிட்டார்கள். உடனே அப் பறவை தலையறுந்து உடல் வேறாகப் பிரிந்து உயிர்துறந்தது. பின்னர் நாயகம் அவர்கள் பிரசங்க மேடையை விட்டு வந்து அப் பறவையின் உடலையும், தலையையும் எடுத்து இறைவனின் நாமத்தைக் கூறி ஒட்டினார்கள். உடனே உயிர்பெற்று அக் கூட்டத்தினர் யாவரும் பார்க்க அது பறந்து சென்றது. இதுபோல் எத்தனையோ முறை உயிர் கொடுத்ததாகச் சரித்திரம் கூறுகிறது. விரியுமென அவைகளை விடுத்தனம்.

என்று எழுதுகிறார். பகுத்தறிவு இயக்கம் உலகமெங்கும் தாண்டவமாடும் இக் காலத்தில் ஒரு பத்திரிகை இத்தகைய விஷயத்தை மககட்கூட்டத்தினர்களுக்கிடையே பிரசாரம் பண்ணவந்தது விந்தையினும் விந்தையே. ஆனால் இவைகளையெல்லாம் ஆண்டவனின் அருள், பெரியார்களின் அற்புதம் என்றெல்லாம் எண்ணியிருக்கும் மதப் பித்தம்கொண்ட மக்களிடம் பகுத்தறிவிற்கு முற்ற விரோதமான புராணப் புழுகுகள் என்றுகூற ஆரம்பித்தால் நாஸ்திகப் பட்டமும், சில காலம் தம் பத்திரிகையில் வசைப் புராணம் இடைவிடாது பாடிக்கொண்டிருப்பதும் சகஜம். மதப் பைத்தியம்பிடித்த மக்களுக்குப் பகுத்தறிவுக்கண் குருடாய், பகுத்தறிவுக் காது செவிடாய்விடுகின்றது. சில சமயங்களில் அஜங்களே போன்று நடந்துவிடுகின்றனர்.

முஹம்மத் நபி அவர்களிடம் ஒரு நாளிரவு அவர்களின் எதிரிகள் வந்து நீர் உண்மையாக ஆண்டவனுடைய தூதராயிருந்தால் சந்திரனை இரு பிளப்பாகும்படி செய்து எங்களுக்குக் காட்டுமென்று கூறினார்கள். உடனே நபி அவர்கள் ஆண்டவனிடம் முறையிட்டார்கள். அந்தக் க்ஷணமே சந்திரன் இரண்டு துண்டாய்ப் பிளந்து பின்பு ஒன்று சேர்ந்துவிட்டது.

ஒரு சமயம் முஹம்மத் நபியவர்களின் கூட்டத்தார்களுக்கும், அவர்களின் பகைவர்களான அரபிக் கூட்டத்தார்களுக்கும் சண்டை ஆரம்பித்தது. அப்பொழுது இரு படைகளுக்குமிடையே ஒரு அகழ் வெட்டும்படி முஹம்மத் நபி தம் ஆட்களுக்குக் கட்டளையிட்டார்கள். அவர்களெல்லோரும் அகழ் தோண்டினர். முஹம்மத் நபியும் அவர்களுடன் அகழ் தோண்டினர். மூன்று நாளாக இவ்வேலையில் எல்லோரும் ஈடுபட்டிருந்ததால் சாப்பாடு தயார் செய்ய முடியாமற் போயிற்று. முஹமமத் நபி அவர்களுக்கும், அவர்கள் தோழர்கள் பல

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க)

# "சமதர்ம முரசு"

## மன்னனுக்கும்-மாடு மேய்ப்போனுக்கும் வயிற்றுப்பசியில் பேதமுண்டோ?

### பொதுவுடைமையான பூமியைத் தனிவுடைமை யாகக்கொள்ள தனிகனுக்கென்ன உரிமை?

(தோழர் A. இரத்தினசபாபதி)

(5)

"மன்னர் முதல், மாடு மேய்ப்பவன் ஈறாகவுள்ள எல்லா மனிதர்களுக்கும் வயிற்றுப்பசி ஒரே தன்மையானதே" என்பதைச் சென்றவாரம் விளக்கினோம். மனிதர்களது தொழில் பற்றி அந்தஸ்தில் பேதமிருப்பினும், அப்பலதிறப்பட்ட அந்தஸ்திலுள்ளோருக்கும் இயற்கையின்படி ஏற்படும் பசியால் பலதிறப்பட்ட அந்தஸ்துப் பேதமிருப்பதில்லை யென்பதையும் கண்டோம். இவ்வாறு பசிக்கொடுமை உலகில் மக்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இயற்கையாகவே ஏற்பட்டிருப்பதால், உலகில் மக்களாகப்பிறந்த மனிதன் ஒவ்வொருவனும் தனது இயற்கையான வயிற்றுப் பசியை அவ்வக்காலங்களில் தீர்த்துக் கொள்ள வேண்டியவனாகவிருக்கிறான். இது வரையில் எல்லோரும் எவ்வித ஆட்சேபனையுமின்றி ஒத்துக் கொள்வர். ஆனால், தேசத்தின், அல்லது உலகத்தின்,

"இன்றைய நிலைமை"

என்ன என உற்றுணர்வோமானால் நாம் காண்பது என்ன? மனிதர்களுக்குப் பசி உண்டாவதியற்கை; ஒவ்வொருவரும் அதனைத்தீர்த்துக் கொள்ள வேண்டியதும் அவசியம். அதற்காக எப்பாடேனும் படவேண்டும். ஆனால், எப்பாடு பட்டபோதிலும், அது சுகமானதாயிருப்பினும், கஷ்டமானதாயிருப்பினும், மனிதர்களது பசிப்பிணி முற்றிலும் சரியான காலத்தில் தீர்க்கப்படவேண்டும். இதனை மறுப்பவர் எவருமில்லை. ஆனால் தேசத்தின் இன்றைய நிலைமையில் நடைபெறுவதென்ன? நாம் சென்ற கட்டுரையில் விவரித்தபடி, கோடிக்கணக்கான மக்கள் ஒருவேளை கூழுக்கும் வழியற்று, நடைப்பிணங்கள் போன்று காலங்கழிக்கின்றனர், என்பது உண்மையல்லவா?

எத்தனையோ மக்கள் பசியின் கொடுமையால் அலறும் கூக்குரல் இந்தியாவில் எங்கும் பரிதாபகரமாகக்கேட்கிறது என்பதை யாராவது மறுக்க முடியுமா? இயற்கையான பசிக்கு உணவிட்டு அதனை ஆற்றிக் கொள்ள வேண்டுமென்பதை இந்தியர் அறிய மாட்டார்களா?—அல்லது, இயற்கையின்படி இப்பசிப்பிணியால் வாட்டப்படுவோர், மனித சமூகத்தைச் சேர்ந்தவர்களில்லையா? ஒவ்வொரு மனிதனும் இயற்கைப்பசியைத் தணித்துக் கொள்ள வேண்டியது அவசியமாயிருக்க, இந்தகோடிக்கணக்கான மக்கள், அவ்வாறு தங்கள் பசியைத்தணித்துக் கொள்ளாமல் "பசி, பசி" யென்று கூக்குரலிடுவானேன்? என்பவைதான் நமது கேள்விகள்.

உரிமையும், கடமையும்.

மனிதர்களாகப்பிறந்த ஒவ்வொருவருக்கும் "பசி" இயற்கையாய் உண்டாகிறதென்பது நிச்சயமாகத்தெரிகிறது; அதைத்தீர்த்துக் கொள்ளவேண்டுமானால் "உணவு" உட்கொண்டு பசியாற வேண்டுமென்பதையும் ஜனங்கள் அறிந்தேயிருக்கிறார்கள், பசியைத்தீர்த்துக் கொள்ள மனிதனென்று கூறிக்கொள்ளும் ஒவ்வொருவனுக்கும் உரிமையும், கடமையுமுண்டு. இந்நிலைமையில் கோடிக்கணக்கான மக்கள் "ஐயோ,! பசி,! பசி!!" யென அலறுகின்றனர்—இவற்றிலிருந்து தெரிவதென்ன? "பசிஉண்டானவுடன் அதைத்தீர்த்துக் கொள்ளத்தகுந்த உணவு இம்மக்களுக்குக் கிடைக்காதிருக்கிறது" என்பது தெளிவாய் விளங்குகிறதல்லவா? இனி இது ஏன்

இப்படி?

என ஆராய்தல் வேண்டும். அன்பர்கள் இங்கு கருத்தூன்றிக் கவனித்துணர விரும்புகிறோம்.—ஒரு வீட்டிலுள்ளோர் அனைவரும் பட்டினிகிடப்பார்களாயின், அவ்வீட்டில் உணவுப்பொருளில்லை எனக்கொள்ளுகிறோம். அதுவே போன்று ஒரு நாட்டிலுள்ளோர் எல்லோருமே பட்டினிகிடப்பார்களானால், அந்த நாட்டிலேயே உணவுப்பொருளில்லை எனக்கொள்ளலாம். ஆனால் நாட்டிலுள்ள ஒரு சிலர் வயிறார உணவுண்டும் மற்றவர்கள் உணவின்றி பட்டினிபோடும் இருப்பார்களானால், அந்த நாட்டிலேயே உணவுப் பொருளில்லை யெனக் கூற முடியாதல்லவா? பசியைத்தீர்த்துக்கொள்ள ஒவ்வொருவனுக்கும் உரிமையும் கடமையுமிருக்கிறது. பசியைத்தீர்க்கும் சக்தி பெற்றுள்ளது உணவுப் பொருளகள். ஆகவே மனிதனது பசியும், அதனை ஆற்றும் உணவுப்பொருளும் நெருங்கிய சம்பந்தமுடையவையாகின்றன. எனவே, எங்கு பசி என்னும் உணர்ச்சி ஏற்படுகிறதோ, அங்கு உணவுப் பொருள் சேர்ந்தாக வேண்டும். இதுதான் இயற்கையான நியாயமாகும். ஆனால் அவ்வுணவுப் பொருள் பசியுள்ள இடத்திற்குச்செல்லவொட்டாதபடி பலவந்தமாகத்தடை செய்யப்பட்டிருக்குமானால் அது அவ்விதம் பசியுள்ளவிடத்தை நாடிச் செல்ல முடியாது. இதனை நம் நாட்டுச்

"செல்வந்தனும் ஏழையும்"

என எடுத்துக் கொண்டு பார்ப்போமானால் நன்கு புலனாகி விடும். இந்நாட்டில் ஏராளமான உணவுப் பொருள்கள் உண்டாகின்றன. அவை இந்நாட்டிலுள்ள 35 கோடிமக்கள் அனைவரது பசியையும் அகற்றப்போதுமானது. மனிதனது பசியைத் தீர்க்கும் உரிமையும், சக்தியும் உணவுப் பொருள்களுக்கு உண்டாதலின் இந்நாட்டில் விளையும் உணவுப் பொருள்களனைத்தும், இந்நாட்டு மக்களனைவரது பசியையும் ஆற்ற வேண்டியது நியாயம். ஆனால் அவ்வாறு இந்நாட்டு மக்கள் எல்லோரது பசியும் ஆற்றப்படவில்லை யென்பதை நாம் அறிகிறோம். ஆற்றுவதற்குப் போதுமான உணவுப் பொருள் இங்கேயே இருக்கிறதென்பதையும் அறிகிறோம். ஆனால் அந்தப் பசியாற்றும் உணவுப் பொருளை, ஒவ்வொரு மனிதனும் இயற்கைப்படி அடைய உரிமையும், கடமையும் பெற்றுள்ள உணவுப் பொருளை, அம்மனிதர் சிலர் அடையமுடியாதபடி ஏதோ ஒன்று அவர்களைத்தடுத்து நிற்கிறது. அதன் தடுப்பினால் தான் பசித்தமக்கள் அதனைப்பெற முடியவில்லை. உணவுப் பொருள்கள் தாங்களாகவே, பசிப்போரிடம் போகாமல் நின்று கொள்ளும் தன்மை யுடையனவாயில்லையாகையால், யாருடையவோ, அல்லது எதனுடையவோ பலவந்த சக்தியால் அவ்வுணவுப் பொருள்கள் பசியுள்ளவிடத்திற்குச் செல்வது தடைபடுத்தப் படுகிறது என்பது நன்கு புலனாகின்றதல்லவா? அங்ஙனமாயின், பசியை ஆற்றும் உணவு, அதற்குபயோகப்படா வண்ணம் தடைப்படுத்தி நிற்பது யார்? அல்லது எது? என்று பார்க்கில் அங்கு பணக்காரனும், பணக்காரத்தன்மையும், நிற்பதைக் காணலாம்.

ஒரு கிராமத்தில் விரல் விட்டு எண்ணிவிடத்தக்க அளவு பணக்காரர்கள் நிலங்களைத் தாங்கள்சொந்தமாகவைத்துக் கொண்டு, அதன் மகசூலைக்களஞ்சியங்களில் சேர்த்து வைக்கின்றனர். ஆனால் அதே கிராமத்தில் ஆயிரக்கணக்கான பல ஏழை மக்கள், அத்தனவந்தர்களிடம் கூலி வேலை செய்கின்றனர். அவர்களுக்குக் கொடுக்கப்படும் கூலியோ, அவர்களது குடும்பத்தின் ஒரு வேளைக் கஞ்சிக்கும் காணாததாயிருக்கிறது.—அவர்கள், இரவும் பகலும் பட்டினி கிடக்க நேரிடுகிறது. பத்துப்பேர்கள் உண்ணத்தக்க உணவை, இரண்டு பேர்கள் மாத்திரம், கைக்கொண்டு, தாங்கள் தின்றது போக மீதந்தை ஒருவருக்கும் கொடாமல் சேமித்துப் பத்திரப்படுத்திவிடுவாரானால், மீதியுள்ள அந்த எட்டுப்பேர்களும் உணவின்றித்தவிப்பார்கள் என்பதில் என்ன தடை? அதே போன்று ஓர் கிராமத்திலுள்ள நிலத்தில், அக்கிராமத்தினர் எல்லோருக்கும் போதுமான உணவுப் பொருள்கள் உண்டாக்கப் படுகின்றன. அவ்வுணப் பொருள்களை அக்கிராமத்தினர் எல்லோரும் சமபாகமாகப்பிரித்துக் கொள்வார்களானால் அங்குள்ள ஒருவரும் பசியால் திண்டாட மாட்டார்கள். ஆனால் அப்படிக்கின்றி, அம்மக்கள் எல்லோருக்கும் போதுமான அவ்வுணவுப் பொருள்களிற் பெரும்பகுதியை ஒருசிலர் மாத்திரம் தங்கள் வீடுகளில் கொண்டு சேமித்து வைத்துக் கொள்வார்களானால் மற்ற பெரும்பாலான மக்கள் வயிற்றுப் பாட்டிற்குத் திண்டாடாமலென்ன செய்வார்கள்?

அரசாங்கத்திற்குப் பயந்து அவ்வேழைமக்கள் தங்கள்கையிற்கிடைத்ததைக் கொண்டு, கால் வயிறு கஞ்சி குடித்து, ஓலைக்குடில்களில்வசித்துக், கந்தையுடுத்திக் கஷ்டத்துடன் காலந்தள்ளுகிறார்கள். பணக்காரனும், இந்த ஏழை மக்களின் உழைப்பால் கிடைத்த தானியத்தைக் களஞ்சியத்தில் நிரப்பி வைத்துக்கொண்டு இரண்டு வேளை காபி பலகாரமும், இரண்டு வேளைப் பரமான்னமும், பாலும் பழமும், சித்திரான்னங்களும் அருந்தி, பட்டாடை புனைந்து, மெத்தை வீட்டில், ஸ்பிரிங் கட்டிலில், வெல்வெட் மெத்தையோடு நித்திரை செய்து சுகிக்கிறான்.

மழையற்று, கிராமத்தில் விளைவற்றுப்பஞ்ச மேற்பட்ட போதிலுங்கூட இந்தச் செல்வ வந்தனை அப்பஞ்சம் ஒன்றும் செய்யப் போவதில்லை. ஆனால், நல்ல நாளிலேயே கால் வயிற்றுக்கஞ்சியுடன் காலந்தள்ளிய பெரும்பாலான ஏழைமக்கள் என்செய்வார்கள்? பானையில் தானியமில்லாமையால் அவர்கள் வீட்டில் அடுப்புகளில் பூனை உறங்கும். வயிற்றுப் பசி வாட்டிவதைக்கும்; காய்களையும் சருகுகளையும், வேர்களையும் அவர்கள் தின்று அவதிப்பட வேண்டியதாகிறது; அவர்கள் வீட்டுப்பக்கத்துக் குழந்தைகள் பாலுக்காகக் கதறுகின்றன, தாயாரிடமோ பால் கிடையாது, இரத்த ஓட்டமே வற்றிவிட்டது. அந்த ஏழைக்குடியானவன் வீட்டில் தரித்திரம் தாண்டவமாடுகிறது. நோய், மேவிடுகிறது. பசிப்பிணி வாட்டி வதைக்கிறது. இடுப்பில் கட்டியிருந்த ஒற்றைவஸ்திரமும் கந்தல் கந்தலாய் போய்விட்டது; குடியிருக்கும் குடிசையோ, பிரிந்து புதஓலை

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

# ராமசாமி மாளிகையில் சீர்திருத்தத் திருமணம்.

## 15 நிமிஷத்தில் திருமண நிகழ்ச்சி.

## திருமதி நாகம்மாள் தலைமைவகித்தார்.

### பிரபலஸ்தர்கள் விஜயம்.

12—9—32-ந் தேதி திங்கட்கிழமை இரவு 9-30 மணிக்கு ஈரோடு கோர்ட்டு வீதி திரு. ஈ. வெ. இராமசாமியவர்களின் மாளிகையில் திருமதி ஈ. வெ. ரா. நாகம்மாள் அவர்களின் தலைமையில் இராமநாதபுரம் திருப்பத்தூரைச்சேர்ந்த 'தென்மாப்பட்டு' சமதர்ம செந்தமிழ் கலாசாலை ஆசிரியர் திரு சி. முருகன் அவர்களுக்கும், பாலக்காடு திருமதி செல்லம்மாள் அவர்களுக்கும் சீர்திருத்த சிக்கனத்திருமணம் இனிது நடைபெற்றது. திருமணத்திற்கு உள்ளூர் பிரபலஸ்தர்களும், வியாபாரிகளும் கௌன்சிலர்களும் பெண்களுமாக 200 பேர்களுக்கு மேல் விஜயம் செய்திருந்தார்கள். அவர்களில் முக்கியமானவர்கள்:—

திருவாளர்கள் ஈ. வெ. கிருஷ்ணசாமி—ரங்க நாயகி அம்மாள், ஈ. வெ. நஞ்சப்ப செட்டியார், எம். சிக்கைய நாயக்கர்—கிருஷ்ணம்மாள், எம். எஸ். முத்துகருப்பஞ் செட்டியார், எஸ். இராமசாமி நாயக்கர்—கண்ணம்மாள், வி. வி. சி. பெரியசாமி முதலியார், அ. கொ. இராமசாமி நாயக்கர்—வெங்கட்டம்மாள், ஈரோடு முனிசிபல் ஆபீஸ்காரியதரிசி இராமசாமி முதலியார் அவரது மனைவியார், கேசவலால் காளிதாஸ் ஸேட், மஹாஜன ஹைஸ்கூல் தமிழ் பண்டிதர் தெய்வசிகாமணிக்கவுண்டர், உ. கந்தசாமி, பாபுசாமி, எஸ். வி. லிங்கம், பத்திரையா — கிருஷ்ணவேணியம்மாள், என். பி. காளியப்பன்—செல்லம்மாள், ஆர். எல்லநாயக்கர், என். கரிவரதசாமி, நாகலிங்கம், ஏ. இரத்தினசபாபதி—அன்னபூரணி, ஆர். டி. எல்லநாயகம், லண்டன்மிஷன்ஸ்கூல் ஹெட்மாஸ்டர் துரைசாமி, எஸ். இராஜு ஆர். செலமேலு-குப்பம்மாள், டாக்டர் கிருஷ்ணசாமி, குட்டிசாமி மன்றாடியார் பாலக்காடு, பரமசிவம் பாலக்காடு, கண்ணப்பர் சிறுவயல், ஜெகதீசன்—சென்னம்மாள், வி. லட்சுமி அம்மாள், ரங்கம்மாள், ஜேம்ஸ், கே. கே. லட்சுமி அம்மாள், முத்தலீப், மற்றும் பலருமாவர்.

திருமணத்திற்கு திருமதி ஈ. வெ. ஆர். நாகம்மையார் அவர்களைத் தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொள்ளு முகத்தான் திருமதி ஆர். அன்னபூரணியார் பேசுகையில் 'பெரியோர்களே! சீர்திருத்தத்திருமணத்தின் அவசியத்தைப்பற்றி அறிஞர்களாகிய உங்களுக்கு அதிகம் கூற நான் விரும்பவில்லை. நம் பழந்தமிழர்கள் எவ்விதச்சடங்குகளுமின்றி மணமுடித்து மனமொத்த தம்பதிகளாய் வாழ்ந்தார்கள். பின்னரேற்பட்ட ஆரியப்பித்தால் எண்ணற்ற சடங்காசாரங்கள் நமது மனத்தில் இடம்பெற்றன. இப்பொழுதும் நமது தன் மதிப்பியக்கத்தின் முயற்சியால் நாட்டில் எங்கும் சீர்திருத்தத்திருமணங்கள் மிகுதியாக நடைபெறுகின்றன. அத்தகைய முறையில் நடைபெறும் திருமணங்களில் இன்றுஇங்கு நடைபெறப்போகும் திருமணமும் நடைபெறுமென்பதைத் தெரிவிக்க மகிழ்வடைகிறேன். தாலிகட்டும் வழக்கம் இங்கு கைவிடப்படும். இன்னும் நம் தமிழ் நாட்டு இளைஞர்களும், யுவதிகளும் இத்தகைய சிக்கனமான சீர்திருத்தத்திருமணமுறைகளையே கைக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு இம்மண வைபவத்தைச் சிறப்புற நடத்தித்தரவல்ல திருமதி ஈ. வெ. ஆர். நாகம்மையார் அவர்களை இதற்குத்தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்' என்று குறிப்பிட்டார்,

பின்னர் திருமதி ஈ. வெ. ஆர். நாகம்மையார் அவர்கள் அக்ராசனம் வகித்தார்கள். திரு ஏ. இரத்தினசபாபதி அவர்கள் எழுந்து சபையோருக்கு மணமக்களை அறிமுகப்படுத்தி வைத்தார். திருமண அறிக்கையில் கண்டிருந்தபடி சரியாக 9-30 மணிக்கு மணமகன் திரு. சி. முருகன் அவர்கள் எழுந்து 'பெரியோர்களே! சிறியேனைப்பற்றி இங்குள்ளோருக்கு அதிகம் தெரியாது; எனினும் எனது நண்பர் திரு. இரத்தினசபாபதியவர்கள் உங்களுக்குக்கூறியவற்றால் நான் தென்மாவை நகரத்தில் தற்சமயம் வசித்துவருபவனென்பதைத் தாங்களறிவார்கள். எனது பிறப்பிடம் நாகர் கோவிலாகும். நமது நாட்டிலுள்ள அடிமை வாழ்விற்கும்; அந்தகார இருளுக்கும் நமது மக்களின் கண்மூடித்தனமும், பெண்மக்களின் அடிமை வாழ்க்கையுமே காரணம் எனச்சிறியேன் கண்டு கொண்டேன். எனவே இயன்ற வரையில் தாழ்த்தப்பட்டோருக்கும் பெண்டிர் சமூகத்திற்கும் உழைப்பதேகடமையெனக்கொண்டுஇயன்ற அளவில் தொண்டாற்றி வருகிறேன் நான் இப்பொழுது மணந்துகொள்ளவிருக்கும் திருமதி செல்லம்மையார் அவர்களை உங்கள் முன்னால் எனது துணைவியாகப்பகிரங்கமாக ஏற்றுக்கொள்வதுடன் எனது வாழ்நாள் முழுவதிலும் எனக்குள்ள எல்லா உரிமைகளிலும் பங்கு கொடுத்து நேர்மையுமுறையில் நடத்துவதோடு எங்களாலியன்ற அளவு நாட்டிற்காக உழைப்போம் எனவும் உறுதிகூறி இதற்கறிகுறியாக இம்மலர் மாலையை இவ்வம்மையாருக்குச் சூட்டுகிறேன், எனக்கூறிமாலையிட்டார். பின்னர் பெருத்த கரகோஷத்தினிடையே மணமகளும், மணமகனுக்கு மாலை சூட்டினர்.

பின்னர் திருமணத்தைப்பொறுத்து திரு. ஈ. வெ. கிருஷ்ணசாமியவர்கள் பேசுகையில் இம்மாதிரி சீர்திருத்தத்திருமணங்கள் நம் நாட்டில் நடைபெறவேண்டியது மிகவும் அவசியமென்றும் அம் முறையில் இம்மணத்தை முடித்த மணமக்களைப்போற்றுவதாயும், இன்னும் வாலிபர்களெல்லோரும் இம்மாதிரி மணங்களையே நடத்தவேண்டுமென்றும் அதற்குப்பெரியோர்களும் ஒத்துழைத்து ஆதரவு காட்டவேண்டுமெனவும் குறிப்பிட்டார்,

அதன்பின்னர் திரு. முத்துக்கருப்பஞ்செட்டியாரவர்கள் 'பெரியோர்களே இம்மாதிரி திருமணங்கள் இந்நாட்டிற்கு புதியதாக இதுசமயம் காணப்பட்டாலும் இது நம் நாட்டிற்குப்புதியதல்ல. நம் பழந்தமிழர் கொள்கையையே இது வாகும். இடையில் வந்த ஆரியரின் சூழ்ச்சியால் நாம் ஏமாற்றப்பட்டோம். எனவே இப்பொழுது நடந்த திருமணம் நம் பண்டையத்தமிழர்களின் கொள்கைகளுக்கொப்பானதேயன்றி தற்காலத்தில் நடைபெறும் ஆரியக்கொள்கைகளின் திருமணமல்லவென உறுதியாகக் கூறுவேன். இம்மாதிரியே தகுந்தவயதடைந்த மணமக்கள் மணம் புரிந்து வாழ்க்கை நடத்தினால் திடகாத்திரமான சந்ததியாரைப்பெறலாம். நாடும் க்ஷேமமடையும் என்று பேசினர்.

இறுதியாக திரு. ஏ. இரத்தினசபாபதியவர்கள்பேசுகையில் குறிப்பிட்டதாவதுசரியாக9-30 மணிக்குஆரம்பிக்கப்பட்ட இத்திருமணம் நன்கு நடைபெற்று அத்துடன் இருபெரியாரின் உபந்யாசங்களும் சேர்ந்து 15 நிமிடங்களில் முடிவெய்தியுள்ளன. இவ்வளவு விரைவில் இத்திருமணம் எவ்வகை ஆடம்பரமுமின்றி இனிது நடந்தேறியது நம் யாவர்க்கும் மகிழ்ச்சியளிக்கத்தக்கதாகும். இத்துடன் இன்னும் இம்மணத்தில் குறிப்பிடத்தக்க விஷயமென்னவெனில் மணமகன் எனது கடிதத்தின் குறிப்பிற்கிணங்கி இவண் வந்து சேர்ந்தது நேற்றிரவேயாகும். இன்று காலை 9-மணிக்குமேல் மணமகனும், மணமகளும் ஒருவரையொருவர் நேரில் பார்த்து திருப்திசெய்து கொண்டனர். அடுத்த ஒருமணி நேரத்திற்குள் திருமணம் உறுதி செய்யப்பட்டது. அதுவும் இன்றிரவே திருமணத்தை நடத்திவிடுவதென ஏற்பாடு செய்தோம். எனவே முற்பகல் 11-30 மணிக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டு அவசியமான சாதனங்களுடன், இப்பொழுது இத்திருமணம் இனிது நடை பெற்று முடிந்திருக்கிறது. விவாகம் என்பது என்னவோ தெய்வாம்சம் பொருந்தியதென எண்ணி வேண்டாத பொருத்தங்கள் பார்த்து, என்னென்னவோ செய்து ஆடம்பரமாக நடத்தினால் தான் திருமணம் என்பது பொருந்தும் என எண்ணியிருக்கும் நம்மவர்கள், இம்மணத்தின் காலச்சுருக்கத்தையும், சிக்கனத்தையும் கவனித்து கைக்கொள்ள வேண்டியது அவசியமாகும், மற்றும் தாலிகட்டும் வழக்கம் இங்கு கைவிடப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும். பெரிய பணச்செலவில் செய்யும் திருமணங்களையும், பலவகைப் பொருத்தங்களும், நட்சத்திரங்களும், ராசிகளும் பார்த்து செய்யப்படும் திருமணங்களுக்கும், மாங்கல்யம் தரித்து அக்ஷதைகள் தூவி வாலிகள் பாடி கோலாகலத்துடன் நடை பெறும் திருமணங்களுக்கு, இன்றும் நாம் எல்லோருங்கூடி நடத்தி வைத்த இத்திருமணம் சற்றும் தாழ்ந்ததல்ல. ஏனெனில் திருமணத்தின் முக்கிய அம்சத்தின்படி எப்படியோ இம்மணமகனும், மணமகளும் இதோ தம்பதிகளாகிவிட்டார்கள் (கரகோஷம்) எனவே, இனி நடைபெறும் திருமணங்கள் இதைவிட குறைந்த செலவோடும், இன்னும் குறுகிய நேரச்செலவோடும் நடைபெற வேண்டுமென்பதை நம் இளைஞர்கள் உறுதியாகக் கொள்ள வேண்டும். நமது இச்சீர்திருத்தத்திருமணத்தைப் பற்றி வைதீகர்கள் என்ன கூறியபோதிலும், சாஸ்திர சம்மதமானதல்லவெனக் கூறிய போதிலும், இவர்கள் தடையின்றி தம்பதிகளாகிவிட்டது போல இன்னும், எல்லாவித சுகபோகங்களுடன் வாழ்வதை நாம் பார்க்கப் போகிறோம் என்பதில் ஐயமில்லை. தீரத்துடன் இம்மணத்தை முடித்த மணமகனையும், மணமகளையும், அவர்களது உறவினரையும் நாம் பெரிதும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். இனி இத்தம்பதிகள், தங்கள் இல்லற வாழ்க்கையை மட்டிலும் நடத்துவதோடு நின்றுவிடாது, நாட்டின் நலன் பேணி நமது தன்மதிப்பியக்கத்தில் போதிய ஊக்கத்துடன் உழைத்து, மற்ற இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் வழிகாட்டிகளாக விருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதோடு, இத்திருமணத்தம்பதிகள் இனியவை எல்லாம் பெற்று இன்புற வேண்டுமென விரும்புகிறேன் என்று பேசினர்.

முடிவில் திரு எஸ். வி. லிங்கம் அவர்களால் சபையோருக்கும், தலை

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

# காந்தியாரின் தற்கொலை!

(தோழர் சா. குருசாமி)

தோழர் காந்தியவர்களுக்கும் தோழர்—மாக்டனால்டுக்கும் நடந்த கடிதப்போக்குவரத்துக்களை வாசகர்கள் தினசரிப் பத்திரிகைகளில் படித்திருக்கலாம் அதன் சாரமாவது "தாழ்த்தப்பட்டவர்களுக்குத்தனித்தொகுதி வழங்கியிருப்பதைக்கண்டு காந்தியார்வருந்துவதாகவும், ஹிந்துமதத்தில் பிளவு உண்டாகாமலிருக்க வேண்டுமானால் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனித்தொகுதி வழங்கக்கூடாதென்றும், அப்படி சர்க்கார் பிடிவாதமாய் தனித்தொர்குதி வழங்குவதாயிருந்தால்தான் பட்டினி கிடந்து செத்துவிடப்போவது உறுதி" யென்பதுமேயாகும்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு அரசியலில் தனித்தொகுதி அவசியமா, பொதுத்தொகுதி அவசியமா என்பது வேறு விஷயம். அதைப்பற்றி இங்கு ஆராயமுன்வரவில்லை. ஏனெனில் அதைப்பற்றி அடிக்கடி பேசப்பட்டும் எழுதப்பட்டுமிருக்கின்றன. ஆனால் இங்கு எடுத்துக்கொள்ள வேண்டிய விஷயம் அவருடைய தற்கொலையைப்பற்றியதேயாகும்.

காந்தியாருடைய தியாகபுத்தியைப் பற்றியோ, தன்னலமற்ற பொது ஜனசேவையைப்பற்றியோ எவரும் குற்றம் சொல்லமுடியாது. ஆனால் அவர்செய்வதெல்லாம் சரியானவை, சொல்வதெல்லாம் உண்மையைத் தவிர வேறில்லை என்று இந்தியப்பாமரமக்களில்பலர் (இதில் படித்தபாமரர்களும்சேர்ந்தவர்கள்தான்) இன்றும் நினைத்துக்கொள்ளப் பட்டிருப்பதால் தான் இவ்விஷயத்தைச்சிறிது ஆராயவேண்டியிருக்கிறது.

காந்தியாருக்கு தாழ்த்தப்பட்டவர்களிடத்தில் அநுதாபம் இருக்கிறதென்பது உண்மை. ஆனால் அவ்வநுதாபத்தை எப்படிக்காண்பிப்பது, அல்லது அவர்களை எப்படி முன்னேற்றுவது என்ற விஷயத்தில்மாத்திரம் அவர் அரசியல் சூழ்ச்சிகளைக்கொண்டுவந்து கலந்து குழப்புவதுதான் நமக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுக்கிறது.

"பரீட்சையில் தேறாவிட்டால் நான் தூக்குப்போட்டுக்கொள்வேன்" என்று நிச்சயிக்கும் மாணவனுக்கும், "வேலைகிடைக்காவிட்டால் விஷம் அருந்தி உயிர்விடுவேன்," என்றுசபதம் செய்து கொள்ளும் தொழிலாளிக்கும், "கேஸ்ஜெயிக்காவிட்டால் வைரத்தை பொடிபண்ணி வாழைப் பழத்தில் வைத்துச்சாப்பிட்டு உயிர் நீப்பேன்," என்று விரதம் கொள்ளும் பட்டிக்காட்டானுக்கும், நகை செய்து போடாவிட்டால் பட்டினி கிடந்து சாவேன்" என்று புருஷனிடம் போட்டி போடும் ஒரு பெண்ணுக்கும், "தனித்தொகுதி கொடுப்பதாயிருந்தால் பட்டினிகிடந்து உயர் நீப்பேன்," என்றுகூறும் நமது காந்தியாருக்கும் அறிவுசம்பந்தப்பட்டவரையில்என்னவித்தியாசமென்று கேட்கின்றேன்.

"ஓ! அப்படியா! இது காந்தியாரின் ஆத்மசக்தி, முன்இரண்டொரு முறைகளில்கூட பட்டினி கிடந்து காரியசித்திபெற்றிருக்கிறார்," என்று சில காந்திபக்தர்கள் சொல்லலாம். அப்படியானால், கடைக்கெதிரே உட்கார்ந்துகொண்டு கத்தியால் தலையிலும் கையிலும் வெட்டிக்கொண்டு காசுகொடுத்தாலொழியப்போக மாட்டேன் என்று வியாபாரத்தைக்கெடுத்து "சத்தியாகிரகம்" செய்யும் சோம்பேறியான கள்ளுளிமங்கனுக்கும் நமது தோழர் காந்தியாருக்கும் என்ன வித்தியாசம்! அவனுடையதும் ஆத்மசக்தியா? அல்லவா? அவனும் காரியசித்தி பெறுகிறானா? இல்லையா?

"இல்லை; இல்லை; மேற்கண்டவர்கள் தங்கள் தங்கள் சுயநலத்திற்காகச்சபதம்செய்கிறார்; நமது காந்தியார் பொது நலத்துக்காகச்சபதம் செய்கிறார்," என்று சிலர்கூறலாம். அது சரியல்ல; ஏனெனில், கள்ளுளி மங்கனும் தன்பெண்டுபிள்ளைகளைக் காப்பாற்றத்தான் அவ்வாறுசெய்கிறான். தன்னையே காப்பாற்றுவதற்கு என்று வைத்துக்கொண்டாலும், ஒரு ஏழை விஷயத்தில் அதுவும் ஒரு குற்றமல்லவே! இதுநிற்க.

காந்தியாரும் உள்ளபடியே தாழ்த்தப்பட்ட மக்களுடைய முற்போக்கில் கவலையுள்ளவராய் இருந்தால்,—அவர்களுக்காக உயிரைவிடத்தயாராயிருப்பதாயிருந்தால், அவருடைய வீரத்தை "அண்டைவீட்டுக்காரர்களாகிய" ஹோரிடமும், மாக்டனால்டிடமும் ஏன் காட்டவேண்டுமென்பது தான் எனக்கு விளங்கவில்லை.

"ஆம்படையன் அடித்ததில் கோபமில்லை, அடுத்தவீட்டுக்காரன் என் சிரிக்கவேண்டும்" என்று ஒருவன் பெண்டாட்டி கோபமாய்க்கேட்டாளாம். ஹோரும் மாக்டனால்டும்தனித்தொகுதி கொடுக்கத்தீர்மானித்ததற்காகக்கோபம் வருகிறதே, ஐயா காந்தியாரே! தனித்தொகுதி அவர்கள் கொடுக்கும்படியாக வைத்த—உமது ஆம்படையான் உம்மை அடிக்கும் படியாக நீர் நடந்து கொண்ட—நிலைமையைக்கண்டு வெட்கம் வரவில்லையே என்பதே எனதுகேள்வி.

ஐயா, காந்தியாரே, இங்கேசற்றுத்திருப்பிப்பாரும்! உமக்கு உண்மையாகவே தாழ்த்தப்பட்டவர்களிடத்தில் அநுதாபம் இருக்கிறதா? அப்படியானால், உம்முடைய பழைய சுவடிகளைத்திருப்பிப்பாரும். நீர் முன்னே, "தீண்டாமை அறவே ஒழிந்தாலொழிய சுயராஜ்யம் வேண்டியதில்லை" என்று சொன்ன காலத்தில் "காந்திக்கு இந்துமதத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது; அவர் மதவிஷயங்களில் அத்தாட்சி இல்லை, அவருக்குப்பித்துப்பிடித்து விட்டது," என்றார்களே!—அந்த கும்பகோணத்துப் பார்ப்பனப் "பிசாசு" கள், அவர்களிடம் உங்கள் ஜம்பத்தைக்காண்பியுமே;! ரோஷக்காரரே! கும்பகோணம் அக்கிரகார வீதியைப்பெருக்குவதற்கு "தீண்டாதவர்" வந்தால் தீட்டுப்பட்டு விடும் என்றுசொல்லி, "ஜாதி இந்து" வைப்போட்டுக்கூட்டச்செய்திருக்கிறார்களே அவர்களிடம்காட்டுகிறதுதானே உமது ஆத்மசக்தியை

தேவகோட்டைப்பக்கத்திலே உமதுபிரமாத 'இந்து' (அயோக்கிய) மதத்தைச்சேர்ந்த நாடார்களும் மறவர்களும் ஆதிதிராவிடர்களைக் கட்டிவைத்து ரெத்தம் பீறிட அடிக்கிறார்களே! பெண்களை மேலே துணி போட விடாமல் உதைக்கிறார்களே! குடிசைகளைத் தீயிட்டுக் கொளுத்துகிறார்களே! சட்டி பானைகளை உடைத்தெறிகிறார்களே! அவர்களிடம் உமது 'இந்து' மதத்தின் விசேஷத்தைச் சொல்லுங்களேன் ஐயா! அவர்களிடம் உங்கள் விரதங்களின் மேன்மையைக் காட்டுங்களய்யா!

நீங்கள் அழுவதற்குக் காரணமாயிருக்கிற "இந்து" மதத்திலிருந்து இவ்விதக் கொடுமைகள் பொறுக்க முடியாமல் பிறமதங்களுக்கு தினம் தினம் நூற்றுக் கணக்காய் ஓடிக் கொண்டிருக்கிறார்களே, அதற்காக நீங்கள் விரதம் இருந்து பார்க்கிறது தானே!

கிராமத்துப் பொதுக் குளத்தில் இறங்கி ஒருவாய் தண்ணீர் முகர்ந்து குடிக்க முடியாமல் நீங்கள் போற்றும் இந்து மதக்கொடுமையால் நூறுகெஜ தூரத்தில் நின்று நாக்கைத் தொங்கவிட்டுத்துடிக்கும் காட்சிக் கண்டு உங்கள் மனம் பதறவில்லையா? அதற்குக்காரணம் உங்கள் இந்து (பார்ப்பன) மதம் என்பது இன்னமுமா உங்கள் அறிவில் படாது போய்விட்டது? அல்லது அறிவில் பட்டு, வேண்டுமென்றே பார்ப்பனீயத்தை நிலை நாட்டிப் போவதற்காகவே ஜீவித்திருக்கிறீரா?

ஐயா, கடைசியாக உமக்கு ஒரு வார்த்தை. உங்களுக்கு உயிர் விடுவதில்—தற்கொலை செய்து கொள்வதில் (இவ்வாறு தற்கொலை செய்து கொள்வது ஒரு குற்றமானால், காந்தியாரைத்தண்டிக்க வேண்டியதே ஒரு அறிவுள்ள அரசாங்கத்தின் கடமையாகும்) உங்களுக்குப் பிரியமிருந்தால்,—அவ்வாறு செய்தால் ஜெயம் பெறலாம் என்றநம்பிக்கையிருந்தால், தாங்கள் பார்ப்பனீய மதமாகிற இந்து மதத்தைச் சேர்ந்த பிரகஸ்பதிகளைப் பார்த்து "ஓ! இந்துக்களே! நீங்களெல்லோரும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு பொதுக்குளம், பள்ளிக்கூடம், சத்திரம், கோவில், முதலிய இடங்களில் போக அநுமதி கொடுக்காமலிருந்தால் நான்பட்டினி கிடந்து உயிர் விடுவேன்," என்று உமது வீட்டுக்காரர்களிடத்திலேயே உங்கள் விரதபலனைக் காட்டினாலல்லவா நாணயமும் யோக்கியமுமாகும்? "கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்து கண்ணில் உருகிவந்து கொக்கைப்பிடிப்பது போல்," தனித்தொகுதிக்காக ஹோரிடமும் மாக்டனால்டிடமுள் விரதப் போட்டி போட்டு உயிர் துறந்து, பிறகு அவர்கள் பொதுத்தொகுதி கொடுத்து, தாழ்த்தப்பட்டவர்கள் பொதுஸ்தாபனங்களுக்குச் சென்று, அதைக்கண்டு உங்களுடைய பிரகஸ்பதி இந்துக்களுக்கு மனமிரங்கி தீண்டாமையை ஒழித்து விடுவார்கள் என்று சொன்னால், இந்தியாவிலுள்ள எல்லா மக்களும் பைத்தியக்காரர்களென்று நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறீர்களா என்பது தான் விளங்கவில்லை.

பூச்சாண்டி வேண்டாம்! காந்தியாரே! பூச்சாண்டி வேண்டாம்! எல்லோரையும் எப்பொழுதும் ஏமாற்றிக் கொண்டே இருக்கலாம் என்று மாத்திரம் நினைத்துவிடாதீர்கள்! இது பகுத்தறிவு காலம்.

இறுதியாக, ஆதிதிராவிட தோழர்களே! கள்ளுளி மங்கனுக்குப் பயந்து காசு போட்டு விடாதீர்கள்.

---

### சுயமரியாதைச்சங்கம். கும்பகோணம்.

இச்சங்கத்தின் ஆண்டுவிழா நடத்தவேண்டியதைப்பற்றியும் மேல்நாடு சென்றிருந்த நமது பெரியார்அவர்கள் சமீபத்தில் நமது நாடுதிரும்புவதை அறிந்து அன்னாருக்கு வரவேற்பு உபசரணை செய்வதைப்பற்றியும் முயற்சித்து வருகின்றனர்.

(நமது நிருபர்)

---

### ஈரோடு முனிசிபாலிட்டி.

## நோட்டீஸ்.

ஈரோடு முனிசிபல் சங்கத்தார் தங்களுக்கு பாத்தியப்பட்ட டி. எஸ். நெ. 28|53 ல் 1440 சதுரஅடி நிலத்தை முனிசிபல் சக்கிலியர் பாடசாலையின் தலைமை உபாத்தியாயர் எம். கே. டேவிட் என்பவருக்கு தர்க்காஸ்தில் இலவசமாய்க்கொடுப்பதாக 7—9—32 தேதிய 279 நெ. தீர்மானத்தில் முடிவு செய்திருக்கிறார்கள்.

இது விஷயமாய் ஆக்ஷேபணையுள்ளவர்கள் ஈரோடு முனிசிபல்கவுன்சில், சேர்மனவர்களுக்கு எழுத்து மூலியமாய் இந்த நோட்டீஸ் ஜில்லா கெஜட்டில் பிரசுரம்செய்த ஒருமாதத்திற்குள் தெரியப்படுத்திக்கொள்ளலாம்.

(ஒப்பம்) கே. ஏ. ஷேக்தாவுத்,
சேர்மன்.

# தமிழா! எழுந்திரு.

(தோழர் எஸ். ஆர். அத்தியப்பன்)

தோழர்களே! தமிழ் மொழி, தமிழ் நாடு முன்னேற்றம் அடையப் பலர் பல வழிகளைக்கண்டார்கள். அவ்வழிகள் யாவும் சுயநலத்திற்காகவும், வீண் பெருமைக்காகவும் காணப்பட்டதாகத்தெரிகின்றது. சைவசமாசம், சித்தாந்த நிலையம், பொது நிலைக்கழகம், தமிழர் சங்கம் முதலான இவைகள்யாவும் தமிழ் மொழிக்கு, தமிழ் நாட்டிற்குச்செய்த தொண்டென்ன? சீர்திருத்தமென்ன? அப்பர் தேவாரத்தையும், தாயுமானவர் பாடலையும், திருவாசக விரிவுரையும் இன்னோரன்ன பல புராண ஆபாசக் குப்பைகளை வெளியிட்டு எங்கள் சைவம், எங்கள் தமிழ் என்று வாய்ப்பறை சாற்றுகின்றதே யொழிய தமிழ்மொழிக்கு தமிழ் நாட்டிற்கு இதுபொழுது என்ன தொண்டு செய்யவேண்டுமென பதை அப்போது மறந்து தூங்குகின்றன.

பல்லாவரம் பொது நிலைக்கழக குருவாக விளங்கும் உயர்திரு மறைமலையடிகள் தமிழ்மொழிவல்லுநரல்லவா? நெல்லை உயர்திரு. கா. சுப்பிரமணியம் பிள்ளை அவர்கள் எம். ஏ., எம். எல்., தமிழிலும் ஆங்கிலத்திலும் வல்லுநரல்லவா? இவர்கள் தமிழ்மொழிவளர்ச்சிக்கு என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்? இவர்களே இன்றும் மாணிக்கவாசகர் வரலாற்றையும் அப்பர் தேவாரத்தின் ஆராய்ச்சியும் செய்துகொண்டிருந்தால் தமிழ்மொழி வளர்ச்சியடையவதெங்ஙனம்? காலஞ்சென்ற திரு. சூரிய நாராயண சாஸ்திரி அவர்களும் திரு. செல்வகேசவராய முதலியார் அவர்களும் திரு கோபிநாதராயர் அவர்களும் யாதொரு சௌகரியமில்லாத அக்காலத்தில் தமிழ்மொழி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுள்ளார்கள். தற்காலத்தில் அண்ணாமலைசர்வகலாசாலையில் எம். ஏ. எல். டி., படித்தவர்களும் சமயப்பித்துத் தலைக்கேறி தமிழ் மொழியைப் படுகுழியில் வீழ்த்துகின்றார்கள். ஆங்கிலமும் தமிழும் கற்ற பெரியார்கள் ஆங்கில மொழியிலுள்ள பொருள்களுக்குத் தமிழில் வார்த்தையில்லாது தவிக்கின்ற (தமிழ் மொழிக்கு அன்னிய) கலைச்சொற்களை, (Techenical words) உண்டாக்கக்கூடாது? இவைபோன்ற காரியங்கள் பலஇருக்க அவர்கள் பழைய வழியிலேயே செல்வது மிக்க வருத்தமாகவிருக்கின்றது. பி. ஏ., எல். டி., எம். ஏ. எல். டி., படித்த பெரியார்கள், தமிழ்ப்பண்டிதர்கள் ஆடை நடுக்கமாகும். அவர்களால் ஒன்றும் நடவாது என்று தொல்காப்பியம் முதலிய சங்க நூல்களை ஆராய்ச்சி செய்கின்றார்கள். நன்கு தமிழ்தெரியாத அவர்கள் ஆராய்ச்சி அபத்தமாகி பல மறுப்புரைகளைப்பெறுகின்றன. மறுப்பு எழுதும் முறையும் கேவலமாகவிருக்கின்றது. இவர்கள் ஆங்கிலத்திலிருப்பதைத்தமிழில்மொழிபெயர்த்தால் என்ன?

ஆங்கிலம், ஆரியம், தமிழ்கற்ற சிலர் தமிழ்மொழிக்கு அரும்பாடுபடுவதாகக் கூறிக்கொண்டு தமிழிலுள்ள நூல்கள் யாவும் ஆரியத்திலிருந்து வந்ததுதான். தொல்காப்பியம் ஆரியத்திலிருந்து தமிழுக்காக எழுதப்பட்டதாகும். என்று ஆரியத்திற்கே ஆக்கம் தேடுவாராகின்றனர். அவர்கள் தமிழின் பெயரைச்சொல்லிக்கொண்டே வயிறுவளர்க்க செய்கையில் தமிழை இழிக்குக் குறைகூறி ஆரியத்திற்கு ஆக்கம் தேடுவது நன்றிகெட்ட செய்கையல்லவா? அந்தோ! இதை நினைக்கும் எந்தத்தமிழன் வயிறுதான் எரியாமலிருக்கும், இரத்தம் கொதிக்காதிருக்கும் எந்தமொழியாகவிருக்கட்டும், அந்தமொழிமீது நமக்கு வெறுப்பில்லை. மொழியிலுள்ள நூல்களை எடுத்துக்கொண்டால் அடங்காக்கோபமுண்டாகின்றது. அந்த அநீதியைத்தன்னகத்தே கொண்டிலங்கும் ஒரு மொழி உலகத்திலிருந்தால் என்ன? அது அடியோடு தொலைந்தால் என்ன என்பதுதான் நமது கேள்வி?

இறைவன்மீதும், முனிவர் மீதும், ஒரு மொழியை வைத்துக் கூறுவதனாலே அந்த மொழியின் புரட்டு வெளியாகின்றது. தேவலோகத்தில் பேசிக்கொண்டிருந்த மொழி மனித உலகத்திற்கிவண் இருக்கின்றதென கம்பும் சிகாமணிகள் பலரிருக்கின்றார்கள். பல புரட்டுகளையும் ஆபாசங்களையும், அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமற்ற பல நூல்களை எழுதிவைத்ததனால் அம்மொழியை மக்கள் எங்ஙனம் போற்ற முடியும்? தமிழ்ப்புலவர்கள் சரித்திரங்களைப்பார்த்தால், மிக ஆபாசமாகவிருக்கின்றன. நூல் எழுதியவர்கள் பொய்யும் புரட்டையும் அப்புலவர்மீது சுமத்தி எழுதினால் அக்காலத்தில் அப்புலவர்க்குப்பெருமை உண்டாகுமென்று எழுதினர் போலும்! இக்காலத்தில் அந்தப்புழுகு மூட்டைகளை நம்புவார்களா? தமிழறிஞர்களே! இதுபோன்ற புரட்டுகளை ஒழித்து உண்மைத்தமிழ்ப் புலவர்கள் சரிதையைக்காணுங்கள். தெலுங்க நாட்டிலிருந்த வீரேசலிங்கம் பந்துலு அவர்கள் தெலுங்குமொழிமுன்னேற்றத்திற்கு அரும்பாடு பட்டார். இலக்கியம் இலக்கணம், கல்வெட்டு, பெண்கள் விடுதலை, சமூகச்சீர்திருத்தம் முதலிய இத்துறைகளிலேயே தம் வாழ்நாளை அர்ப்பணம்செய்தார். அவர் பட்ட உண்மை அரும்பாட்டால் தான் தெலுங்கநாடு விழித்தெழுந்தது. அதுபோன்று தமிழா! நீயும் விழித்தெழு, உன்னைச்சுற்றியுள்ள மூடநம்பிக்கை, புராண நம்பிக்கை, முன்னோர்வழி, பெரியோர் வார்த்தை, கடவுளுக்குப்பொருந்தாது, நரகம், மோக்ஷம், பாவம் என்ற அடிமை எண்ணங்களை உதறித்தள்ளித் தமிழ்மொழிக்குத் தமிழ் நாட்டிற்கு உண்மைத்தொண்டு செய்!

பண்டைக்காலத்தில் சுருக்கெழுத்து (Short hand) இருந்ததாகக்கூறுகின்றார்கள். அதுவும் உண்மைத்தமிழ்நூல்களைக்கொண்டகடல் கொண்டுவிட்டது போலும். தமிழில் சுருக்கெழுத்துப் போதிக்க ஏன் கலாசாலைகளில் வசதிசெய்யக்கூடாது? தமிழ்வித்வான் வகுப்பிற்குப் பல புத்தகங்கள் பாடம் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் இரண்டொன்றைத்தவிர மற்றவைகள் யாவும் சைவத்திற்கும், வைணவத்திற்கும் சண்டையை மூட்டும் கலம்பகங்களும், கோவைகளும் மாலைகளுமே பாடமாக வைக்கப்பட்டிருக்கின்றது. சைவமத, சமய ஒற்றுமையைத்தேடும் தமிழர்கள் முதலில் இத்தொல்லைகளை ஒழிக்க வேண்டும். அந்தோ! இத்தொல்லையல்லவா தமிழின் வளர்ச்சியைக்கெடுக்கின்றது. இதுபொழுது, தமிழ் வித்வான் படித்தபின் என்ன செய்வது என்பதுதான் மயக்கமாகவிருக்கின்றது. வேலைக்குப்போகலாமென்றால் வேலை என்ன என்பது கேள்வி? எத்தனை பண்டிதர்கள் ஆண்டுதோறும் தேவை? மற்றபண்டிதர்கள் ஆண்டுதோறும் என் செய்வது? அன்மொழித்தொகைக்கும், ஆகுபெயருக்கும் ஆராய்ச்சி செய்வதா? வள்ளுவர் சைவரா? சைனரா? என்று ஆராய்ச்சி செய்வதா? இவர்கள் எதை சாப்பிட்டுக்கொண்டு ஆராய்ச்சிகள் செய்வார்கள் என்பது தெரியவில்லை. சோறு என்றால் உழைத்தாலன்றோசோறு. டென்மார்க்தேசம் எங்கே இருக்கிறது. மான்செஸ்டர் எங்கே இருக்கிறது, நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்று கேட்டால் நூற்றுக்கு எத்தனை பேர் சரியான விடை கூறும் பண்டிதர்கள் இருக்கின்றார்கள் என்பது தெரியவில்லை. உங்கள் தமிழ்நாட்டு சரித்திரத்தைக் கூறுங்கள் என்று ஒரு மேனாட்டான் கேட்டால் பெரிய புராணத்தையும், தேவாரத்தையும் ஒப்பித்தால் அவன் தமிழ்மீது என்ன அபிப்பிராயம்கொள்ளுவான் என்பதை உங்கள் பகுத்தறிவே யோசித்துப் பார்க்கட்டும், பின் பண்டிதர்கள் பிழைப்பு என்ன என்று கேட்டால் ஒரு தம்பிரான் கோவைசெய்து கொடுத்தால் பணம் கொடுப்பதாகக்கூறினர். நாம் கோவை செய்துகொடுத்தாவது வயிறுவளர்ப்போம். புராணங்கள் எழுதிச்செட்டியார்களுக்குக் கொடுத்தாவது வயிறுவளர்ப்போம் என்று எண்ணுகின்றார்கள். மற்றொருவர் நமக்குத்தேவாரம் தெரியும் பண்டார சந்நிதியிலிருந்து பிழைக்கலாம். ரா. மு. அள. கருப்பஞ்செட்டியாரை புகழ்ந்துபாடி ஒரு தேவாரப்பாடசாலை கட்டுங்கள், உங்களுக்கு மோக்ஷம் கிடைக்கும், நான் ஏதோ படித்ததற்குச்சைவத் தொண்டு செய்கின்றேன் என்று கூறிச்செட்டியாரை ஏமாற்றப் பார்க்கின்றார். பின்னொருவர் நமக்கு விபூதியும் உருத்திராக்கமும் இருந்தாலே இருக்கின்றது. பட்டிக்காட்டுக்குப்போனால் திருவிளையாடற் புராணம், கருடபுராணம் பாரதம் முதலிய கதைகளைக் கூறி நம்முடைய காலக்ஷேபத்தை நடத்திவிடலாம் என்று நினைக்கினறார். புறநானூறு படித்த இந்தப்பண்டிதர்கள், வீரஞ்செறிந்த தமிழ் நாட்டில் பிறந்த இந்தப் பண்டிதர்கள் தன் வயிற்றுக்குத் தான் உழைத்து உணவு உண்ண வகையறியாது தவிக்கின்றார்கள் அந்தோ! வீரத்தமிழ்த்தாயே உன்புதல்வர்களுக்கு இக்கதியும் வேண்டுமோ?

தமிழ்மொழி வளர்ச்சிக்கு (சிறிது)த்தொண்டு செய்தவர்கள் சைவரேயாவர், தமிழ்நூல்கள் பெ

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

# காந்தியின் மரண வாக்குமூலம்.

இந்திய நாட்டிற்கு இது ஒருசோதனை காலமென்றே கூறவேண்டியிருக்கிறது. ஏனெனில் இப்பொழுது தான் இந்திய அன்னையின் புதல்வர்கள் பலருக்குப்பலவாறு மூளைசிதற ஆரம்பித்திருக்கின்றது. பாரதத்தாயின் புதல்வருள் முதல்வராய் விளங்கிய காந்திஜீயும் தனது தாயகிலேதவறி சழக்கர் குழாத்தில் தலைசிறந்து தோன்றத் தனது மரணவாக்குமூலத்தை வெளியிட்டுள்ளார். இது சம்பந்தமாய் சென்ற மார்ச்சுமாதம் முதற்கொண்டே தோழர் காந்திக்கும், தோழர் சாமுவேலுக்கும், தோழர் ராம்சே மாக்டொனல்டுக்கும் நடந்த கடிதப்போக்கு வரத்துகளும் தந்திச்செய்திகளும் மிகவும் ருசிகரமானவை.

ஃ ஃ

இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டில், தாழ்த்தப்பட்டாருக்குத்தனித்தொகுதி யளிக்கும் விஷயம் விவாதிக்கப்பட்ட போது தோழர் காந்தியவர்கள் தனதுஉயிரை இழந்தாகிலும், தாழ்த்தப்பட்டாருக்குத் தனித்தொகுதியளிப்பதை எதிர்த்தே தீருவேன் என்றுகூறியதை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அவ்வார்த்தைகளை மெய்ப்பிக்கவும், உள்ளொன்றுவைத்துப் புறமொன்றுபேசும் இழிதன்மை தன்னிடத்தில் கிடையாதென்பதை உலகத்தாருக்கு நிரூபித்துக் காட்டவுமே தற்போது திரு. காந்தியவர்கள் தமது மரணவாக்குமூலத்தை வெளியிட்டுள்ளார்.

ஃ ஃ

ஆனால் அப்பெரியார் எதற்காக—எக்காரணத்திற்காக தமது உயிரைத்தியாகம் செய்யத்துணிந்தார் என்பதைக்கவனிக்கும்போது நமது மனம் பதறுகிறது, கைநடுங்குகின்றது, ஏன்? இந்திய நாட்டின் இரணமாய்ப்பல்லாயிர வருடங்களாய்த் தாழ்த்தப்பட்டு, ஒடுக்கப்பட்டு-நாதியற்று-நசுங்கிக்கிடக்கும் எழுகோடி நடைப்பிணங்களுக்குத் தனிப்பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டதே காரணமாம். அந்தோ! இக்காரணத்தை உன்னும்போதுதான் காந்திஜீயின் ஒரு உயிரைவிட எமது எழுகோடி ஏழை மக்களின் எழுகோடி உயிர்கள் பெரிதல்லவா? என்ற எண்ணம் நமக்கு உதிக்கின்றது. காந்திஜீயின் இக்கடைசி விரதத்தால், இன்னும் பல ஆயிரவருடங்கள் எமது ஏழை மக்கள்—வாயில்லாப் பூச்சிகள்—இந்திய நாட்டின் அலங்கோல ஆபரணங்கள்—வறுமையின் உருவங்கள்—ஆரியர் வன்கொடுமையின் ஞாபகச்சின்னங்கள்—இந்தியநாட்டின் இழிவுத்தன்மையின் கலங்கரைவிளக்கங்கள்,—உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, உறங்கஇடமின்றி மக்களுடன் கூடிவாழ மனிதத்தன்மையுமின்றி, தெருக்களில் விடப்படாமலும் குளங்களில் சேர்க்கப்படாமலும், கோவில்களில் நுழையசுதந்தரமின்றியும், மிருகங்களிலும் கேவலமாய் நடத்தப்பட்டு, அடிமைத்தன்மையிலும் அடிவண்டலாயிருக்க வேண்டுமென்று ஏற்படுவதாயிருந்தால், அத்தகைய இழிநிலை ஏற்படுவதைவிட திரு. காந்திஜீ தமது விரதத்தில் வெற்றி—முழுவெற்றி பெறுவதையே பெரிதெென நாம் கருதுவோம். ஆ! என்னஆபாசமானபுத்தி? என்ன கேவலமான மனப்பான்மை? எத்துணை வெறுக்கத்தக்க வேற்றுமை? இந்தியாவிற்பிறந்து இந்தியாவில் வளர்ந்து, இந்தியாவிலேயே இருந்துவரும் இரு வகுப்பாருக்கு, ஏலாப்பதிவிரதையாய்க்கொடுக்க சம்மதித்த ஒரு கொள்கையை, ஏனோ இந்த ஏழைமக்களுக்குமட்டும் மறுக்கவேண்டும் என்பதுதான் எமக்கு விளங்கவில்லை. இதை விளக்குதற்கு வியாக்கியானங்களும் எமக்குத்தேவையில்லை, அதன் உண்மையை நாம் அறிவோம். மகமதியர்களுக்கும், சீக்கியர்களுக்கும், இத்தகைய பிடிவாதம் காந்திஜீ காட்டிருப்பாரேல், இதுவரை அவர் உயிருடனிருந்து, இப்பொழுது பட்டினியால் தமதுஉயிரை மாய்த்துக்கொள்ளவேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. எனவே 'விசுவாசக்காரனுக்கு வெந்நீறுஞ் சோறும்'' என்றகதையாகவே முடிந்துவிட்டது.

தாழ்த்தப்பட்டவர்களுக்குத்தனித்தொகுதி வழங்கப்பட்டால் தமது இந்து மதக்கோட்டையினின்றும் அவர்கள் பிரிந்துபோக நேரிடுமென்று காந்தி கண்ணீர்வடித்தார். அதற்காகவே இப்பொழுது தமது உயிரையும் அர்ப்பணம் செய்ய முன்வந்துள்ளார். அப்படியாயின் இதுவரை நாள்தோறும், இந்துமதக்கோட்டையினின்றும், இந்துமதக்கொடுங்கோன்மை சகிக்காது கிறிஸ்துவமதத்திற்கும், மகமதிய மதத்திற்கும் மற்றும் ஏனைய மதங்களுக்கும். போய்க்கொண்டும், இன்னும் போகவுமிருக்கும் பலகோடி மக்களுக்காக திரு. காந்தியவர்கள் என்னசெய்தார், என்ன செய்கிறார், என்னசெய்யப்போகிறார், என்றே நாம் அவரைக்கேட்கின்றோம். இத்துணைகாலமாக இவரால் போற்றப்படும் இந்துமதத்தின் அழுகிய நாற்ற மெடுத்த கொள்கைகளாலும், ஆபாசச்சட்டங்களாலும், அறிவுக்குப்பொருத்தமற்ற அட்டூழியங்களாலும் ஜனசமூகத்திற்கு ஏற்பட்ட ஒரு பெரும் தீங்கைவிட இப்பொழுது பிரிட்டிஷார் வழங்கும் விசேஷப்பிரதிநிதித்துவத்தால் என்ன தீமை விளைந்துவிட முடியும்? மேலும் இவர் கோரியவாறே, தாழ்த்தப்பட்ட மக்களுக்குத்தனிப்பிரதிநிதித்துவம் வழங்கியதோடு மட்டும் நில்லாது. பிரிட்டிஷ்சர்க்கார் அவர்கட்குப் பொதுத்தொகுதியிலும் ஓட்டுரிமை வழங்கியிருக்கும்போது உண்மையாக, என்னகேடு, எவ்வாறு ஏற்படமுடியுமென்பதுதான் எமக்கு விளங்கவில்லை. இதை எதிர்த்துத் தமது உயிரைமாய்த்துக்கொள்வதாகத் திரு காந்தி அவர்கள் பூச்சாண்டிகாட்டுவாரானால் உலகம் இப்பூச்சாண்டியைக்கண்டு கலங்கப்போவதில்லை யென்றே நாம்கூறுவோம். மேலும் இத்தகைய அற்பத்தனமான பூச்சாண்டிகாட்டுவதால் காந்திஜீ தமது கண்ணியத்தையும் இழிவுபடுத்திக்கொண்டார் என்றே கூறமுற்படுவோம். இப்பூச்சாண்டியைக் கண்டு ஆங்கில சர்க்கார் ஒரு சிறிதும் தமது நிலைகலங்கவோ, தமது கடமையைவிட்டு விலகவோ, இல்லையென்பதை பிரிட்டிஷ்சர்க்காரின் பிரதிநிதியாய்த் தோழர் ராம்சேஅவர்கள் தமது கடைசித்தந்தியில் நன்கு விளக்கி விட்டார். தாழ்த்தப்பட்ட மக்களும் இதுவரைஅவர்கள் காந்திஜீயின்பால் வைத்திருந்தசிறிது அன்பையும், உதறித்தள்ளிவிட்டு எழுகோடி மக்கள் எக்காலமும் அடிமைகளாக்கப்படுவதைவிட திரு. காந்தியின் ஒருஉயிரோ அன்றி அவரைப் படைத்ததாகக்கூறப்படும் எல்லாம் வல்ல இறைவனது உயிர்போனாலும் கூட அதை ஒரு பொருட்படுத்தப் போவதில்லை என்பதையே நாம் திரு. காந்தி அவர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம். காந்திஜீயின் ஒரு உயிர்எவ்வளவு பெரியதென அவர் மதித்துள்ளாரோ அதுபோன்றே ஒவ்வொரு தாழ்த்தப்பட்டவனும் தனது உயிரையும் மதித்துள்ளார் என்பதையும் காந்திஜீ தனதுயிரை எத்துணை திரணமாக வீசி எறிய முற்பட்டாரோ அதுபோன்றே தாழ்த்தப்பட்ட மக்களும் தங்களது எழுகோடி உயிர்களையும், ஒருதிரணமாக மதித்துத் தூக்கிஎறியத் தயாராயிருக்கிறார்களென்பதையும் திரு. காந்தியவர்கள் உணரவேண்டுமென்றே நாம் விரும்புகிறோம். "காக்கைக்கும், தன்குஞ்சு பொன்குஞ்சல்லவா''? "உற்றவிடத்தில் உயிர்வழங்குந்தன்மையோர் பற்றலரைக்கண்டால் பணிவரோ—கற்றூண்—பிளந்திறுவதல்லாற் பெரும்பாரந் தாங்கின் தளர்ந்துவளையுமோ தான்,'' "மானமிழந்தபின் வாழாமை முன்னினிதே'' என்ற வாக்கியங்கள் எல்லோருக்கும் பொதுவேயன்றோ? ஆகவே தனித்தொகுதியின்றேல் தமக்கு 'விடுதலையில்லை—தமக்கு விமோசனம் இல்லை, என்று மனப்பூர்வமாய் எண்ணும் ஒவ்வொரு தாழ்த்தப்பட்டவரும் இத்தகைய பூச்சாண்டியைக்கண்டு எள்ளி நகையாடுதலைவிட்டு வேறு என்னசெய்ய முடியும். ஆனால் இன்னொன்றும் செய்யலாம், என்ன? உலக உத்தமரான திரு காந்தியின் இறுதிவிரதத்தைக் கண்டு, சர்க்கார் அஞ்சி அவரது உயிரைக் காப்பாற்றுவதற்காக எமக்களிக்கப்பட்ட தனித்தொகுதி சுதந்தரத்தை மாற்றவோ அன்றி மறுக்கவோ முற்படுவாரானால் எங்கள் எழுகோடி மக்களில் சுயமரியாதை உணர்ச்சியுள்ள ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட மகனும், பெண்டிரும் குழந்தைகளும் கூட, இன்னும் எங்கள் இஷ்டஜனக்குடும்ப சமேதராய் ஒவ்வொரு சர்க்கார்மாளிகையிலும் காரியாலயங்களிலும் புகுந்து, மேன்மைதங்கிய நமது அரசர்பிரானின் பிரதிநிதிகளின் முன்பாகவே எங்கள் நாக்கைப்பிடுங்கிக்கொண்டு, எங்கள் மானங்கெட்ட உயிரை மாய்த்துவிடுவோம் என்று ஏன்எச்சரிக்கைவிடுக்கக்கூடாது? அதுவும் செய்வோம், அதற்குமேலும் செய்வோம், தாழ்த்தப்பட்டாரே கண் விழியுங்கள்! உங்கள் சோம்பலை உதறியெறியுங்கள்! உங்கள் எதிரிகளை ஊடுருவிப்பாருங்கள்! வரிந்துகட்டுங்கள்! மார்தட்டுங்கள்! வாழ்க்கை நிலையை உறுதிப்படுத்துங்கள்! வேண்டுவனசெய்யுங்கள்! இன்றேல் திரு காந்தி அவர்களின் ஒரு திரு உயிரைக்காப்பாற்றுவான் வேண்டி உங்கள் எழுகோடி உயிரையும் மாய்த்து மடியுங்கள்—காலம் ஒன்றே உங்கள் கதியைநிர்ணயிக்க வேண்டும். உங்கள் முயற்சியொன்றே உங்களுக்கு வெற்றியளிக்கும்.

(திராவிடன்.)

---

## பண்டைப்பெருமையில் பயனின்று

## உண்மைக்கல்வி எது?

### திருமதி அரங்கநாயகி சொற்பொழிவு.

11—9—32 தேதி ஞாயற்றுக்கிழமை மணியரசுமன்றத்தின் ஆதரவில், வித்யோதயா பெண்கள உயர்தரக்கலாசாலைத்தமிழாசிரியர் பண்டிதை ரா. அரங்கநாயகியார் தலைமையின்கீழ் ஒருபொதுக்கூட்டம் கூடிற்று, அதுசமயம் தலைவர் முன்னுரைக்குப்பின் திரு தண்டைபலர்த்தன் சம்பந்தன், தேவசுந்திரம், சீனிவாசராவ், பண்டிதபக்கிரிசாமி செட்டியார், முத்துக்குமாரசாமி முதலியார் முதலியோர் சொற்பொழிவாற்றினர்கள்.

திருமதி அரங்கநாயகியார் தமது முடிவுரையில் கூறியதாவது:—

"நாம் பழம் பெருமையைப்பற்றிப் பன்னிப்பன்னிப்பேசிக்கொண்டிருப்பதில்பயனில்லை முன்னேற்றத்திலும் அறிவுத்துறையிலும் திறமையிலும் மேனாட்டு மக்களைப்பின்பற்ற வேண்

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

## சென்னைக்கு ஏஜண்டு தேவை.

நமது "குடி அரசு" பத்திரிகையை விற்பனை செய்ய தகுந்த டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் சென்னைக்கும், மதுரைக்கும் தேவை. இது சமயம் ஷை நகரங்களில் 150 பிரதிகளுக்கு மேல் செலவாகிவருகிறது. கமிஷன் 100க்கு 25. மற்ற விபரம் எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்.

# குடி அரசு.

ஈரோடு 1932 செப்டம்பர் மீ 18-உ

## காந்தியின் வைதீக வெறி.

:0:

இந்துக்கள் என்பவர்களும், திரு. காந்தியும்; காங்கிரசும், தீண்டாதாருக்கு, அரசியலில் தனித்தொகுதியை ஏற்படுத்துவதை ஆதி முதல் மறுத்து வருவதற்குக்காரணம், அவர்களை இதுவரையிலும் இருந்தது போலவே எப்பொழுதும் இந்துக்களுக்கு அடிமையாக வைத்திருக்க வேண்டும் என்னும் எண்ணமே யாகும் என்று நாம் கூறி வருகிறோம்.

இவ்வாறு நாம் சொல்லி வந்ததின் உண்மை, இப்பொழுது திரு. காந்திக்கும், இந்தியா மந்திரிக்கும், முதல் மந்திரிக்கும் நடந்த கடிதப் போக்குவரத்துக்களின் மூலம் நன்றாக விளங்கிவிட்டது.

தீண்டாதாருக்குத் தனித்தொகுதி கொடுத்து விட்டால், அவர்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள், வேறு எந்த உயர்ந்த வகுப்பினருடைய தயவையும் எதிர்பாராமல் சட்ட சபைக்குத் தெரிந்தெடுக்கப்படலாம். சட்ட சபையிலும் அவர்கள் தங்கள் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு, உண்மையாகவும் தைரியமாகவும் போராடலாம்.

அன்றியும், இந்துக்களினின்றும் தீண்டாதாரைத் தனியாகப் பிரிப்பதனால், அவர்களுக்கு மற்றொரு பெருஞ் சாதகமும் உண்டு. அதாவது, தற்போது பிரிட்டிஷ் அரசாங்கம் செய்திருக்கும் வகுப்புப் பிரச்சினைத் தீர்ப்பின்படி பார்த்தால், ஒவ்வொரு சட்ட சபைகளிலும் உள்ள, முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், ஆங்கிலோ இந்தியர்கள், ஆங்கிலேயர்கள், தீண்டாதார்கள் ஆகிய இவர்கள் எல்லோருடைய தொகையும் ஒன்று சேர்ந்து இந்துக்களின் தொகையைக் காட்டிலும் சிறிது மெஜாரிட்டியாகி விடுகிறது. தீண்டாதாருக்குத் தனித்தொகுதி கொடுத்துப் பிரிக்காவிட்டால், மற்றவர்களின் தொகையைக்காட்டிலும் இந்துக்களின் தொகை சிறிது மெஜாரிட்டியாக இருக்கும்.

மேற்கூறியவாறு, இந்துக்களின் தொகையைவிட, தீண்டாதாரையுள்ளிட்ட மற்றவர்களின் தொகை மெஜாரிட்டியாவதன் மூலம் தீண்டாதாருக்கு அவர்கள் கோரிய நன்மைகள் கிடைக்கக் கூடும் என்பதில் ஐயமில்லை. எப்படியெனில், இன்று தீண்டாதார்கள், பொதுத்தெருக்களில் நடக்கும் உரிமைக்கும், பொதுக் குளம் கிணறுகளில் தண்ணீர் எடுக்கும் உரிமைக்கும், பொதுக்கோயில்களில் நுழையும் உரிமைக்கும், பொதுப்பள்ளிக்கூடங்களில் சேர்ந்து படிக்கும் உரிமைக்கும், இன்னும் மற்ற மக்களைப்போல் தாங்களும் தேசத்தில் சமத்துவத்துடன் வாழவேண்டும் என்னும் உரிமைக்கும் போராடிக் கொண்டு வருகின்றார்கள். இப்போராட்டத்திற்கு எதிராக நிற்கின்றவர்கள், கிறிஸ்தவர்களல்லர்; முஸ்லிம்களல்லர்; ஆங்கிலேயர்களல்லர்; ஆங்கிலோ இந்தியர்களல்லர் என்பது யாரும் அறியாததல்ல. ஆனால், தீண்டாதாரின் மேற்கண்ட உரிமைகளை மறுத்துப்போராடுகின்றவர்கள், வைதிக இந்துக்கள் தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. இதற்கு உதாரணம், நாசிக், குருவாயூர் முதலிய இடங்களில் நடைபெறும் சத்தியாக்கிரகமும், இன்னும், அடிக்கடி ராமநாதபுரம் ஜில்லாவிலும், மற்றும் பல இடங்களிலும் தீண்டாதாருக்கு உண்டாகும் துன்பமே போதியவைகளாகும்.

அன்றியும், தீண்டாதாருக்குச் சுதந்தரம் அளிப்பதன் சம்பந்தமாகச் சட்டசபைகளில் ஏதாவது தீர்மானங்கள் வருகின்ற காலங்களில் அவைகளை இந்துக்களே எதிர்த்து வருகின்ற செய்தியும் போதுமானதாகும். இத்தகைய மனப்பான்மையுடைய இந்துக்களுடன், தீண்டாதார் சேர்ந்திருப்பதன் மூலம் அவர்களுக்கு எள்ளளவாவது நன்மை கிடைக்கப் போவது இல்லையென்பது உறுதியாகும்.

அன்றியும் தீண்டாதாருக்குத் தனித் தொகுதி யளிக்காமல், பொதுத் தொகுதியில் ஸ்தானங்கள் ஒதுக்கிவைத்தால் கூட, அதனாலும் அச்சமூகத்திற்குக் கடுகளவும் பயன் உண்டாகாது. ஏனெனில் பொதுத்தொகுதியில் உள்ள மற்ற இந்துக்களின் வாக்கையும் பெற்றே அச்சமூகத்தினர் சட்ட சபை ஸ்தானம் பெற முடியும், தீண்டாதார்களில் வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை அளித்தால் கூட, அவர்களைக்காட்டிலும் உயர்ந்த சாதி இந்துக்களின் வாக்காளர் தொகையே மிகுதியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆகவே, இந்துக்களின் தயவினால் தான் தீண்டாதார் பிரதிநிதிகள் சட்ட சபைக்குச் செல்ல முடியும். உயர்ந்த சாதி இந்துக்களின் தயவினால் செல்லும் பிரதிநிதிகள் எவ்வாறு, தீண்டாதாராகிய தங்கள் சமூகத்திற்கு, உண்மையாகவும், தைரியமாகவும் போராட முடியும் என்று கேட்கிறோம். ஆகையால் தீண்டாதார்களுக்குத் தனித்தொகுதி இல்லாவிட்டால் அவர்கள் முன்னேற்றமும் நீண்ட காலங்களுக்கு இல்லை என்று தான் முடிவு செய்யவேண்டும்.

இவ்வுண்மையை உணர்ந்தே தான், வைதிகர்களின் பிரதிநிதியாகிய திரு. காந்தியவர்கள், ஆதி முதல், தீண்டாதாருக்குத் தனித்தொகுதி கொடுப்பதைப் பலமாக ஆட்சேபித்துக் கொண்டு வருகிறார். முஸ்லிம்களுக்கும், சீக்கியர்களுக்கும், தனித்தொகுதி கொடுக்க ஒப்புக்கொண்ட திரு. காந்தியவர்கள், "தீண்டாதாருக்குத் தனித்தொகுதி கொடுத்தால் எனது உயிரை விட்டாயினும் அதைத் தடுப்பேன்" என்று கூறியதற்குக்காரணம் தீண்டாதார் முன்னேற்றம் கருதியல்ல; இந்துக்களின் முன்னேற்றம் கருதியும், இந்து மதம், வருணாச்சிரம தருமமதம் பாதுகாக்கப்படவேண்டும் என்பது கருதியுமேயாகும் என்பது இப்பொழுது நன்றாகத் தெரிந்து விட்டது.

இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டின் போது, சிறுபான்மையோர் சம்பந்தமாக ஒரு முடிவு செய்வதற்கு, திரு. காந்தியுள்பட மற்றப் பிரதிநிதிகளும் எவ்வளவோ முயன்று பார்த்தார்கள்; ஆனால் தனித்தொகுதித் தகராறினாலும், ஸ்தானங்களின் எண்ணிக்கையில் உண்டான தகராறினாலும், ஒரு ஒப்பந்தத்திற்கும் வர முடியாமற் போய் விட்டது. ஆகவே வகுப்புப் பிரச்சினை சம்பந்தமாக ஒரு முடிவுக்கும் வர முடியாமல், அதைத்தீர்மானிக்கும் விஷயத்தைப் பிரதம மந்திரியிடமே ஒப்படைத்து வந்து விட்டார்கள்.

ஆனால், திரு. காந்தியவர்களுக்கு மாத்திரம், மற்ற விஷயங்களைக் காட்டிலும், தீண்டாதாருக்குத் தனித்தொகுதி யளிக்கக்கூடாது என்னும் விஷயத்தில் மாத்திரம் பெருங்கவலை இருந்ததாகத் தெரிகிறது. இதைத் திரு. காந்தியவர்களே, இந்தியா மந்திரிக்கு எழுதிய கடிதத்தில் "இந்தியாவிற்கு வந்து, தனித்தொகுதிக்கு விரோதமான பொதுஜன அபிமானத்தை, தீண்டாதார் விஷயத்திலாவது மிகுதிப்படும்படி செய்யலாம் என்று நினைத்தே இந்தியாவுக்குத் திரும்பினேன். ஆனால் அது முடியாமல் போய் விட்டது" என்று குறிப்பிட்டிருப்பதிலிருந்து அறியலாம்.

இந்தியா முழுதும் உள்ள தீண்டாதார் ஸ்தாபனங்களும், அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான தலைவர்களும், ஆரம்பமுதல் தங்களுக்குத் தனித்தொகுதி தான் வேண்டுமெனப் போராடி வந்திருக்கின்றனர். இவ்விஷயம் திரு. காந்தியவர்களுக்குத் தெரியும். இதனால், பிரிட்டிஷ் அரசாங்கம், வகுப்புப் பிரச்சினை சம்பந்தமாக முடிவு செய்யும் போது தீண்டாதாருக்குத் தனித்தொகுதி தான் அளிப்பார்கள் என்ற விஷயமும் திரு. காந்திக்குத்தெரியும். ஆகையால் தான் அவர் சிறையிலிருந்து கொண்டே, வகுப்புப் பிரச்சினைத் தீர்ப்பு வெளியாவதற்கு முன்பே, இந்தியா மந்திரிக்கு சென்ற மார்ச்சு மாதம் 11 தேதி எழுதிய கடிதத்தில் தீண்டாதாருக்குத் தனித்தொகுதி கொடுக்கக்கூடாது எனமுன்னெச்சரிக்கையாக மறுத்திருக்கிறார். அவ்வாறு பிடிவாதத்துடன் மறுத்திருப்பதற்குக் காரணம், இந்து மதம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதைத்தவிர வேறொன்றும் இல்லையென்பதை அக்கடிதத்தில் உள்ள வாக்கியங்களைக்கொண்டே தெரிந்து கொள்ளலாம்.

> "இந்து தர்மம் சம்பந்தப்பட்ட வரையில், தனித்தொகுதி முறை அச்சமூகத்தைச் சின்னபின்னமாகச் சிதைத்து உருப்படாமல் செய்து விடும். நான் சம்பந்தப்பட்ட வரையில் இந்த வகுப்பாரின் தர்ம சம்பந்தமானதும், மத சம்பந்-

தமானதுமே முக்கியமானதாகும். தர்ம விஷயத்தையும், மத விஷயத்தையும் கவனிக்கும் போது அரசியல் விஷயம் முக்கியமானதாயிருந்தாலும் அது தானே முக்கியமற்றதாகி மறைந்து விடுகிறது”

என்றும்,

“எனது பயமெல்லாம் வெறும் பயமாகி, தீண்டாதாருக்கு, பிரிட்டிஷ் சர்க்கார் தனித்தொகுதியளிக்க விரும்பவில்லை என்று ஏற்பட வேண்டும் என்றே நம்புகின்றேன்”

என்றும் குறிப்பிட்டிருப்பதைக் கொண்டு, 7 கோடி தீண்டாதார்களைப் பலி கொடுத்தாவது இந்து மதத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதில், திரு. காந்திக்கு எவ்வளவு பிடிவாதம் இருக்கிறதென்பதை அறியலாம்.

மேற்கூறிய இந்தியா மந்திரிக்கு எழுதிய கடிதத்திலேயே, “அரசாங்கத்தார், தீண்டாதாருக்குத் தனித்தொகுதி அளித்து விடுவதெனத் தீர்மானித்து விடுவார்களாயின் நான் பட்டினி கிடந்து சாவதைத்தவிர வேறுவழியில்லை” என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதன்பின், அதாவது பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் வகுப்புப் பிரச்சினைத் தீர்ப்பு வெளியான பின், “தீண்டாதாருக்குத் தனித்தொகுதி கொடுத்திருப்பதை மாற்ற விட்டால் செப்டம்பர் மாதம் 20ம் தேதி முதல் பட்டினி கிடக்கத் தீர்மானித்து விட்டேன்” என்று பிரதம மந்திரிக்கு, ஆகஸ்ட் மாதம் 18ம் தேதி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அக்கடிதத்திற்கு முதல் மந்திரி திரு. மெக்டனால்ட் கொடுத்திருக்கும் பதில் சரியான பதிலாகும். பிரதம மந்திரியின் பதிலில்,

“நீங்கள் பட்டினி கிடந்து உயிர் துறக்க நினைத்திருப்பது, தாழ்த்தப்பட்டவர்களுக்கு மற்ற இந்துக்களுடன் கூட்டுத் தொகுதி அளிக்கவேண்டும் என்பதற்காக அல்ல; ஏனெனில் இவ்வித கூட்டுத்தொகுதி முன்னமே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்துக்களுக்குள் ஒற்றுமை உண்டாக்கவேண்டுமென்னும் எண்ணத்துடனும் அல்ல; அதுவும் முன்னமே அரசாங்கத்தாரின் திட்டத்தில் அடங்கியிருக்கிறது. ஆனால் தற்சமயம், பெரும் கஷ்டங்களுக்கு உட்பட்டுள்ள தாழ்த்தப்பட்ட சமூகத்தினர், தங்கள் சார்பாகச் சட்டசபைகளில் பேச, ஒரு சில பிரதிநிதிகளைத் தாங்களாகவே தங்களுக்குள் தேர்ந்தெடுத்து அனுப்பும் உரிமையைத் தடுப்பதற்காக மாத்திரந்தான் நீங்கள் பட்டினி விரதத்தைக் கைக்கொள்ள எண்ணியிருக்கிறீர்கள் என்று நான் அறிகிறேன்”

என்று குறிப்பிட்டிருக்கும் வார்த்தைகள் உண்மையென்றே நாம் கூறுவோம். திரு. காந்தியின் இந்துமத அபிமானத்தையும், வருணாச்சிரம தருமப் பிடிவாதத்தையும் உணர்ந்தவர்கள் இதை மறுக்க முன்வரமாட்டார்கள்.

பிரதம மந்திரியின் தீர்ப்பின்படி, தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பொதுத்தொகுதியில் “ஓட்” செய்யும் உரிமையிருக்கிறது. இதனால், உயர்ந்த சாதி இந்துக்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் ஒற்றுமையுண்டாக இடமிருக்கிறது. ஆகையால் இத்தீர்ப்பினால், “இந்துக்களிலிருந்தும் தீண்டாதாரைப் பிரித்து விட்டார்கள்” என்று குறைகூறுவதற்குச் சிறிதும் இடமில்லை. இப்படியிருந்தும், வீணைக் கூச்சலிடுவதெல்லாம் பிரதம மந்திரி குறிப்பிட்டிருப்பது போல, “தீண்டாதார் தங்கள் சார்பாகச் சட்டசபைகளில் பேச தாங்களே ஒரு சில பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் உரிமையைத் தடுப்பதற்கே” யன்றி வேறல்ல என்பதில் கடுகளவும் ஐயமில்லை.

உண்மையிலேயே திரு. காந்தியவர்கள் தீண்டாதார்களின் நன்மையை உத்தேசித்து, அவர்களுக்குத் தனித்தொகுதி அளிக்கக் கூடாதெனக்கூறுவாரானால், அவ்வாறு அளித்திருப்பதற்காகப் பட்டினி கிடந்து உயிர் விடுவது அவர்கள் நன்மைக்கே என்று கூறுவாரானால், இதுவரையிலும் அவர் தீண்டாதார்களுக்குச் செய்த காரியம் என்ன என்றுதான் கேட்கின்றோம்? காங்கிரசில், 1920ல் முக்கிய திட்டத்தல் ஒன்றாகயிருந்து வந்த “தீண்டாமை விலக்குதல்” என்னும் திட்டத்தை ஏன் கைவிட்டார். காங்கிரஸ் அரசியல் திட்டத்தில் மதப்பாதுகாப்பு ஏன் வைத்திருக்கிறார், மதப்பாதுகாப்பை ஒப்புக்கொண்டால் தீண்டாதார் இன்னும் பரம்பரையாக இப்பொழுது இருப்பது போலவே இருக்கவேண்டியதுதானே. தீண்டாதார்கள் இதுவரையிலும் போராடிக்கொண்டுவரும் எந்த உரிமையைக் கொடுக்கும்படி செய்தார்? ஆகையால் திரு. காந்தியின் இத்தகைய பயமுறுத்தல் உண்மையாக இருந்தாலும், அது தீண்டாதாரின் கேட்டிற்கும், உயர்ந்த சாதி இந்துக்களின் பாதுகாப்பிற்குமே என்று நாம் கூறுவோம்.

அன்றியும், திரு. காந்தியவர்கள், மற்ற பெருங்காரியங்களையெல்லாம் விட்டு விட்டு இந்த தீண்டாதார் விஷயத்திற்கு மாத்திரம் இவ்வளவு பிடிவாதம் செய்வதன் அர்த்தம் விளங்குவது யாருக்கும் கொஞ்சம் சங்கடமாகவேதான் இருக்கக்கூடும். ஜனநாயகத்தைப்பற்றி பரிந்து பரிந்து பேசும் திரு. காந்தியவர்கள், தேசமக்களின் அபிப்பிராயத்தை மாற்றி, வகுப்புப் பிரச்சினைத் தீர்ப்பை ஒப்புக்கொள்ளாமல் வேறு ஒரு சிறந்த முடிவைச் செய்வது தானே. இதற்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒன்றும் தடைகூறவில்லையே. பிரதம மந்திரி, வகுப்புப் பிரச்சினைத் தீர்ப்பின் மேல் எழுதியிருக்கும் அபிப்பிராயத்தில், “வேறு சமரசமான முடிவை எல்லாச் சமூகத்தினரும் சேர்ந்து செய்வார்களாயின் அதை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஏற்றுக்கொள்ளுவார்கள்” என்று கூறியிருப்பது திரு. காந்தியவர்களுக்குத் தெரியாதா? இவ்வணமிருக்க, பட்டினி கிடந்து உயிர்துறக்கத் துணிவது எவ்வளவு நேர்மையான செயலாகும் என்றுதான் கேட்கின்றோம்.

ஒரு காரியத்தைத்தானும் செய்யச் சக்தியில்லை. பிறர் செய்வதையும் ஒப்புக்கொள்வதில்லை என்றால், அத்தகைய மனிதரால் யாருக்கு என்னநன்மையுண்டென்று ஆராய்ந்து பாருங்கள்.

உண்மையிலேயே திரு. காந்தியவர்கள் உயிர்விடுவதாயிருந்தாலும், அதற்குப் பயந்து கொண்டு தீண்டாருக்கு அளித்திருக்கும் தனித்தொகுதி அமைப்பு மாற்றப்படுமானால், அது ஒரு மனிதரைக்காப்பாற்ற வேண்டி, ஏழு கோடி மனிதர்களைப் பலி கொடுப்பதாகத்தான் முடியும் என்றுதான் உறுதியாக நாம் கூறுவோம்.

இச்சமயத்தில் தேசாபிமானப் பட்டத்திற்கும், பத்திரிகைகளில் கொட்டை யெழுத்துக்களில் புகழ்ந்து தங்களைப்பற்றி எழுதுவதற்கும் ஏமாந்து ஒருசில தீண்டாத தலைவர்கள், தங்களையும் இந்துக்களென்றும், ஆகையால் தாங்கள் இந்துக்களோடு தான் சேர்ந்திருக்கவேண்டுமென்றும் வீண் ஆர்ப்பாட்டம் செய்பவர்களின் வார்த்தையைக் கேட்டு யாரும் ஏமாறவேண்டாம். அவர்கள் இதுவரையிலும் இந்துக்கள் என்று சொல்லிக்கொண்டு அவர்களுடன் சேர்ந்திருந்ததனால் அடைந்த பலன் என்ன? என்பதை மாத்திரம் பொறுமையோடு சுயநலமில்லாமல் ஆராய்ந்து பார்ப்பார்களாயின் உண்மையுணர்ந்து கொள்ளாமல் போகமாட்டார்கள்.

# வருங்கால உலகம்.

## பிரஞ்சு அறிஞரின் கருத்து.

பிரஞ்சு தேசத்துப் பிரபல ஞானியும், சிறந்த அறிவாளியுமான பால் பெயின்லீப் என்பவர் இன்னும் 68 ஆண்டுகளுக்குப்பின் அதாவது கு.பி. 2000 வது வருஷத்திற்குப்பின் உலகம் அடையும் மாறுதல்களைப்பற்றி கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

தற்போது மனிதவர்க்கத்தை அடிமைப்படுத்தி வைத்துள்ள யந்திரங்களே முடிவில் மனிதவர்க்கத்தின் கதிமோக்ஷ சாதனமாக அமையும். நாம் தான் யந்திரங்களை அடக்கி ஆழ்வோமே யொழிய, யந்திரங்கள் நம்மையடக்கியாள முடியாது.

ஃ ஃ

பொருளாதார விஷயத்தில் நமக்கிடையே ஓர் பெரும் கருங்கல் சுவர் நிற்கிறதென்றே கூறவேண்டும். எப்பாடுபட்டாகிலும் அச்சுவற்றைத்தாண்டியே ஆகவேண்டும். இல்லாவிடில் ஆதிகாலத்து அநாகரீகத்திற்குத் திரும்பவேண்டிவரும். இந்தச்சுவற்றைத் தாண்டும்போது, கர்ணடகமான எண்ணங்கள், என்ற சுமைகளைத்தள்ளிவிடத்தான் வேண்டும். முதலாவதாக அர்த்த சாஸ்திரத்தில் நாம் கொண்டிருக்கும் சில தவறான எண்ணங்கள், மூடநம்பிக்கைகள் முதலியவற்றை உதறித்தள்ள வேண்டும். நம்மைச்சுற்றிலும் இன்று நாம் பலவிதமான தடைகளை ஏறபடுத்திக்கொண்டுள்ளோம். தேசமென்றும், ஜாதியென்றும், நிறமென்றும், தோலென்றும், பாஷையென்றும், வகுப்பென்றும், பலவிதமான தடைகளை நம்மிடையே நாம் ஏற்படுத்திக்கொண்டு விட்டோம். முதலில் இத்தடைகளையெல்லாம் நாம் உடைத்தெறியவேண்டும்.

ஃ ஃ

மானிடவர்க்கத்தின் சந்தோஷத்தையே நாம் லட்சியமாகக் கொண்டு உழைக்கவேண்டும். இதனால் ஏதோ கொள்கையையோ, மதத்தையோ, அன்றி தத்துவத்தையோ மற்றவர்மீது சுமத்த வேண்டுமென்பது அர்த்தமல்ல. மனிதவாழ்வின் சந்துஷ்டியை கூடுமானவரை மனிதர் அனைவர்க்கும் பங்கிட்டுக்கொடுக்க வல்லதோர் கொள்கையை கிரியாம்சையில் அநுஷ்டிப்பதற்கான முறைகளைக்கண்டுபிடிக்க வேண்டும்.

விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அறிவாளிகளும், சாஸ்திரீயமுயற்சியாளர்களும் இந்த நோக்கத்தையடைவதில் மிகுந்த உதவி செய்வார்களென்பதில் சந்தேகமில்லை.

இவ்வுலகிலுள்ள எந்த வஸ்துவினுலும் நமது முன்னேற்றத்தைத் தடுக்கமுடியாது. மனிதவர்க்கம் தனது மூடநம்பிக்கைகளையும், தவறான எண்ணங்களையும், தேசிய அகம்பாவங்களையும் சேர்த்துக்கூட்டிவைத்து ஒரு பெரும் சொக்கப்பானையாகச் செய்து, தீமூட்டி ஆனந்தக்கூத்தாடும் நாள் வெகு சமீபத்தில் அடுத்துவிட்டதென்றே நான் கருதுகிறேன். அந்தப்பெரிய சொக்கப்பானையின் ஒளியிலே, நாம் செல்ல வேண்டிய பாதை நமக்கு நன்ருகப் புலப்படும் என்று நான் நம்புகிறேன்.

---

## அறைக்குள் அம்பலம்.

(நாகை காளியப்பன்)

தாலூகா போர்டு தலைவர் ஒருவர் (பெரிய பணக்காரர்) சுயமரியாதை இயக்கத்திலுள்ள சகோதரிகளைப் பற்றிக் கேவலமான வார்த்தைகள் சொல்லி சுயமரியாதைத் தோழர்களிடம் பேசினுராம்.

பகுத்தறிவற்ற முட்டாள்களும், குடிகாரர்களுங் கூடத்தான் பொதுவாய் பெண்களைப்பற்றி கேவலமான பாஷையில் பேசிவருகிறுர்கள்.

அந்த முறையிலேயே இந்தப் பணக்கார தாலூகா போர்டு தலைவரும் நமது சுயமரியாதைக்காரர்களைப்பற்றிப் பேசி இருக்கலாம்.

இம்மாதியான அற்பத்தனமானதும், அயோக்கியத் தனமானதுமான தூஷணைகளை சுயமரியாதைத்தோழர்களும் கேட்டிருக்கிறுர்களானதினுலே அதைப்பற்றி ஒன்றும் கவலையில்லை. ஆனுலும் பொதுவாய் பெரிய பணக்கார (பிரகஸ்பதி) வீட்டுச்சங்கதிகள் அனேகருக்கு தெரிந்தசங்கதிதான். அதாவது பெரிய தீர்த்தஸ்தலங்களென்று கூறும் ராமேஸ்வரம் போன்ற பெரிய கோயில் உற்சவங்களிலும், மற்றும் தேர் திருவிழாக்களிலும், இன்னும்பலகோயில் உற்சவங்களிலும் பணக்கார வீட்டுப் பெண்கள் அங்கு செல்லும் வாலிபர்களிடத்தில் என்ன பாடு படுகிறுர்களென்பதை ஷை வாலிபர் களிடத்திலும், அல்லது அங்கு செல்லும் பணக்காரர் வீட்டுப் பெண்களையும் கேட்டாலும் தெரியும். இதுமட்டுமல்ல இவர்கள் வீட்டிலிருக்கும் (பணக்காரர் வீட்டிலிருக்கும்) பார்ப்பனக் கணக்கப்பிள்ளை, மோட்டார் டிரைவர், சமையல்க் காரன் முதலியவர்களிடத்தில் இவர்கள் பெண்களின் சங்கதிகளைக் கேட்டாலே நன்ருக விளங்கும்.

ஆகையால் இவர்கள யோக்கியதை இவ்வாறிருக்க சுயமரியாதை இயக்கப் பெண்களைப்பற்றிபேசுவதே அற்பத்தனமாகும். ஆதலால்இவர்கள் பணத்திமிராலும், சாதிஆணவத்தாலும் இனியும்நமதுஇயக்கத்தையும், இயக்கத்திலுள்ளசோதர, சோதரிகளையும்இப்படியே குடிகாரர்கள் மாதிரியும், படித்த பகுத்தறிவற்ற முண்டங்கள் பேசித்திரிவார்களே ஆனுல் இவர்களின் அறைவீட்டுச் சங்கதிகள் அம்பலத்தில் வெளிச்சமாக செய்ய சுயமரியாதைக்காரருக்குத் தெரியும் என்பதை இந்தத் தாலூகா போர்டு பிரசிடெண்டைப் போல் மனப்பான்மையுள்ள மற்றவருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

# திரை மறைவில் நடப்பவை.

## C. I. D.

### தோட்டுக்கோண்டுகூடத் தின்பேன்.

சில தினங்கட்கு முன்பு "டாக்டர்" வரதராஜுலு அவர்களின் பெண்ணுக்கு சென்னையில் திருமணம் நடந்தது. தோழர் வரதராஜுலு அவர்கள் தன்னுடைய மனைவியாரின் கழுத்திலிருந்த அடிமைக்கயிருகிய தாலியைக்கூட கழற்றி எறிந்துவிட்டதாகச்சொல்லப்படும் அவ்வளவு முற்போக்கான கொள்கைகளையுடையவர் என்று பல ஏமாந்த சோணகிரிகள் (நானும் உட்பட) நம்பியிருந்தார்கள். சுயமரியாதை இயக்கம் அதுவும் இந்த 'சாதாரணப்பேர்வழியாகிய— தென்ஞட்டுத்திலகமில்லாத'—ஈரோடுராமசாமியால் ஆரம்பிக்கப்பட்டது என்பதற்காகவே அதை அழிக்கவேண்டும் அல்லது அதற்கு எட்டிக்குப் போட்டி செய்யவேண்டும் என்று நினைத்து, அப்படியே நடந்துகொண்டிருப்பவர்களில் முக்கியமானவர்களில் தோழர் வரதராஜுலுவும், தோழர் வி. கல்யாணசுந்தரருமாகும். நமது டாக்டர் அவர்களுக்கு சுயமரியாதை இயக்கத்திற்கு விரோதமாகப் பிரசாரம் செய்யவேண்டும் என்ற வீணுசைக்காகவாவது திடீரென்று சைவசமயாச்சாரியார்கள் மீது காதல் பிறக்கும். உடனே அவருடைய வாரப்பத்திரிகை சைவத்தின் ஆராய்ச்சியோடு விளங்கும். இன்னும் எல்லோரும் ஈ. வெ. ராமசாமி என்று எழுதினுல் இவர்மாத்திரம் ஸ்ரீமான் நாயக்கர் என்று தமது பத்திரிகையில் எழுதுவார். இவருடைய சகபாடியான திரு. வி. க. வோ 'சுயமரியாதை இயக்கத்திற்கு விரோதமாகவே— வேண்டுமென்றே —தனக்கு நம்பிக்கையில்லாவிட்டாலும் நெற்றியில் சாம்பலை அடித்துக்கொள்வார். இவ்விருவரும் சுயமரியாதை இயக்கத்தை மாத்திரமல்ல, ஜஸ்டிஸ் கட்சியையே அழிப்பதற்காகவே இவர்கள் பிறந்தது முதல் இந்த நிமிஷம் வரையில் பாடுபட்டு வருகிறவர்கள் இவர்களுடைய முயற்சி எதுவரையில் பலித்திருக்கிறதென்பது வாசகர்களுக்குத்தெரியும். இதெல்லாம் பழங்கதை.

'டாக்டர்' அவர்களுடைய மகளின் திருமணத்தின்போது தாலியுண்டு. பட்டப்பகலில் குத்துவிளக்குகள் உண்டு; ஓமம் உண்டு; மந்திரம் உண்டு; சட்டிபானைகள் உண்டு; அம்மி உண்டு; அருந்ததிஉண்டு, எல்லாம் உண்டு ஆனுல் பார்ப்பான் மாத்திரம் இல்லை. அடுத்தாற்போல் நடக்கும் கலியாணத்தில் அந்தக்குறையையும் நீக்கி விடுவார்.

இதெல்லாம் ஏன் வைத்தார் தெரியுமா? சுயமரியாதை இயக்கம் இவைகளெல்லாம் முட்டாள் தனம்; பாமரத்தன்மை; குருட்டு நம்பிக்கை என்று சொல்வதால்தான். இதற்குத்தான் (Shining by Contrast) என்று சொல்வது 'பந்தயங் கட்டிக்கொள் கெட்டுப்போகிறேன்' என்று சொன்னுனும் ஒரு பிரகஸ்பதி. ஆனுல் நமது 'டாக்டர்' முன் ஒரு காலத்தில் தென்ஞட்டுத்திலகமாயிருந்தவர், இப்போதும் 2 தினசரி பத்திரிகைகளுக்கு ஆசிரியர், 'போட்டிவேண்டாம் ஐயா அறிவு வரட்டும்'

°° °°

### காஸ்மாபாலிடன் பையன்.

தஞ்சை ஜில்லாவிலுள்ள தாலூகா போர்டுத்தலைவர்களில் ஒருவர் படிப்பாளிதான் (ஆனுல் அறிவாளியல்ல) சுயமரியாதைக்காரர்களைப்பற்றி குறிப்பாகப் பெண்களைப்பற்றி அவதூருன மொழிகளை உபயோகப்படுத்தி வருவதாக அறிகிறேன். அவருடைய பெயரும் என்னுடைய நோட்டில் தாக்கலாகியிருக்கிறது. அவருடைய தனிவாழ்வு, பொதுவாழ்வு, காஸ்மாபாலிட்டன் வாழ்வு முதலிய சில ரகசியங்கள் எனக்குத்தெரியும் அவருடைய இளவயதில் வீணே சுயமரியாதைக்காரர்களிடம் சிக்கி அழிய வேண்டாம் என்று எச்சரிக்கிறேன். 'மன்னாதி மன்னரெல்லாம் மண்ணுகி மடிந்தார்கள்' நீ எம்மாத்திரம்? தம்பீ! சுயமரியாதைக்காரர்கள் 'அன்பாக் காவடிகள்' ஆனுல் நினைத்த காரியத்தை முடிப்பவர்கள். பணத்திமிர் காரணமாய் எது வேண்டுமானுலும் பேசலாமென்று நினைப்பது தவறு. திருந்திக்கொள், எச்சரிக்கை.

°° °°

### நடுச்சாமத்து நாய்கள்.

சில நாட்களாய்ப் புறப்பட்டிருக்கும் சில நாடகக்கம்பெனிக்காரர்கள் ஈரோட்டிலும் பிற இடங்களிலும் தங்கள் வேலைக்குப் புறம்பாய் நாடக மேடையில் சுயமரியாதை இயக்கத்தையும் அதன் தலைவரையும் கண்டு குலைத்து வருவதாகத் தெரிகிறது. இயக்கக்கொள்கைகளைக் கண்டிப்பதில் சுயமரியாதைக்காரர்களுக்கு எவ்விதக் கோபமுமில்லை. ஆனுல் தனிப்பட்டவர்களைப்பற்றி தாறுமாருய், அதுவும் உண்மைக்கு மாருனவைகளை உளறிக்கொட்டுவதுமாத்திரம் யோக்கியமல்லவென்பதை கூறவிரும்புகிறேன். நடுச்சாமத்தில் நாய் வேஷம் போட்டால் குலைத்துத் தீரவேண்டிய ஒருவேலை தவிர, அறிவாளிகளின் வேலையாகிய பிரசங்கத் தொழிலில் ஏன் ஈடுபடுகிறுர்களென்பதுதான் எனக்கு விளங்கவில்லை.

தோழர் கிட்டப்பா அவர்கள் 'ஞானசௌந்திரி' என்ற கிறிஸ்துவ சரித்திர சம்மந்தமான நாடகத்தில், பிலேந்திரன் வேஷம் போட்டு நடிக்கும்போது 'நான்கு வருணத்தில் ஒன்ருகிய க்ஷத்திரிய வம்சத்தில் பிறந்த நான் சண்டைக்குப் பின்வாங்கலாமா?' என்று தன் 'மனைவி' யைக் கேட்டார். சபையோர்கள் 'எவரீ' என்று கத்தினுர்கள் உடனே கிறிஸ்துவ வேடந்தரித்த பிலேந்திரன் தெலுங்குகீர்த்தனை, அதுவும் ராமர் பேரில் பாடினுர். உடனே நமது அறிவுள்ள மகாஜனங்கள் கைதட்டினுர்கள். இதிலிருந்து நமது தமிழ் நாட்டு தொழில் நாடகக்காரர்களுக்கு பொது அறிவும் படிப்பும் எவ்வளவு இருக்கிறதென்பது விளங்கும்.

இந்த நிலையில் நேற்றுத்தோன்றிய சில 'நடுச்சாமத்து நாய்கள்' நமது இயக்கத்தைக்கண்டு குலைப்பதால் ஒன்றும்மோசம் வந்துவிடாது, ஆனுல் நாடகத்திற்கு வருபவர்களில் அறிவாளிகளும் இருப்பார்களாகையால் தங்களுடைய புத்தி விசாலத்தைத்திடீரென்று ஒரே ஊரில் கொட்டிவிடாமல் பல ஊர்களிலும் கொண்டுவந்து அதன் பலனை அநுபவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

°° °°

### கோபதி—சங்கராச்சாரி.

சங்கராச்சாரியாருக்கு வரவேற்புக்கொடுப்பதற்காக சென்னை நகர சபையில் தீர்மானம் கொண்டுவந்தவர் தோழர் கோபதி. நாராயணசாமி செட்டியாராகும். தனக்கும் போட்டியாக ராயப்பேட்டையில் நின்ற ஒரு பார்ப்பனரைத்தோற்கடிப்பதற்காக இந்த பேரம் செய்தார் என்பது உண்மையாய்ப்போய்விட்டது. இருந்தாலும் பார்ப்பன ஓட்டுகள் ஒன்று கூட இவருக்கு விழவில்லை. இன்னமும் நமது கோபதிக்கு அறிவு உதயமாகுமா என்பதுசந்தேகந்தான். இத்தீர்மானம் ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினரால் ஆதரிக்கப்பட்டதென்று பத்திரிக்கைச் செய்தி கூறுகிறது. இதிலிருந்து இப்போதிருக்கும் ஜஸ்டிஸ் கட்சியானது நாயர்—தியாகராயர் காலத்து ஜஸ்டிஸ்கட்சி அல்ல. ஒரு பார்ப்பன (ஜஸ்டிஸ்) கட்சியேயாகும் என்பதற்கு அத்தாட்சி வேறு வேண்டுமா? மேற்கண்ட நடத்தைக்குக் காரணம் கூறி

பொது மக்களைத் திருப்திப்படுத்த வேண்டியது ஜஸ்டிஸ் கட்சித்தலைவர்களின் கடமையாகும். இல்லாவிடில் பொது ஜனங்கள் ஜஸ்டிஸ் கட்சிக்கும், வருணாச்சிரம சபைக்கும் கொள்கை சம்பந்தப்பட்ட வரையில் ஒருவித்தியாசமுமில்லை என்று நினைப்பதற்கு ஏதுவாகும். ஜஸ்டிஸ் கட்சிப்பத்திரிகைகள் இதற்கு என்ன காரணம் கூறப்போகின்றன?

இந்த நடத்தை விஷயமாக தஞ்சை மகாநாட்டிலும் ஒருதகராறு நடக்குமென்று தெரிகிறது.

அதுபோகட்டும், சங்கராச்சாரியார் சென்னைக்கு வருகிற காலத்தில்—அதுவும் நகரசபைக்கு விஜயம் செய்யும்போது ஆதிதிராவிடர்களும் பிற பார்ப்பனரல்லாதவர்களும் கருப்புக் கொடி பிடிக்கப்போவதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

°° °°

பாதிரியார் பதறுகிறார்.

'குடி அரசை'ப்படிக்கும் கிறிஸ்துவர்களை மதப்பிரஷ்டம் செய்துவிடுவதாக ஈரோடு பாதிரியார் பயமுறுத்துகிறாராம். 'குடி அரசு' இந்துமதத்து ஆபாசங்களை வெளிப்படுத்தும் போது மாத்திரம் நமது கிறிஸ்துவ நண்பர்களுக்கு பஞ்சாமிர்தம் சாப்பிட்டதுபோல் இருந்தது. கிறிஸ்துமதத்தின் தலையில் கைவைப்பதற்கு 'குடிஅரசு'க்கு வெகுநாள் இஷ்டமில்லை. காரணம் அதை ஒழிப்பதற்கு ஆயிரக்கணக்கான மக்கள் வேலை செய்துகொண்டிருக்கின்றனர். ஆனால் வம்புக்கு வந்தால் இனி சுயமரியாதைக்காரர்கள் விட்டு விடப்போவதில்லை. நமது ஈரோட்டுப்பாதிரியார் அவர்கள் கொஞ்சம் தனது பார்வையை மேல் நாடுகள் பக்கம் திருப்பினால் கிறிஸ்து மதம் படும்பாடு தெரியுமே! எல்லா மதங்களையும ஆபாசம் நிறைந்ததென்று சொல்லிவிட்டு இவர்கள் மாத்திரம் வாழ்ந்துவிடப்போகிறார்களா? அது முடியாது சுயமரியாதைச்சூறாவளிக்காற்று எல்லாக்குப்பைகளையும் சேர்த்துத்தான் அடித்துக்கொண்டு போகப்போகிறது 'விடிந்தால் தெரியும் உன் ஆத்தாள் என்பதும் என் ஆத்தாள் என்பதும்''

---

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

டும். நாம் உண்டிக்கும், உடைக்கும், இருப்பிடத்திற்கும் திண்டாடிக்கொண்டிருக்கின்றோம். இந் நிலையில் பழைய தற்பெருமைகளைப் பேசிக்கொண்டிருப்பதால் பயன் என்ன? நமது நாட்டின் கல்விமுறை வேலையில்லாத்திண்டாட்டத்தைப்பெருக்கி வறுமைக்கு வழிகாட்டிக்கொண்டிருக்கிறது. நமது நாடு ஆங்கிலஆட்சியின் கீழ் இவ்வளவு காலமிருந்தும் இன்னும் 100.க்கு 96 பேர் தற்குறிகளாகயிருக்கின்றனர். சிறிய ஜப்பான் தீவு வெகு விரைவில் உலகம் வியக்கும் முறையில் முன்னேற்றமடைந்து விட்டது. வெறும்இலக்கிய இலக்கணக்கல்வியோடமையாது கைத்தொழில், வர்த்தகம், விவசாயக்கல்விகளையும் நாம் வளர்க்க முற்படவேண்டும். விஞ்ஞான அறிவைப்பெருக்க வேண்டும். பெண்மணிகள் கல்வி கற்க முன்வரவேண்டும். தற்கால ஆண்கல்வி பெண்மக்கட்கு வேண்டாம். குடும்ப நிர்வாகத்திற்குரிய கல்வி முறையே பெண்மக்கட்கு வேண்டும். வைத்திய முறையும், சிசு போஷணை முறையும், வீட்டுக்கைத் தொழில் முறையும் போதிக்கும் கல்வியே பெண்மக்கட்குப் பொருத்தமானது. ஆண்—பெண் இருபாலருக்கும் வேண்டிய பொருத்தமான கல்வி முறையை எல்லாரும் வளர்க்க முற்படவேண்டும். தமிழ் மொழியிலேயே எல்லாக் கலைகளும் போதிக்கப்பட வேண்டும். சிறந்த ஆங்கிலத் தமிழறிஞர்கள் மொழிபெயர்ப்பு வேலைகளில்ஈடுபடவேண்டும். சர்வகலாசாலையாரும், செல்வரும் மடாதிபதிகளும் அவர்கட்குப் பொருளுதவி முதலியன அளித்து ஊக்கமூட்ட வேண்டும். மொழியையும் சமயத்தையும்வளர்க்கக்கடமைப்பட்டமடாதிபதிகள் கடமைதவறி வாளாவிருப்பது வருந்தத்தக்கது. இவர்கள் தங்கள் வருவாய்களைத் தக்கபயனுள்ள வழிகளில் செலவிட வேண்டும். மக்களிடையே பத்திரிக்கை வாசிக்கும் உணர்வு பெருகவேண்டும். கிராமங்கள் தோறும் புத்தகசாலைகளையும், வாசகசாலைகளையும் நிறுவ ஏற்பாடு செய்யவேண்டும்'' என்று அழகிய இனிய செந்தமிழ் நடையில் வெகு விரிவாகவும் அழுத்தமாகவும் உணர்ச்சி ததும்புமாறு பேசிமுடித்தார். வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவுற்றது.

---

(8-ம்பக்கத் தொடர்ச்சி)

ரும்பாலும் அவர்களாலேயே செய்யப்பட்டதாகும். நாயன்மார்கள், ஆழ்வார்கள், அடியார்கள், தோன்றியே தமிழ்மொழிகெட்டது. எங்கள் சிவபிரான் அகத்தியர் மொழி என்ற காலத்திலே தமிழ்மொழி கெட்டது, எங்கள் சைவத்தமிழ் என்ற காலத்திலே தமிழ்மொழி மாசடைந்தது. இப்பொழுது அந்தத்தெய்வத்தமிழை சைவத்தமிழை நூற்றுக்கு எத்தனைபேர்கள் கற்கின்றார்கள் என்பதுதான் சந்தேகம்! அறிவுக்குப் பொருத்தமுள்ள கருத்துக்கள் நூற்றுக்கு எத்தனை என்பது சந்தேகம். ஆங்கிலக்கல்லூரிகளில் வாசிக்கும் மாணவர்கள் தமிழ் மொழியை அசட்டை செய்வதன் காரணமென்ன? இவன் ஒரு தமிழனல்லவா? ஆங்கிலத்திலுள்ள உயர்ந்த கருத்துக்களையும் கொள்கைகளையுங்கண்டான். கடல்போன்று பரந்துகாணும அம்மொழியில் குளித்தான். உண்மைஅறிவு பெற்றான். அவன்மீதுபழி சுமத்துவதில் பயன உண்டா? சுமத்துபவர் அறிவுதான் என்னே! இந்த கெட்ட எண்ணம் தமிழிலிருந்து மாண்டு மண்ணாகப் போகவேண்டுமானால் எந்த மொழி முன்னேற்றம் அடைந்திருக்கின்றதோ, எந்த நாடு முன்னேற்றம் அடைந்திருக்கின்றதோ, அந்த மொழியிலுள்ள, அந்த நாட்டிலுள்ள நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதி அந்த கெட்ட எண்ணத்தைப் போக்குங்கள். தமிழா! உண்மையில் மொழி முன்னேற்றமடையவேண்டுமானால் இத்துறையில் நீ விரைந்து செல்லுக! புது, பௌதிக விஞ்ஞான நூல்களைத் தமிழில் எழுதுக! ஆபாசக் குப்பைகளை ஒழித்து விடுக!! இதுவே இதுபோது செய்யும் தொண்டாகும்.

"நெருநலுற்ற செருவிற் கிவள்
கொழுநன்
பெருநிரை விலக்கியாண்டுப்
பட்டனனே
இன்றும், செருப்பறை கேட்டு
விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது
விரித்துடீஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்
ணெய் நீவி
ஒருமகனல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்
கென விடுமே"

என்று புறநானூற்றில் கூறப்பட்டிருக்கிறது. பண்டைத்தமிழரின் வீரத்தை யாம் மிகமிக வியந்து போற்றுகிறோம். இப்போதுள்ள தமிழரின் வீரத்தை யாம் எங்ஙனம் (இந்த) எழுதுகோல் முனையால் வியந்து எழுத முடியும்? வீரத்தமிழ் நாடு அந்தோ! இப்பொழுது சோம்பேறிகள் வாழும், நடைபிணங்கள் வாழும் தமிழ் நாடாக விளங்குகின்றது. ஆனால் பேச்சில் மட்டுமுள்ள வீரம் குறையவில்லை. ஒரு கொடியில் விடப்புகையைக்கொண்டு மக்களை மாய்க்கும் வகையை மேனாட்டார்கள் கண்டு பிடிக்க தமிழன் கத்தியில், வில்லில் இந்த வீரம் எத்துணையதோ! அறிகிலேம். தற்பொழுது எங்கு வீரமுள்ளது என்றால் நெற்றி நீர் நிலத்தில் விழ உழைத்து தன் முதலாளிக்குக்கொடுத்து அவன் கொடுக்கும் மீதியை உண்ணும் மக்களிடையே வீரம் ததும்புகின்றது. அது ஒரு காலத்தில் குன்றுமீதிட்ட விளக்கு போல் பிரகாசிக்கும் என்பது திண்ணம். இன்னு செய்தார்க்கு இனியவை செய் என்று கூறிய பெரியார் மொழி பொய்யா என்றால் பொய்தான் என்போம். இனியவை செய்தார்க்கு இன்னு செய்யாத காலத்தில் அது. இன்னு செய்யும் காலத்தில் இன்னுவன்றோ செய்ய வேண்டும். இன்னு செய்வார்க்கு இனியவை செய்யும் சோம்பேறிக் கொள்கையாலன்றோ? நம் உழைப்பையும், நாட்டையும், செல்வத்தையும், சுதந்திரத்தையும் பிறர் பறித்துக்கொண்டு நம்மை அடிமையாக்கி விட்டார்கள்.

நம் நாட்டில் கல்வியையும்சமயத்தையும்வளர்ப்பதற்காகவே மடங்கள் தோன்றின. அக்காலத்து அரசர்களும் கல்வியைத் தம்மால் வளர்க்க முடியாதென்றெண்ணியே சமயத்தொடியைந்தகல்வியை முற்றத்துறந்தவர்களே போதிக்கட்டும் என்றெண்ணி (மடத்திற்கும்) மடத்திலுள்ளார்க்கும் பல உதவிகள் செய்துள்ளார். அக்காலத்தில் எல்லா மக்களுக்கும் மதக்கல்வியின் மீது பற்று இருந்திருக்கலாம். இந்த இருபதாம் நூற்றாண்டில் உண்மை அறிவு கொளுந்து விட்டெரியும் இக்காலத்தில், அந்த மடங்கள் செய்துவரும்அட்டூழியங்களையும், பஞ்சமா பாதகங்களையும் நினைத்துப் பார்க்கும் ஒரு உண்மைத் தமிழனுக்கு மனம் எவ்வாறுகொதிக்கும் என்பதை எழுதிக்காட்ட முடியுமா? கல்வியைப் போதிப்பதாகக்கூறும் மடத்தம்பிரான்களே! முற்றத்துறந்த முனிவர்களே! நீங்கள் ஆண்டுதோறும் எத்தனை மாணவர்களுக்கு உடையுண்டி அளித்துக் கல்வி போதித்து வருகின்றீர்கள் கணக்குக் காட்ட முடியுமா? மடத்திற்கென்று வரும் செல்வமெல்லாம் எந்த வழியில் போகின்றதென்பது மக்களுக்குத் தெரியாதென்று நினைக்காதீர்கள். ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலிருந்து வந்த ஒரு மதம், இங்கு வந்து, நீங்கள் தொடக்கூடாது, பார்க்கக்கூடாது எனக்கூறும் ஏழைச்சகோதரர்களை, அப்பா! குழந்தாய் எனக்கெஞ்சி தாயினும் மிகச்சிறப், உடை உணவு கொடுத்து மனிதத்தன்மைஅடையும்படி செய்கின்றது. உங்கள் மடமும், சமயமும் இருந்து உங்கள் தமிழ் நாட்டிலுள்ள தமிழனுக்கு, ஆதித்தமிழனுக்கு என் பயன்படவில்லை. மேனாடுகளில் ஏழைகள், கல்வியறிவையும் பொது அறிவையும் பெற ரேடியோ மூலமாகப் போதித்து வருகின்றார்கள். நீங்கள் ஆண்டுதோறும் கல்விக்கு என்ன செய்கின்றீர்கள். நீங்கள் ஆண்டுதோறும் ஏழைகளுக்கென நிறுவப்பட்டிருக்கும் ஆரம்பப் பாடசாலைகளையல்லவா! பயனில்லை என்று எடுத்து விடுகின்றீர்கள்.

அந்நிய மொழியும், அந்நியமதமுமல்லவா ஏழை மக்களுக்கு உதவி செய்கின்றது. தமிழ் நாட்டில் உள்ள கோயில்களுக்குள் எந்த எம் ஏழை சகோதரர்களை விட அநுமதிக்கின்றீர்கள்? அவன் ராமன், சிவன் என்றவர்களின் பெயரையல்லவா வைத்திருக்கின்றான். அவர்களுடைய அடையாளமாகிய சாம்பல் வெண்மண் சிகப்பு இவைகளை அல்லவா அணிந்திருக்கின்றான். உச்சிக் குடுமியல்லவா வைத்திருக்கின்றான். ஏன் இவர்களை உள்ளேவிட அநுமதிப்பதில்லை! நாளை அவன் ஒரு அந்நிய மதத்தில் சேர்ந்து சேவியர், காதர் என்ற பெயரை வைத்துக்கொண்டு, கிராப், சட்டை, டை இவைகளுடன் வந்தால் சில இடங்களுக்குச் செல்ல அநுமதிக்கின்றீர்களே! இதைவிட உங்கள் அறியாமைக்கு யாம் சான்று வேறு காட்டவேண்டியதில்லை. எழுத எழுதத்தொலையாத பலவிஷயங்களிருக்கின்றன. அதுவும் தமிழா! உனக்குத் தெரிந்தே! சொல்வதொன்று செய்வதொன்றாகவிருக்கின்றது. செய்யும் வரை சொல்லிக்கொண்டுதானிருப்போம். (அதற்கு மேல் அவை) தமிழ் நாட்டு சுத்த தமிழர்களே! சகோதர வீரசிங்கங்களே!! வாலிபர்களே!!! எழுங்கள்! தூங்கும் தமிழன் காதில் சுயமரியாதைச் சங்கைஊதுங்கள். கருதிய கருமத்தை முடியுங்கள்.

---

## புதுவையில்சுயமரியாதைக் கலப்புத் திருமணம்.

சென்ற 7-9-32ந் தேதி புதன் கிழமை செந்திரேஸ் மடத்தி வீதி கனம் சிக்கின்ராவ் அவர்கள் புதிதாகக்கட்டிய பேரில்லத்தில் தோழர். முத்து, க. இராஜரத்தினம் அவர்கட்கும், திருமதி குப்பம்மை அவர்கட்கும் கலப்புமணம் இனிது நடைபெற்றது. சுயமரியாதைக் கலப்புத் திருமணமியற்றிய இது இவ்வூர்க்குப் புதிது ஆதலின் பெருங்கூட்டம் கூடியிருந்தது. புதுவை வக்கீலும் சட்டசபை மெம்பருமாகிய எஸ். பெருமாள் திருமணத்தை நடத்திவைத்தார்கள். மத்தியானம் போஜனத்தின் பின் உபந்நியாசங்கள் ஆரம்பமாயின. பிற்பகல் நிகழ்ச்சிக்குப் புதுவைச் சட்டசபை மெம்பரும் பெரியாருமாகியதோழர் பி.இராமச்சந்திரனுர் தலைமை வகித்து ஆரியர் வரவு பற்றி ஓர் அரிய சொற்பொழிவாற்றினுர். அதன் பின் தோழர் பாரதிதாசன் அவர்கள் சுயமரியாதைத் திருமணம் பற்றியும், பரதூர் தோழர். பி. ஜே. ஜி. ராஜன் அவர்கள் பெண்கள் உரிமைபற்றியும், தோழர் டி. ஜெகதீசன் அவர்கள் புரோகிதக்கொடுமை பற்றியும் பேசினுர்கள். பிறகு தோழர் பொன்னம்பலம் அவர்களால் வந்தனுேபசாரங்கூறப்பெற்று இரவு 8-30 மணிக்குத் திருமணவிழா இனிது முடிவுபெற்றது. மறுநாள் கலப்புமணம் செய்த தம்பதிகட்கு ஷை எஸ். பெருமாள் விருந்தளித்தார்கள். அதைச் சார்ந்து விரைவில் பெரிய இடத்தில் மற்றும் திருமணம் வெளியூர்ப் பெரியார்களின் உபந்நியாச சகிதம் நடைபெற இருப்பதாகவும் தெரிகிறது என நமது நிருபர் எழுதுகிருர்.

---

## பச்சையப்பன் கலாசாலை லாட்டரி சீட்டு.

மேற்கண்ட பெயருடன் ஒரு லாட்டரி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது முக்கியமாக மாணவர்கள் தங்கி கல்விபயிலபோதிய வசதியளிக்க சேத்துப்பேட்டையில் ஒரு கட்டிடம் கட்டவும், சிலவுக்கு தக்கவாறு வருவாயை அதிகரித்து உயர்ந்த பொருளாதாரநிலையில்எவ்விதகஷ்டமுமன்னியில் வைக்கவும் பொதுமக்களினதும் பழயமாணவர்களதும் பூரண ஆதரவு இருக்குமென்ற பெருமித நோக்கத்தோடு இம்முறை கையாளப்பட்டுள்ளது. எல்லோருக்கும் எளிதாய் இருக்கும் வண்ணம் சீட்டு 1-க்கு 1 ரூபாய் வீதம் நிர்ணயிக்கப்பட்டு பத்து ஒரு ரூபாய் டிக்கட்கொண்ட 22000 புஸ்தகங்கள் வெளியிடவும் மொத்த வருவாயிலிருந்து ரூ. 100000 பிரைஸ்களாகக் கொடுத்துவிடவும். ரூ. 20000 செலவுகளுக்காகவும், ரூ. 100000ஐ இந்த ஸ்தாபனத்தின் உபயோகத்திற்காக வைத்துக்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒன்று முதல் 1200 பிரைஸ்கள் எடுக்கப்படும்.

சென்னை நகரின் பல பிரபலஸ்தர்கள் நிர்வாகஸ்தர்களாயிருப்பார்கள். டிக்கட்டுகள் பச்சயப்பன் கலாசாலை ஆபீசிலும் சேத்துப்பேட்டை ஹாஸ்டலிலும் கிடைக்கும். சீட்டெடுக்கும் தேதி 1933 வருஷம் ஜூலை மாதம் 31ந்தேதி ஆரம்பமாகும். 1933 வருஷம் ஜூன் மாதம் 30ந்தேதியோடு டிக்கட் விற்பனை நிறுத்தப்படும். மற்ற விபரங்கள் அறியவிரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கெழுதவும்.

வி. திருவேங்கிடசாமி எம். எ.,
பச்சயப்பன் ஹாஸ்டல்
சேத்துப்பேட்டை சென்னை.

---

## சீர்திருத்தத் திருமணங்கள்.

7—9—32 காலை 10 மணிக்கு நாகூர் சுயமரியாதைச்சங்கத்தாரின் முயற்சியால் குசத்தொரு திருவாளர் சி. ரா. சாரங்கபாணிநாயுடு அவர்கள் குமாரி. சுந்தராத்தம்பாளுக்கும் திரு. கோ. அண்ணுச்சாமி நாயுடு குமாரர் ராமச்சந்திரநாயுடுவுக்கும் சுயமரியாதைத்திருமணம் நடைபெற்றது திருமணத்திற்கு வெளியூர் பிரபலஸ்தர்களும் உள்ளூர் பிரபலஸ்தர்களும் எல்லோரும் வந்திருந்தார்கள் முக்கியமாக வண்டிக்காரத்தெருவில் உள்ள சுயமரியாதைச்சங்கத்தினர் அனைவரும் வந்திருந்தார்கள். திருவாளர் ரெத்தினம் அவர்கள் தலைமைவகித்து மணமகன் மணமகள் இவர்களிடம் வாக்குறுதி வாங்கி மாலைபோட்டு பண்டைத்தமிழர்களின் திருமண முறைப்படி நடத்திவைத்தார்.

பழையமூடப்பழக்கங்களான அரசாணிக்கால் ஆயிரம்விளக்கு ஓமம் வளர்த்தல் முதலான தீயபழக்கங்களை அடியோடு நிறுத்தப்பட்டன. இல்லாத முறைப்படி நடத்தின திருமணத்தை ஆண் பெண்களும் கண்டு இனி இவ்விதமான திருமணமே நடத்தவேண்டுமென்றும் உணர்ச்சியுடையவர்கள் ஆனுர்கள்.

---

பட்டுக்கோட்டை தாலுக்காவைச் சேர்ந்த நாட்டரசன்கொல்லை என்ற சிறுகிருமத்தில் நடந்த சுத்தசுயமரியாதைத்திருமணம் மிகவும் குறிப்பிடதகுந்தது. அறிவியக்கமாகிய நம் இயக்கத்திற்க்கே ஓர் பெரும் வெற்றியுமாகும் பல மாணஎதிர்ப்புகளுக்கிடையில், காதல், கலப்பு, பார்ப்பனீய மெழித்தல் என்ற மூன்று சுயமரியாதை இலக்கணமும் பொருந்தி நடந்ததும் பெரிய எழுத்துகளால் சுயமரியாதை ஓங்குக என்ற வாக்கியம் அடங்கியஅட்டைகள் எழுதி தொங்கவிடப்பட்டது. குறிப்பிடத்தக்கது திருமணம் நடத்திவைத்தவர் அணைக்காடு ஏ. சாமுவேல் சொற்பொழிவாற்றியவர்கள் கே. வி. அழகர்சாமி அவர்கள் டி. வி. டேவிஸ் அவர்கள் பி. எஸ். தண்டபாணி அவர்களாகும்.

(நமது நிருபர்)

---

கும்பகோணம் சுயமரியாதைவாலிபர் சங்கத்தின் சார்பாக, திருக்கடையூர் தொரடிபேட்டை கோவிந்தசாமி அவர்களின் திருச்செல்வி. ராஜாம்பாளுக்கும் நாகூர் குருநாதன் அவர்கள் திருச்செல்வன் சிதம்பரத்திற்கும் 11—9—32 ஞாயிற்றுக்கிழமைகாலை 10 மணிக்கு தோழர் ஆர். சி. வெங்கிடருமன் அவர்கள் தலைமையில் திருமணம் நிறைவேறியது அது சமயம் தோழர்கள் கே. கே. நீலமேகம், யு. நடருஜன், சுப்பையா முதலியவர்கள் கலப்பு மணத்தின் அவசியத்தைப்பற்றியும் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளைப்பற்றியும் விரிவுரை நிகழ்த்தினுர்கள். திருமணம் முடிந்ததும் சமபந்திபோஜனம் நடைபெற்றது. மணமகளான ராஜாம்பாளவர்கள் சோழிய வேளாள வகுப்பைச் சேர்ந்தவர் மணமகனை சிதம்பரம் அவர்கள் வியாபாரசெட்டியார் வகுப்பைச்சேர்ந்தவர் இத்திருமணந்தான் முதன் முதலாக கும்பகோணத்தில் நடந்த கலப்புமணமாகும்.

என காரியதரிசி எழுதுகிருர்.

---

கோலார் தங்கவயல், உரிகம் பி. பிளாக் 45 எண்ணுள்ள கிரகத்தில் நிறுவப்பெற்றிருந்த ஓர் அழகு பந்தலின் கண், வேலூர் கண்ணமங்கல நிவாசர் மு. இராமன் அவர்களின் திருமகன் ஆர. முனிசாமியாருக்கும், வேலூர் ருகந்தம் பூண்டு நிவாசர் ஐ. ஐயாசாமி அவர்களின் திருமகள் ஐ. அலர்மேலம்மாளுக்கும் குறித்தபடி சரியாக 11—9—32 மாலை 6மணிக்குமேல் உயர்திரு ஜி. அப்பாதுரையார் தமிழன் ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது. தலைவர் உத்திரவின்படி மணளியும் மணளனும் விஜயம்செய்திருந்த பெருங்கூட்டத்தாருக்கு அறிமுகப்படுத்தப்பட்டார்கள். புரோகிதமின்றி திருமணம் நடத்திவைக்கப்பட்டது. தோழர் ஆர் சுப்ரமணியர் ‘திருமணம்’ என்பதைப்பற்றி சிறிதுநேரம் சொற்பொழி வாற்றிய பின். தலைவர் முடிவுரையாக சுயமரியாதை கொள்கைகளை பொது ஜனங்கள் நன்குணருமாறு உபந்நியாசித்து பாலிய விவாகத்தின் இன்னல்களை பல ஆதாரங்களோடு விளக்கினுர். 7 30 மணிக்குமேல் நன்விருந்தளிக்கப்பட்டது. இவ்விஷயத்தில் பேருதவி புரிந்த சுயமரியாதை தமிழ் வாலிப சங்கத்தாருக்கு வந்தனம் புரிதலோடு இனிது முடிந்ததென ஒரு நிருபர் எழுதுகிருர்.

---


அரசனும், ஆண்டியும் பிறவியிலொன்றே.

ஃ ஃ

மதம் மதமென மதி கெட்டலையாதே.

---

## மதனுகமம்

(புதுச்சேரிப் பதிப்பு)

மதன விஷயங்களை விளக்கமாய் எடுத்துரைக்கும் நூல்களில் இப்புத்தகமே முதன்மை வாய்ந்தது. இதில் அநேக கொக்கோகச் சக்கரங்களும் மானிட லீலை மர்மங்களும் அடங்கியிருக்கின்றன. இன்ப ரகசியங்களை தெளிவாயும், விரிவாயும் எழுதுவதில் பெயர் பெற்ற பிரஞ்சிந்தியாவே முதன்மை வாய்ந்ததென்பது யாம் கூறுமலே நண்பர்கள் அறிவார்களாகையால் இதிலுள்ள விஷயங்களை கூறுது விடுத்தனம் விலை ரூ. 1—0—0.

வஸந்த நிலையம்
தர்மராஜா கோவில் வீதி,
புதுச்சேரி

[6ம் பக்கத்தொடர்ச்சி]

வருக்கும், வந்தனோபசாரம் கூறப்பட்டு சந்தனம், தாம்பூலம், கற்கண்டு முதலியவை வழங்கப்பெற்று 10-15க்கு இனிது முடிவுற்றது. பின்னர் விருந்தொன்றும் நடைபெற்றது.

மறுநாள் (13-9-32) பகல் திரு ஈ. வி. கிருஷ்ணசாமி அவர்கள் வீட்டில் தம்பதிகளுக்கு விருந்து நடைபெற்றது. அன்றிரவு தம்பதிகள் தென் மாப்பட்டு பிரயாணமானார்கள்.

## கோவில் பூசாரிகளின் குறும்பு.

திருச்சி ஸ்ரீரங்கம் கோவிலுக்கருகிலுள்ள சிங்கப் பெருமாள் கோவிலில் அனேகமாய் தினந்தோறும் ஆயிரக்கணக்கான திருமணங்கள் புரோகிதரைக்கொண்டு நடைபெறுகின்றன. அவைகளில் அதிகாரிகளின் சட்டப்படி ஒவ்வொரு மணத்திற்கும்—6 ரூபாய் பெற்றுக்கொண்டு அங்குள்ள புரோகிதர் அதை நடத்திவைப்பது முறை. ஆனால் சில நாட்களாக அங்குள்ள புரோகிதர் முதலியோர் சட்டப்படி ஏற்பட்ட ரூபாய் 6-க்கு மேற்பட்ட தொகை ரூ. 10, ரூ. 8, ரூ, 9 பல மாதிரியாக பாமரமக்களிடம் பிடுங்கி ஏமாற்றி வருகின்றனர். இது விஷயத்தை டிரஸ்டி யாரிடமும் தெரிவித்துள்ளோம். இந்த ஏமாற்றத்தை இனியாகிலும் ஏனைய டிரஸ்ட்டிகளும் அதிகாரிகளும் தடுத்து அதற்குக் காரணமானவர்களைத் தண்டிப்பார்களென நம்புகிறோமெனத் திருச்சி பிராமணரல்லாத வாலிபர் சங்கக் காரியதரிசி தெரிவிக்கிறார்.

## பிரசங்கம்.

10—9—32-ல் கோலார் தங்கவயல் மாரிக்குப்பம் தென்னிந்திய பௌத்த சங்க சபா மண்டபத்தில் டை சங்க வித்வானும், தமிழ் ஆசிரியருமாகிய திருவாளர் இ. நா ஐயாகண்ணுப் புலவர் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ்ப்பிரசங்கம்நடைபெற்றது. பலர் பேசினார்கள். மணி 8-30க்கு முடிவடைந்ததென கௌரவக் காரியதரிசி எழுதுகிறார்.

## கூட்டம்.

21—9—32-ல் கோலார் தங்கவயல் மாரிக்குப்பம் தென்னிந்திய பௌத்த சங்க சபா மண்டபத்தில் சனிக்கிழமை மாலை 5-மணிக்குமேல் திருவாளர் ஜி. அப்பாதுரையார் அவர்களின் தலைமையின் கீழ் பிரசங்கமாரி பொழியப்படும். அக்கால் சகோதரிகள், சகோதரர்கள் வரும்படியாய்க்கேட்டுக்கொள்ளுகிறதென கௌரவகாரியதரிசி எழுதுகிறார்.

## கூத்தூர்

### வைக்கம் வீரர் இலவச வாசகசாலை.

இவ் இலவச வாசகசாலைக்கு கட்டிடமமைக்க கவர்ன்மெண்டார் நிலம் அடமானம் அளிக்கப் போகும் விஷயமாய் வாசகசாலை மானேஜரும் பேட்டனுமான திரு. எஸ். முத்துகிருஷ்ணன் அவர்களிடம் கனம் நாகை தாசில்தாரவர்கள் அடமான நிபந்தனைகள் எழுதிவாங்கி இருப்பதாகத் தெரிகிறது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## கூத்தூர்

### இலவச பெண்பாடசாலை.

கூத்தூர் வைக்கம் வீரர் இலவச வாசகசாலையின் நிர்வாகத்தில் இப்பாடசாலை ஏற்படுமென்றும், அதன் ஆசிரியை பதவியை வாசகசாலை மானேஜர் திரு. எஸ் முத்துக்கிருஷ்ணன் அவர்கள் மனைவியார் திருமதி இரங்கநாயகியம்மாள் அவர்கள் ஏற்றுக் கொள்ளுவார்களென நம்பப்படுகிறது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## கூத்தூர்

### வைக்கம் வீரர் இலவச வாசகசாலை.

அக்டோபர் மாதத்திலிருந்து மெம்பர்களின் மாதசந்தா அணா ஒன்றையும் தொடர்ச்சியாக வசூல்செய்ய முடிவு செய்யப்பட்டிருப்பதால் ஒவ்வொரு மாதமுதல் வாரத்திலேயே சந்தாவைச் செலுத்தி வைக்குமாறு மெம்பர்களைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது ......................

சாகுபடி காலத்திற்காக மூடப்பட்ட செருநல்லூர் ஆதி திராவிட இலவச ஆரம்பப் பாடசாலையும், மேற்படி இலவச இரவு பாடசாலையும் 27ந்தேதியன்று திறக்கப்பட்டு எப்போதும்போல் நடைபெறுமென மானேஜர் அறிவிக்கிறார்.

## காந்தி சபதம்.

### "லண்டன் டைம்ஸ்" கருத்து.

ஆங்கிலோ இந்தியப்பத்திரிகையான 'டைம்ஸ் ஆப் இந்தியா' 'காந்தியின் மிரட்டல்' என்றதலையங்கமிட்டு எழுதியிருப்பதில் குறிப்பிட்டிருப்பதாவது:—

வகுப்புப் பிரச்சினை சம்பந்தமாக இந்தியாவிலுள்ள சகல வகுப்பினரும் ஒன்றுபட்டு ஒருசமரசமான முடிவுக்கு வருவதை பிரிட்டிஷ் சர்க்கார் முழுமனத்துடன் ஏற்றுக் கொள்வார்களென்பதற்குச் சந்தேகமில்லை. காந்தியின் வாசத்தைத் தடுக்கும் பொறுப்பு பிரிட்டிஷாரையல்ல, அது ஹிந்து சமூகத்தினரையே பொறுத்திருக்கிறது. 'தீண்டாதாரு'க்குக் கூட்டுத்தொகுதி கொடுக்கவேண்டியது சம்பந்தமாக முடிவு செய்ய வேண்டியதும் இந்துக்களின் கடமையாதலால், தற்போது ஏற்பட்டிருக்கும் நிலைமையை சமாளிக்க வேண்டியது இந்துக்களேயாவர்.

## டைம்ஸ் ஆப் இந்தியா.

காந்தி மாக்டொனால்டு கடிதப் போக்குவரத்தைப்பற்றி லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகை எழுதியுள்ளதாவது;—

இக்கடிதப்போக்குவரத்தை பிரசுரித்துள்ளது. சமரச மேற்படுத்த மற்றோர் முறை செய்யும் முயற்சியாக இருக்கவேண்டுமென்பது விரும்பத்தக்கதாகும். அது எப்படியாயினும் அவர் சுதந்திரத்தோடிருந்து அவரது விரதத்தை அனுஷ்டிக்க சௌகரியமளிக்கவேண்டும். அவரது தீர்மானம் 'கொடும் பூச்சாண்டி' யாகும்.

## அம்பெத்கார்.

டாக்டர் அம்பெத்கார் ஓர் பத்திரிகை நிருபரிடம் கூறியதாவது:—

கடிதங்களை சரிவர படிக்காததால் இவ்விஷயமாக நான் எவ்வித அறிக்கையும் தற்போது வெளியிட விரும்பவில்லை. காந்தி செய்துள்ள தீர்மானம் அரசியல் ஜால வித்தையாகும். ஹிந்து வகுப்பினரின் நன்மைக்காக திரு. காந்தி தமது உயிருடன் போராட விரும்பினால் தாழ்த்தப்பட்டவர்கள் தங்கள் நன்மைகளை பாதுகாத்துக்கொள்ள தங்கள் உயிரை தியாகம் செய்யவேண்டிய அவசியமேற்படும்.

## சுயமரியாதைத் திருமணம்.

11-9-32ல் கம்பம் பள்ளத்தாக்கைச்சேர்ந்த சுருளிபட்டியில் மிராஸ்தாரும், பஞ்சாயத்துக்கோர்ட்டு மெம்பருமான தே. சின்னசாமிக்கவுண்டர் மகள் பருவத்தம்மாளுக்கும், ஓடைப்பட்டி ரா. வேலுச்சாமிக்கவுண்டர் மகன் ராமசாமிக்கவுண்டருக்கும் பிராமணரல்லாமலும் சமபந்தி போஜனமாயும் திருமணம் நடந்தேறியது. மறுநாள் சங்கீதக்கச்சேரியும் கிராமபோனும் நடத்தப்பட்டது பல பிரபலஸ்தர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

(ஒரு நிருபர்)

## பார்ப்பனியமற்ற திருமணம்.

### சென்னையில் வைபவம்.

11—9—32-உ டாக்டர் வரதராஜுலு அவர்களின் குமாரத்தி திருமதி லீலாவதிக்கும். பெங்களூர் திரு. ராமச்சந்திர நாயுடுவுக்கும் சென்னை கீழ்பாக்கிலுள்ள திரு. வரதராஜுலு அவர்களின் பங்களாவில் திருமணம் சிறப்புற நடைபெற்றது. திருமணத்திற்கு சென்னையிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும், நண்பர்களும், உறவினர்களுமாக ஏராளமான பேர்கள் விஜயஞ் செய்திருந்தனர். வரமுடியாமைக்கு வருந்தி, வாழ்த்துக் கூறி பல பிரபலஸ்தர்கள் கடிதங்கள் எழுதியிருந்தனர். திருமண வைபவத்திற்குப் பின் ஒரு டீபார்ட்டி விருந்தும், இரவு சமபந்தி போஜனமும் நடைபெற்றது. மணமக்கள் ஏராளமான சன்மானங்கள் பெற்றனர்.

## T. S. தேவாஜி சொற்பொழிவு.

சென்ற 5, 6, 7, 8, 9, 10-11-32 தேதிகளில் சிங்கம்புணரி, வஞ்சினிப்பட்டி, மகிபாலன்பட்டி, தெற்கலூர், கண்டவராயன்பட்டி, மருதிப்பட்டி, சதுர்வேதமங்களம், காளப்பூர் முதலிய கிராமங்களில் இந்திய நாடும்; இயல்பும்—ஆரியர் மோசமும்; அம்பலவாசமும்—தீயவழக்கமும்; சேய்கள் பழக்கமும்—பகுத்தறிவு நேயமும்; பாமரர் மாயமும்—கோவில் தலங்களும்; கொடூரச்செயல்களும்—தாசி ஆட்டமும், சாஸ்திரி தேட்டமும்—என்பன பலமேற்கோள்களால் ஒவ்வொருவருள்ளமும் உருக உருகப்பேசியது பெரியார்பலரும் உவக்கத்தக்கது இடை இடையே பேசிய காளாப்பூர் சைவல்ய வாசகசாலை சொந்தக்காரர் மா. சு. பழனிச்சாமி அவர்கள் பேசிய சிறுவியாசமும் விரும்பத்தக்கது. (ஒரு நிருபர்)

## கோவை சுயமரியாதைச் சங்கம்.

### கார்ப்பரேஷன் கண்டனம்.

டை சங்கத்தின்வாராந்திரக்கூட்டம் ஒன்று11-9-32ந் தேதி ஞாயிறன்று சங்கத்தலைவர் தோழர். எ. ஆர். சிவானந்தம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அதுபோது பலதீர்மானங்கள் நிறைவேறியது. அதில் முக்கியமானவைகளாவன:—

சென்னைக்கார்ப்பரேஷனில் சமீபத்தில் சென்னைக்கு விஜயமாகும் சங்கராச்சாரியாருக்கு வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்த கார்ப்பரேஷனைக்கண்டிப்பதுடன், டை தீர்மானித்தை பிரரேபித்த திரு. கோபதி நாராயணசாமி செட்டியாரைக் கண்டிக்கிறதெனவும் இன்னும்பலமுக்கியமான தீர்மானங்கள்நிறைவேறியபின் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது. (ஒரு நிருபர்)

## கோவை நகரசபை

### திரு. நஞ்சையாவின் தீர்மானம்.

கோயமுத்தூர் முனிசிபல் கௌன்சிலர் ஆர். நஞ்சையா அவர்கள் அடுத்துவரும் முனிசிபல் கூட்டத்தில் அடியில்கண்ட தீர்மானத்தைக்கொண்டு வரப்போகிறதாக அறிகிறோம். தீர்மானம் பின்வருமாறு:—

"நமது நகரசபைக்குக் கட்டுப்பட்ட காபிகிளப், சாப்பாடு ஓட்டல்களில் ஜாதி, மத வித்தியாசம் இல்லாமல் எல்லோரையும் அனுமதிக்க மறுத்தால் அவர்களுக்கு லைசென்சுகொடுக்கக்கூடாது என்ற விதி ஏற்படுத்த வேண்டும்"

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வேயவகை யின்றிப்பிரிந்து மழையும், வெயிலும், தாராளமாக உட்புகத்தக்கதாயிருக்கிறது—என்ன பரிதாபம்!

இங்கு இவ்வேழைத்தொழிலாளியின் நிலைமை இவ்விதம் கண்ணால் பார்க்கச்சகியாத கண்ருவியாகயிருக்க, இவர்களின் உழைப்பால் ஊதியம் பெற்ற அம்முதலாளியோ அந்தப் பஞ்சகாலத்திலும், தனது பால்பாயசத்தையும், பச்சடிப்பர மான்னத்தையும் குறைவறப்புசித்து, வழக்கம் போலவே மெத்தைவீட்டில் பஞ்சணையில் துயில்கொள்ளுகிருன். அவனது களஞ்சியங்களெல்லாம் தானியங்களால் நிறப்பப்பட்டிருக்கின்றன. பாங்கிகளில் கட்டியபணம் வட்டியும் முதலுமாய்வளர்ந்து வருகிறது. பிறகு அவனுக் கென்னகவலை?

இவ்விதம், தன்னைச்சுற்றியுள்ள பலமக்கள் கஞ்சிக்கினறிக்கதறுவதை இப்பணம் படைத்தவன் கண்டு தனது களஞ்சியத்திலுள்ள தானியத்தில் சிறிது கொடுத்து அவ்வேழைகளின் பசிப்பிணியைப் போக்கினுலுண்டு அப்படியில்லாத வரையில் அந்தஏழை மக்களின் கதிஎன்ன? அரசாங்கமும் அவர்களது பஞ்சகோலத்தைக்கவனியாது.—தங்களைப்போன்ற ஏழை மக்களின் வீட்டுக்களஞ்சியங்களெல்லாம் வெறுமையாயிருப்பதையும், அடுத்த வேளைக்கஞ்சிக்கு வழியற்றுத் தவிப்பதையும், அதேசமயத்தில் தங்களுக்கு மத்தியிலுள்ள ஓர்செல்வன் எவ்விதகவலையுமின்றி சுகமாக உண்டு உடுத்து உறங்குவதையும், அவனது களஞ்சியங்களில் அன்னும் பலவருடங்களுக்குப் போதுமான அளவு தானியங்கள் குவிந்து கிடப்பதையும், தங்களுக்குச்செல்வன் சிறிதும் இரங்காததையும் கண்டதும், வயிற்றின் கொடுமையால், "கொள்ளையடிப்பது தவறெ"ன்பதை அந்தஏல்ல ஜனங்கள் உணர்ந்தபோதிலும், தங்கள் உயிர்உடலில் நிற்க வழியற்றிருப்பதைக்கண்டதும், பணக்காரனது களஞ்சியத்தினுட்புகுந்துதானியங்களைவாரிக்கொண்டு போகின்ருர்கள், வேறென்செய்வார்கள்? பின்னா அச்செயல் குற்றமாகிறது.

## தனிவுடைமை.

இனி, ஒருகிராமத்திலுள்ள பல மக்கள் கூலியாட்களாயும்: இரண்டொருவர்மாத்திரம் முதலாளிகளாயுமிருப்பானேன் என்னும் கேள்வி எழுகிறது இந்த முதலாளி பலவேலி நிலத்திற்குச்சொந்தக் காரனுயிருக்கிருன். கிராமமும் அதைச்சுற்றியுள்ள பெரும்பாலான நிலங்களும் இத்தனவந்தர்களின் சொத்தான தனிவுடைமையாக இருக்கின்றன. எனவே மற்றவர்கள் இத்தனவந்தரின் நிலங்களைச்சாகுபடி செய்து கூலிபெற வேண்டியவர்களாகிருர்கள். செல்வவந்தன் ஏராளமான நிலங்களைத் தனது உடைமையாக வைத்திருப்பதால், அதிலிருந்து கிடைக்கும் உணவுப்பொருள்களில் சாதாரணமாகத் தனது தேவைக்கு மிஞ்சியவற்றைக்களஞ்சியத்தில் சேமித்து, அதுவே போன்று மற்ற மக்களுக்கும் சொந்தமான நிலங்களிருந்தால், அவர்களும் அதில் சாகுபடிசெய்து மகசூலைச் சேமித்து வைத்துஉபயோகித்துக் கொள்ளக்கூடும். அப்போது பசிப்பிணி அவர்களை வருத்தாது—ஆனுல் பெரும்பாலான இக்கூலியாட்கள் ஏன் நிலங்களை உடையவர்களாயிருக்கவில்லை? (இங்கு அறிஞர்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டுகிறேம்.)

ஆயிரம் ஜனங்கள்வசிக்கும் ஓர் கிராமத்தில் அவ்வாயிரம் மக்களுக்கும் போதிய உணவுப்பொருள்கள் கொடுக்கத்தக்க நிலங்களிருந்தால், அவ்வாயிரம்மக்களும், அந்நிலங்களைச் சமபங்காகப்பிரித்து உபயோகித்துக் கொள்வதுதான்நியாயம், ஏனெனில், "அவர்களும் மனிதர்கள்! அவர்களுக்கு இயற்கையான பசிஉண்டாகிறது; பசியைத்தணிப்பது உணவு, உணவாகச்சமைக்கப்படுவது உணவுப்பொருள்கள்; அவ்வுணவுப்பொருள்களைத்தருவது அந்த நிலங்கள்"— எனவே, மனிதனின், இயற்கையன பசியைத்தணிக்க உணவுவேண்டியது இயற்கையாயிருக்க, அவ்வுணவுப்பொருள்களைத்தரும் நிலங்களும் அம்மக்கள் எல்லோருக்கும் உரிமையுடையனவாயிருக்க வேண்டியது அவசியமும், நியாயமும், எனவேஉணவுப்பொருள்களைத் தரும்நிலங்கள் மக்களின் "பொதுவுரிமை" யாகின்றனவல்லவா? நிலங்கள் எல்லாம் மக்கள் எல்லோருக்கும் உரிமையுடையதான "பொதுடைமை" ப்பொருளாயிருக்க, அந்நிலங்களை ஓர் சிலமனிதர்கள் மாத்திதிரம் தங்களின் தனி உரிமையான பொருளாய் ஆக்கித் கொள்ள இவர்களுக்கு என்ன உரிமையுண்டெனக் கேட்கிறேம். ஆயிரம் 1000 மக்களின் உணவைப்பிடுங்கி ஐம்பது 50 பேர்தின்று விட்டு, மீதியைப்பூட்டி வைத்துக்கொண்டு மற்ற (950) தொளாயிரத்தைம்பது மனிதர்களும் பசியால் மடியும் படி செய்ய இந்த 50 பேர்களுக்கென்ன உரிமையுண்டு, என்னயோக்கியதை யுண்டு எனக்கேட்கிறேம்.

## நாடும், நாட்டு மக்களும்.

ஒரு நாடென்றிருந்தால், அந்நாட்டில் பிறந்த எல்லா மக்களுக்கும் அந்நாடு சொந்தமேயன்றி, அந்நாட்டிலுள்ள ஒரு சிலருக்கு மட்டிலும் தான் அந்நாட்டுப்பூமி சொந்த மென்பது என்ன நியாயம்? இந்தியாவில் பிறந்த ஒவ்வொருவனுக்கும் இந்தியா சொந்தமானது. வடக்கே இமய மலை முதல் தெற்கே கன்னியாகுமரி வரையிலும், மேற்கே அரபிக்கடல் தீரதிலிருந்து கிழக்கே வங்காளக் குடாக்கடல் தீரம்வரையுள்ள இந்தியாவின் பூமியனைத்தும், இந்தியாவிலுள்ள 35 கோடி இந்தியர்களுக்கும் சொந்தமான பொதுச்சொத்தே தவிர, எந்த தனிப்பட்ட மனிதருடையவோ, மனிதர்களுடையவோ தனிச்சொத்தல்ல. அவ்விதம் தனிச்சொத்தாகக் கொள்ள எவருக்கும் உரிமை கிடையாது.

இந்நாட்டில் பிறந்த எல்லோரும் இந்நாட்டு மன்னரே. இந்தநியாயம் பரவவேண்டுமானுல்— தேசமுழுமையும், தேசமக்கள் முழுமைக்கும் சொந்தமாயிருக்கவேண்டுமானுல்,—தேசத்துப்பொருள்கள் தேசத்து மக்கள் எல்லோருக்கும் உரிமையுடையதாக இருக்கவேண்டுமானுல், தேசத்தின் ஒரு அங்குலநிலமேனும் ஒருவருக்கு சொந்தமான தனிவுடைமையாயிருந்தல் கூடாது

ஒருவனுக்கு உழைப்பினுல் ஒருவனுக்குக்கூலிலுகிடைக்கவேண்டுமேயன்றி, யாதொருவிதமான உழைப்புமின்றி ஒருவன் பல ஆயிரம்வேலி நிலங்களின் பயனை அனுபவிப்பதும், இரவும் பகலும் பாடுபடும் பலர் பட்டினி கிடப்பதும் அக்கிரமமான செயலாகும். ஒருவன் சோம்பேறித்தனமாகப் படுத்து உறங்கிக்கொண்டும், இன்னொருவன் கஷ்டப்பட்டு வேலைசெய்துகொண்டு மிருப்பார்களானுல், படுத்துத் தூங்கியவன் பட்டினிகிடப்பதும், வேலைசெய்தவன் சாப்பிடுவதும்தான் நியாயமாகும்.

இன்று நாட்டில் பணம் படைத்தவனுயிருப்பவன், என்னபாடுபட்டுப் பணம் தேடினுன்? பிறவியில் ஏழைகளாயிருந்து, தமது சொந்த முயற்சியால் பணந்தேடி பணக்காரரானேரைப்பற்றி இப்பொழுது நாம் பேசவில்லை. அவர்களைப்பற்றி இன்னொருசமயம் எடுத்துக்கொண்டு ஆராய்வோம். ஆனுல் பிறக்கும்பொழுதே பணக்காரன் விட்டில் பணக்காரன் மகனுய்ப் பிறந்து, தகப்பன் சொத்தைச் சம்பிரமமாக உடம்பு நோவாமல் உட்கார்ந்தனுபவிப்பவன், என்ன வேலை செய்து அதன்பயனுய் அந்த சுகத்தையடைந்தானெனக் கேட்கிறேம். "அது அவன் போனஜென்மத்தில் செய்த புண்ணியத்தின் பயன்" என வைதிகர்கள் சட்டெனப்பதில் கூறுவர். ஆனுல் நாம் இதனைப்பலமாய் ஆக்ஷேபிக்கிறேம். (அறிஞர்கள் ஊன்றிக்கவனிக்க).

ஏனெனில், "பூர்வகன்மப்பயன்" என்பதை உலகத்திலுள்ள எல்லா மக்களும் ஒப்புக்கொள்ள முடியாது. எவ்வாறெனில் "மறு பிறவி" யுண்டென நம்புவோருக்குமட்டிலுந்தான் இந்த "பூர்வகன்மப்பயன்" என்பது சமாதான மளிக்கும். ஆனுல் இன்று உலகிலுள்ள மதங்களில் "இந்து மதம்" மட்டிலுந்தான் மனிதன் திரும்பத்திரும்ப இவ்வுலகில் பிறக்கினுனெனக் கூறுகிறதே தவிர, மற்ற பெருஞ்ஜனத்தொகையைக் கொண்டதான, இஸ்லாம் மார்க்கமும், கிறிஸ்துமார்க்கமும், புத்த தர்மமும், மனிதனுக்கு மறுபிறவி உண்டென ஒப்புக்கொள்ளவில்லை. உலகிலுள்ள எல்லா மக்களையும் பொருத்து நாம் "பணக்காரன், ஏழை" என்ற விஷயத்தின்மேல் பேசுகிறேமே யல்லாது "இந்து" மதத்தினரைப்பற்றி மட்டிலும் பேசவில்லை. எனவே எல்லோருக்கும் பொதுவான ஓர் விஷயத்தை எல்லோருக்கும் பொதுவான முறைகொண்டே ஆராய்வதுதான் பொருந்துமே யன்றி, தனிப்பட்ட ஒருவரின் கொள்கையினைப் பொதுப்பட்ட விஷயத்தில் புகுத்துவது பொருந்தாது.

மற்றும் இந்துமதத்திலுள்ள, "சித்தாந்தம் அறிவிற்குப்பொருந்திய வேதாந்தம்" என்னும் இருபிரிவுகளிலுமுள்ள எவ்வகை ஆதாரத்தைக்கொண்டேனும் மனிதன் தனது பூர்வகன்மப்பயனுலேயே ஏழையாயும், செல்வவந்தனுயும்நொண்டியாயும்சப்பாணியாயும், துஷ்டனுயும், நல்லவனுயும் பிறக்கிருனென நிலைநிறுத்தக் கூடுமாயின், அவ்வல்லார்கள் நம்முடன் பகிரங்கவாதம் செய்ய முன்வரட்டுமென்று அறைகூவி யழைக்கிறேம். நாமும் சித்தாந்த வேதாந்தங்களை அறிவோம். பல வருடகாலம் அவற்றில் மூழ்கித்திளைத்திருந்தோம். நாமறிந்தமட்டில் சித்தாந்த வேதாந்தக் கொள்கைகள் உண்மையில், "பூர்வகன்மபயனுய் மனிதன், ஏழையாயும், பணக்காரனுயும், நொண்டியாயும், குருடாயும், கூனனுயும் பிறக்கிருனெ"னக்கொள்ள இடந்தரவில்லை. அஃது எவ்வாறென விவரிக்கில் பெருகுமானதுபற்றி அதனை ஈண்டு வரையாது விட்டோம். அவசியமாயின் தனிக்கட்டுரையின் மூலம் அதனை விளக்கவும் தயாராயிருக்கிறேம்.

இனி, பசியும், அந்தஸ்தும் என்பவற்றின் தொடர்ச்சியை அடுத்த கட்டுரையில் ஆராய்வாம்.

---

## சுயமரியாதைப்பொதுக் கூட்டம்.

---

நாகை சுயமரியாதைச் சங்க ஆதரவில் சுயமரியாதைப் பொதுக்கூட்டமொன்று நாகை டவுன் போலீஸ் ஸ்டேஷன் மைதானத்தில் சங்கத் தலைவர் தோழர் ஆர். வி. கோபால் தலைமையில் நடந்தது.

தோழர்கள் குஞ்சி, வி. சாமினுதன், அழகர்சாமி முதலியவர்கள் சுயமரியாதைக் கீதங்கள் பாடினுர்கள். தலைவர் முகவுரைக்குப்பின் பட்டுக்கோட்டை தோழர் டேவிட், தோழர் விஸ்வநாதன், தோழர் வி. சாமிநாதன் தோழர் கே. வி. அழகர்சாமி ஆகியவர்கள் பலஅரிய விஷயங்களைப்பற்பல மேற்களுடன் பாமரமக்கள் மனதில் பதியுமாறு பேசினுர்கள். தலைவர் முடிவுரையுடன் கூட்டம்கலைந்தது. ஷை சங்கத்தின் ஆதரவில் 10-9-32ந் தேதி சங்கத்தலைவரின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது, அதுசமயம் பலதோழர்கள் சுயமரியாதைப் பாடல்கள் பாடினுர்கள். பின்னர் தோழர்கள் பட்டுக்கோட்டை கே. ஏ. டேவிட் பி. ஏ. பட்டுக்கோட்டை கே. வி. அழகர்சாமி முதலியவர்கள் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளைப்பற்றியும், இன்னும் பல அரிய பலவிஷயங்களைப்பற்றியும்பல மெற்கொள்களுடன் பேசினுர்கள் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்து.

(ஒரு நிருபர்)

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

ரும் பசியால் மிகக் களைப்படைந்து விட்டார்கள். இதை அறிந்த ஜாபிர் என்னும் ஒரு தோழர் தம் வீட்டில் நாலுபடி மாவை அறைத்து உங்கட்கு ஆகாரம் செய்யும்படி கூறியிருக்கிறேன். அத்துடன் ஓர் ஆட்டுக் குட்டியும் அறுத்துக் கறி சமைத்திருக்கிறேன். தாங்களும் தங்கள் பிரியமுள்ள தோழர்கள் சிலரும் வந்து உணவருந்தி வரலாம் என்று கூறினார். உடனே முஹம்மத் நபி நான் வந்த பிறகே ரொட்டி சுடவேண்டும். அதற்கு முன் ஒன்றுஞ் செய்யக்கூடாது என்று கூறிவிட்டுச் சிறிது நேரத்தில் தம் வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு அவ் வீட்டிற்குப் போய் அங்கிருந்த மாவிலும், இறைச்சியிலும் தம் உமிழ்நீரைத் துப்பி பின் ரொட்டி சுடச் செய்து அந்த மாவையும் இறைச்சியையும்கொண்டு ஆயிரம் பேர்கள் பசி தீரும்படி செய்த பின்னரும் தின்னத் தின்ன மாவும் இறைச்சியும் குறையாமலும் இருந்ததாம். (நவுலத்துல் அஹ்பாப் முதலிய நூற்களில் காணப்படுகிறது

ஹுதைபா யுத்தத்தில் முஹம்மத் நபி அவர்களின் சேனைவீரர்களெல்லாம் அதிகமான தண்ணீர்த் தாகத்தால் நாவரட்சியுற்றார்கள். ஒரு சிறிய பாத்திரத்தில் கொஞ்சமிருந்த ஜலத்தால் முஹம்மத் நபி தாம் தொழுவதற்கு முகம், கால், கைகளை சுத்தம்செய்து கொண்டிருந்தார்கள். உடனே அவருடைய வீரர்கள் நபியே எங்களுக்குக் குடிக்கவும், தொழுவதற்காக அர்த்த ஸ்நானஞ் செய்யவும் தண்ணீரில்லையே என்றனர். அப்போது முஹம்மத் நபி தம்விரலை அப் பாத்திரத்தில் விட்டார்கள். விரல்களிலிருந்து தண்ணீர் ஆறாய்ப் பெருகி யோடிற்று. லட்சம்பேர் வேண்டுமானால் குடித்துத் தாகம் தணிந்திருக்கலாம். ஆனால் அப்பொழுது அங்கிருந்த 1500 பேரும் அர்த்தஸ்நானஞ் செய்தும் குடித்தும் மகிழ்ந்தாகள் என்று மிஸ்காத்தில் கூறப்பட்டிருக்கிறது.

ஒரு நாள் ஒரு அரபி ஒரு உடும்பைக் காட்டிலிருந்து பிடித்துக்கொண்டு தம் வீட்டிற்கு போகும்போது ஒரு பெரிய ஜனக் கூட்டத்தைக் கண்டு அங்குபோய் என்ன விசேடம் என்று பார்க்க முஹம்மத் என்பார் தான் ஆண்டவனால் அனுப்பப்பட்ட ஒரு தூதர் என்பதாகப் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருப்பதைப் பார்த்து எமது ஆண்டவன்பேரில் ஆணையாக நீர் ஓர் பொய்யரும் எமது பகைமைக்கு உரியவருமாவீர் என்று கூறினான். அப்பொழுது முஹம்மத் நபியின் சீடர்கள் அவனோடு கலகஞ் செய்ய ஆரம்பித்தார்கள். முஹம்மத் நபி அவர்களைச் சாந்தப்படுத்தி அந்த அரபி மனிதனை நோக்கி ஆண்டவன் மீது ஆணையாக நான்தான் ஆண்டவனது திருத் தூதனாகயிருக்கிறேன். நீ விக்ரக வணக்கத்தைவிட்டு என்னை நம்பி ஏக தெய்வ வணக்கக் காரனாக (இஸ்லாமியனாக) வா என்றார்கள். லாத்து உஸ்ரா வென்னும் எங்கள் கடவுள்களின்மீது சத்தியமாக இந்த உடும்பு உமதுபேரில் நம்பிக்கை (ஈமான்) கொள்ளாதவரையில் நான் உம்மை நம்பேன் என்று கூறி உடும்பைக் கீழே விட்டான். உடனே முஹம்மத் நபி உடும்பே இங்கே வா வென்றார்கள். உடனே அந்த உடும்பு இதோ வந்தேன் அடிபணிந்தேன் என்றது, பின்னர் நபி அவர்கள் நீ யாரை வணங்குகிறாய் என்றதற்கு வானத்தில் அர்ஷ் என்னும் சிம்மாசனத்தில் இருக்கும் அல்லாஹுத்தஆலாவை என்று கூறிற்று. பின்னர் நபி நாம் யார்? என்றார். உடனே அந்த உடும்பு உரத்த சத்தமாய் நீர் ஆண்டவனது தூதர். உம்மை நம்பாதவன் இரட்சிப்படையான் என்று கூறவே வேறொரு திருஷ்டாந்தமும் வேண்டாமென்று அந்த அரபி இஸ்லாமானான் என்று மதாரிஜுன் நுப்புவ்வாமு என்னும் நூலில் கூறியிருக்கிறது.

இன்னும் சந்திரனை அமாவாசையிலழைத்தும், பள்ளிவாயிலிலுள்ளாசசமரத் தூண் அழுததும் மலைகள் அழுது தன்னில் தண்ணீரில்லாமல் வரண்டுபோனதாய் கூறியதும், மரம் கூப்பிட்ட உடனே வேரோடு பிடுங்கி வந்ததும் போன்ற ஆயிரக்கணக்கான அற்புதங்கள் முஹம்மத் நபியால் செய்யப்பட்டதாக அவர்களைப்பற்றிக் கூறும் பல பழமையான நூற்களெல்லாம் கூறுவதோடு அதையே இன்றைய முஸ்லீம் உலகில் நூற்றிற்கு தொண்ணூறு பெயர்கள் உண்மையென்றும் நம்பி வருகின்றனர்.

வானம் ஏழு தட்டுத் தட்டாக இருக்கிறதென்றும் அதன்மேல் ஆண்டவன் அர்ஷ் என்னும் சிங்காதனத்தின்மீது வீற்றிருக்கிறான் என்பதும், பூமியை ஒரு பசுமாடு தன் கொம்பின் ஒரு நுனியில் தாங்கிக் கொண்டிருக்கிறதென்றும், அது ஒரு கொம்பிலிருந்து மற்றொரு கொம்பிற்குப் பூமியை மாற்றும்போதுதான் பூமிக்கு அசைவு ஏற்படுகிறதென்றும் சூரியன் பூமியைச் சுற்றி வருகிறதென்றும், பூமியில் நாற்பது முழ மனிதர்கள் மட்டுமல்ல, ஐநூறு முழ மனிதர்களும் அவர்கள் ஏறிச் சவாரி செய்யத் தக்க குதிரைகளுமிருந்தனென்றும், இன்னும் ஒரு மனிதனைப் பார்த்த மாத்திரத்திலேயும், வேர்வை நீர் மேலே பட்டமாத்திரத்திலேயும் ஒரு பெண் குழந்தை உண்டானது போன்ற புராணக் கதைகளும் ஆதம் நபி வான லோகத்திலிருந்து மயில் என்னும் சொர்க்க லோகப் பறவையுடன் பூமியில் தள்ளப்பட்ட கதைகளும், வயிற்றினுள்ளிருக்கும் பிள்ளைகள் பேசிய கதைகளும் ஒரு நாளில் பிள்ளையுண்டாகி ரிஷி கற்பம் இராத்தங்காது என்பதற்கொப்ப" மறுநாள் குழந்தை பிறந்து அடுத்த நாள் வாலிபனாய் விளங்கிய வரலாறுகளும், தெய்வ லோகப் பெண்களை (ஹூர் லின்கள்) இவ்வுலக மனிதர்கள் மணந்து பிள்ளை பெற்ற சரித்திரங்களையும் முஸ்லீம்களுக்கும் முஸ்லீம் அல்லாதவர்களுக்கும் (காபிர்களுக்கும்) நடந்த போர்களில் முஸ்லீம்கள் செய்த வீர தீரச் செயல்களெல்லாம் பாரத இராமாயணக் கந்த புராணப் புழுகுகளையும்தோற்கடிக்கச் செய்யத் தக்கன. விரும்புவோர் மொய்தீன் மாலை, சிராப் புராணம், சகசல் அன்பியா, இபுனியன் படைப்போர், இரத்தின முஹம்மது காரண சரித்திரம், மொய்தீன் புராணம், நசிபத்து மாலை, திருமுடி பிறக்கின ஹதீது முதலிய நூற்களைப் பார்த்தால் உண்மை விளங்கும். இந்து மதப் புராணப்புழுகர்களைவிட இஸ்லாமியப் புராணப் புழுகர்கள் எவ்விதத்தும் தாழ்ந்தவர்களில்லையென்பதைப் புலப்படுத்தும் பல சரித்திரங்கள் இந்து மதப்புராணங்களைத் தழுவியே அதற்கெதிரிடையாகவே எழுதப்பட்டிருக்கும்

இவைகளையெல்லாம் மார்க்கவெறி கொண்ட வைதீகப் பித்தர்களிடம் நமது பகுத்தறிவு ஆராய்ச்சிகொண்டு உண்மையை அனுபவபூர்வமாய் விளக்கிக் காட்டினாலும் ஒருபொழுதும் ஒப்புக்கொள்ளார். இவைகளையெல்லாம் நாம் கண்டித்துக் கூறினால் அவர்களைக் கொலை செய்துவிடுவது புண்யச் செயலென்று அவ் வைதீக முஸ்லீம்களாகிய பகுத்தறிவிற்கு எதிராக இருக்கும் மக்கள் எண்ணுகின்றனர், செய்கின்றனர், முயல்கின்றனர். எவராவது பகுத்தறிவைப் போற்றும் முஸ்லீம் அறிஞர்கள் இத்தகைய போலிக் கூற்றுக்களடங்கிய கேலிப் புராணக் குப்பைகளைக் கண்டித்தெழுதினால் வைதிக மாக்கள் பெருங் கூப்பாடு போட்டு தெய்வீக விஷயத்தில் பகுத்தறிவை உபயோகிக்கலாமா, பகுத்தறிவு பகுத்தறிவு என்றும் கூவும் முஸ்லீம்கள் எத்துணை அறிவாளியும் பொது ஜனப் பணி புரிந்து வருபவர்களானாலும் அவர்களை நாஸ்திகர், காபிர், நேச்சரி காதியானி என்று பற்பல பெயரிட்டழைத்து நிந்தித்து அவர்களுக்கு எத்துணை இடையூறும் கெடுதியும் செய்ய முடியுமோ அத்துணை கெடுதியும் இழைத்து வருகின்றனர். பகுத்தறிவினால் நவீன இயந்திரங்களையெல்லாம் செய்யும் மக்களைக்கூட இவர்கள் பிசாசின் கூட்டாளிகள், செயித்தான், இந்த நவீன இயந்திரங்களையெல்லாம் செய்யும்படி தூண்டி ஆண்டவனை மறந்து மக்களைத் தன் வயப் படும்படி செய்துவரும் சூழ்ச்சியென்றும் கூறுகின்றார்கள். தெளிவாகக் கூறினால் இம் மத வெறியர்கள் தாங்கள் பகுத்தறிவிற்குவிரோதிகள் என்று பகிரங்கமாய்க் கூறிவருகின்றார்கள். பகுத்தறிவிற்கு விரோதிகள் அறிவற்ற அஜ்ஞர்கள் என்பதை ஒரு சிறிதாவது உணர்ந்திருந்தால்இவ்வாறு ஒருபொழுதும் கூறார்கள். ஆனால் முஹம்மத் நபி அவர்கள், "பகுத்தறிவைக் காட்டிலும் மேலானதையாவது, அல்லது அதைக் காட்டினும் முழுப் பரிபூரணமானதையாவது அல்லது அப் பகுத்தறிவைக் காட்டினும் மிக அழகானதையாவது ஆண்டவன் இவ்வுலகில் யாதொன்றையும் படைக்கவில்லை" என்பதை உணர்ந்திருந்தால் இவ்வாறு பேச முன்வரார் என்பது நிச்சயம் நிசுவயம்.

(தொடரும்.)

## இருக்க இடமின்றி ஏழைகள் தவிக்க மாடமாளிகைகளும், கூடகோபுரங் களும் சாமிகளுக்கு ஏன்?


## 3 ரூபாய்க்கு 3 கடியாரங்களும் 90 சாமான்களும் இனும்.



வாசனையிற் சிறந்தது ஒட்டோ மோட்டியாவே. இது புஷ்பங்களின் சத்து. ஒரே தடவையில் 3 ரூபாய்க்கு 6 பாட்டில்கள் வாங்குவோருக்கு, கோல்ட் கில்ட் டம்மிரிஸ்ட் வாட்ச் ஒன்றும், 5 வருஷ உத்திரவாதமுள்ள ஜெர்மன் 'பி' டைம்பீஸ் 1-ம், ரயில்வே டைம் டம்மிபாக்கட் வாட்ச் 1-ம், பவுண்டன் பேனா 1-ம், இன்னும் 90 சாமான்களும் இனமாய் கொடுக்கப்படும். இனம் சாமான்கள் சேர்த்து விலை ரூ. 3. பாக்கிங் தபால் செலவு வேறு.

General Trading Agency
15/1 Joymitter St., Hatkhola P. O., Calcutta.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்து மற்ற பலவேறு புராக்களை மனிதன் சிருஷ்டி செய்து வருகின்றான். இத்தியாதி பரீட்சை மூலமாக முதல் செய்த பரிணாம உத்தேசம் ருசுவடைந்து வருகின்றது. ஆனால் ஆதியில் செய்த சிருஷ்டி உத்தேசம் வெறும் உத்தேசமாக யாதொரு ருசுவில்லாமலே கிடந்து வருகிறது. ஆதலின் மதசித்தாந்தங்களுக்கும், [Religious-Doctrine] மெஞ்ஞான சித்தாந்தங்களுக்குமுள்ள [Scientific Doctrines] வித்தியாசம் என்னவெனில், மத சித்தாந்தங்கள் வெறும் கற்பனைகளாகவே ருசுவற்று இருக்கப்பார்க்கின்றோம். மெஞ்ஞான சித்தாந்தங்களோவெனில் முதல் கற்பனையாக சிந்திக்கப்பட்டு ருசுவடைய, ருசுவடைய நிரூபிக்கப்படும் சித்தாந்தமாக கருதப்படுகின்றன. மதக்கோட்பாடுகள் [Religious Doctrines] ருசுவற்ற கற்பனைகளாகும். அதாவது Unverified hypothesis மெஞ்ஞான உத்தேசங்களோ [Scientific hypothesis] ருசுவுள்ள கற்பனைகள். அதாவது (Verifed Hypothesis) இந்த கற்பனைகள் ருசுபெற ருசுபெற கற்பனையிலிருந்து சித்தாந்தப்படுகின்றன. இதுதான் மதக்கோட்பாடுகளுக்கும் [Religious Doctrines] மெஞ்ஞான கோட்பாடுகளுக்கும் (Scientific Doctrines] உள்ள வித்தியாசம். இதனைத்தெரிந்துகொள்ளாமல் மதக்கோட்பாடுகள் மெஞ்ஞான முறைப்படி பெறப்பட்டதென்று சொல்வது பாமரமக்கள் ஊறுதலையாக்கும். தண்ணீர் நீராவியாகி திரும்பமழையாகப்பெய்வதை யாவரும் பார்க்கலாம். ஜலத்தை நீராவியாக்கி மழையாக பெய்யும்படியாகச் செய்யலாம் ஆனால் கொலையாளி ஒருவன் இறந்த பிறகு அவன் கர்மத்திற்கு தக்கவாறு எந்த பிறப்பை அடைந்தான் என்று யார் சொல்லமுடியும்? புண்ணியம் செய்த ஒருவன் எந்த ஜமீன்தாராக அவன்தான் பிறந்தான்என்று யார் சொல்ல முடியும்? புத்தர் நிர்வாணத்தை அடைந்ததாக பிடக நூல்களில் (Pitakas] கூறியுள்ளது. அவர் நிர்வாணமடைந்ததை யார் பார்த்தார்கள்? அவர் இறந்ததைத்தான் அவர் சிடர்களாகிய அனுருத்தனும் உபாலியும் மற்றுமுள்ள பிக்ஷுக்களும் (Bikshus) புத்த சந்நியாசிகளும் பார்த்து அழுதார்களேயொழிய நிர்வாணமடைந்ததை யாரும் பார்த்ததில்லை. இதுதான் அவர்கள் கண்டகாக்ஷி. ஆதலால் புத்த மதக்கோட்பாடுகள் உட்பட, மதக்கோட்பாடுகள் யாவும் ருசுவற்ற கற்பனைகளேயாகும். இந்து மதத்தில் கூறியுள்ளனவும் இந்துக்களால் நம்பிவரும் கற்பனைகளாகிய கடவுள், நரகம், மோட்சம், சிவலோகம், பரமபதம், வைகுண்டம், பாதாளம், கன்மம், மறுஜன்மம், ஆன்மா முதலிய சொற்கள் யாவும் 'ஜந்து கண்ணனை'ப்போன்ற வெறுஞ்சொற்களென அறிக. எதுவும் எதார்த்த சொற்கள் அல்ல. இந்த சொற்களுக்கு உரிய பொருள்கள் [Objects) யாதொன்றுமில்லை. இவையாவும் வெறுஞ்சொற்களே. முன்கட்டுரைகளில் இந்தசொற்கள் எவ்விதம் மனித பழக்கத்தில் வந்திருக்கக்கூடுமென சற்று விபரமாக எடுத்துக்காட்டியுள்ளோம். இந்து மதக்கோட்பாடுகள் இவ்விதமிருக்க மற்ற மதங்களின் கோட்பாடுகளின் ஆதாரங்களை விசாரிப்பாம்.

இரண்டாவது உலகப்பிரசித்தம் பெற்ற புத்தமதத்தை எடுத்துக்கொள்ளுவோம். [Buddhism] என்று ஆங்கிலத்தில் வழங்கும் புத்த தருமம் சுமார் 2500 வருஷங்களுக்கு முந்தி கவுதமபுத்தரால் உண்டாயது என்று சரித்திரக்காரர்கள் சொல்லுகின்றார்கள். இந்த மதத்தை பலவேறாக அனுஷ்டித்து வருகின்றவர்கள் ஏறக்குறைய 50 கோடி என்று எடுத்துக்கொள்ளலாம். இந்த மதத்திற்கு ஆதாரம் பிடக நூல்கள் (Pitakas] என்பர். பிடகங்கள் என்றால் 'கூடைகள்' என்று பெயர். ஏன் இந்நூல்களுக்கு 'கூடை' என்று வழங்குகின்றார்களென்றால் கவுதம புத்தர்கூறியதாகச்சொல்லும்சொற்களை அவர் இறந்தபிறகு கூட்டப் பட்டமையால் [Collected] கூடையில் வாரி வைத்ததுபோல் அச்சொற்கள் அடங்கிய நூலை கூடைகளென வழங்கப்பட்டதாம். இந்த பிடகங்கள் அதாவது 'கூடைகள்' மூவகைத்து அவையாவன சூத்திரப் பிடகம் [Sutra Pitaka] விநய பிடகம் [Vynia Pitaka] அபிதம்ம பிடகம் [Abidhamma Pitaka சூத்திரபிடகத்தில், கவுதம புத்தர் சொல்லிய சாதாரண மனிதருக்கு வேண்டிய தருமத்தை சேர்த்தார்கள். விநய பிடகத்தில் புத்த சந்நியாசிகள் நடக்கவேண்டிய ஒழுங்கு முறைகள் சேர்க்கப்பட்டன. அபிதர்ம பிடகத்தில் புத்தத்தத்துவத்தை [Buddhist Philosophy] கூட்டப்பட்டனவாம். இந்நூல்களைத்தவிர சிலவியாக்யானங்களும் வுண்டு. இந்நூல்கள் லங்கை பர்மா சையாம் தேசங்களில் வழங்கும் ஈனயானு [Hinyan] அதாவது சிறிய கப்பலைச்சேர்ந்த (Little Vehicle] வழி நூலாம். ஆனால் சீனம், ஜப்பான், கொரிய, மங்கோலியா முதலிய தேசங்களில் வழங்குவது மகாயானவழி நூலாம். [Mahayana] இவ்விரண்டு புத்த மத வழிகளும் சிற்சில விஷயங்களில் ஒன்றுபட்டும், சிற்சிலவிஷயங்களில் வேறுபட்டுமிருக்கின்றன. ஈனயானு கூட்டத்தில் [School of Thought] முக்கியமாகமுக்தி அதாவது நிர்வாணத்தைப்பற்றி ஊன்றிச்சொல்லப்படும். மகாயான கூட்டத்தில் பக்தியைப்பற்றி வற்புறுத்தப்படும். ஆனால் இவ்விரண்டு கூட்டங்களுக்கும் பொதுவாக சில புத்த சித்தாந்தங்கள், கோட்பாடுகள் உண்டு. சூத்திர பிடகத்தைச்சேர்ந்த அங்குத்தர நிகானத்தில் [Anguttara Nihana) மூன்றுகோட்பாடுகள் முக்கியமானதாக வரைந்துளது. அவையாவன:— 1. யாவையும் அனித்தியம், 2. யாவையும் துக்கம், 3. யாவையும் தானெனும் பொருள் அற்றவை. இம்மூன்றையும் அனித்திய, துக்க, அனாத்மவென்று புத்தர்கள் கூறுவர். இம்மூன்று உத்தேசங்களில் விஞ்ஞான உத்தேசங்களுக்குப் பொருந்தியவை. ஆனால் இன்னும் சில மூட கோட்பாடுகளும் உண்டு. அவையாவன:- கர்மம் [Karmam.] மறு பிறப்பு [Re-birth) நிர்வாணம் [Nirvana] சாதாரணமாக இம்மூன்று கோட்பாடுகளை சாமான்ய மக்கள் நம்பிவருகின்றனர். இவை மூன்றும் வெறுஞ்சொற்களெனவும் இவைகளில் வைக்கும் நம்பிக்கை மூட நம்பிக்கையெனவும் நிரூபிப்பாம்.

---

## நாகையில் சீர்திருத்த மணம்.

7—9—32ந் தேதி நாகையில் சுயமரியாதைச் சங்க அங்கத்தினரான தோழர் என். ஆறுமுகம் அவர்கட்கும், செல்வி கமலாம்பாள் அவர்கட்கும் சீர்காழிதோழர் கதிர்வேல் அவர்களின் தலைமையில் சீர்திருத்த முறையில் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு உள்ளூர் சுயமரியாதைக்காரர்கள் சுமார் 100 பேரும், ஆதித்திராவிட தோழர்கள் பெரும்பான்மையாகவும் சுமார்500 பேர்வரைகல்யாணமண்டபத்தில் குழுமியிருந்தார்கள்.

தோழர்கள்

சிவராமசாமி, கதிர்வேல், வி. சாமிநாதன், முதலியவர்கள் திருமணம் என்பது என்ன என்பதைப்பற்றி படித்தவரும், பாமரரும் அறியும்படி பல மேற்கோள்களுடன் பேசினார்கள்.

பிறகு சுயமரியாதைச்சங்கத்தின் சார்பாக மணமனுக்கு சங்கக்காரியதரிசி கே. முருகேசனால் வாழ்த்துப் பத்திரம்வாசித்துக்கொடுக்கப்பட்டது

பகல் 1 மணிக்கு சுமார் 500 பேர்களுக்கு சமபந்திபோஜன மொன்று நடந்தது. அதில் பட்டுக்கோட்டை. தோழர் கே. வி. அழகர்சாமி, நாராயணசாமி முதலியவர்கள் கலந்து கொண்டார்கள்.


ஓ! பலங்குன்றியவர்களே! தாதுபுஷ்டியில்லாதவர்களே! கிழத்தன்மையடைந்தவர்களே!

இதோசாப்பிடுங்கள்

# தங்கபஸ்பம்

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார தாது புஷ்டியும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது; பத்தியமில்லை. நாட்பட்ட அல்லது புதிதாயுண்டான எல்லாவியாதிகளையும் நீக்கி ஆண்மைத்தனத்தை உண்டாக்கி தாதுபுஷ்டியைக்கொடுக்கும்.

48 நாள் பஸ்பம் ரூ. 20. 24 நாள் பஸ்பம் ரூ. 10.

## குரு நாக பஸ்பம்-மூலத்திற்கு.

ஆபரேஷன் அவசியமில்லை. முளை தானே கரையும், சீழ் மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும் உத்திரவாதமுள்ள சிறந்த ஒளஷதம். புட்டி 1-க்கு ரூ. 4.

## தாளக பஸ்பம்- இருமலுக்கு.

காசம், க்ஷயம், ஈளை; இளைப்பு; இருமல்; கஷ்ட சுவாசம், கோழை; கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8 வித காசமும் அவசியம் தீரும் அனுபவத்தில் கைகண்டது. புட்டி 1-க்கு ரூ. 4.

## அப்ரேக் செந்தூரம் - நீரழிவுக்கு

ஜாஸ்திபோகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி ரத்த விர்த்தியையும் தேக புஷ்டியையும் தரும். சகலமேகமும் நீங்கும். தளுக்கற்றது. புட்டி 1-க்கு ரூ. 15. வி. பி. வேறு.

வைத்திய ஆசிரியர் மலையப்பசாமி,

வைத்தியசாலை, பழனி, S. I.,

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இயற்கைமதம் ... | 0—8—0 |
| 2. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 3. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 4. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 5. | ஆராய்ச்சி அணிகலம் ... | 0—12—0 |
| 6. | சுயமரியாதை தத்துவ கீதங்கள் ... | 0—4—0 |
| 7. | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—0 |
| 8. | மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... | 2—0—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0

ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**
**ஈரோடு.**

---

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

## மாதர் சுதந்திரம் அல்லது
# பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணு 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு, இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

---

## Goshaye office pillss.
## கோஷாயி ஆபீஸ் மாத்திரை



உதவி டாக்டர் T. K. V. Chalam.

மலச்சிக்கலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணமாகக்கூடிய கோஷாயி ஆபீஸ்மாத்திரை 51 கொண்ட சீசா 1க்கு ரூ. 1—10—0 101-க்கு 3—0—0. வி. பி. பாக்கிங் சாஜ் வேறு.

டாக்டர் B. A. எதிராஜ்,
(காலராபைரி) கோஷாயி வைத்தியசாலை, தென்னூர், திருச்சி.

---

**"பசிக்கும் வயிற்றிற்கு ஒரு கவள சாதம் கொடுக்க சக்தியற்ற சாமிகளும், சாஸ்திரங்களும் இந்நாட்டுக்கு வேண்டியதில்லை"**

---

## "சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்க வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.

இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

---

## "குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யூம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

## "ரிவோல்ட்"

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் நேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்
"குடி அரசு"
ஈரோடு.

---

**ANANGARANGABATIKA.**

*(Enjoyment Pill)*

DIVINE REMEDY FOR SEXUAL DISABILITY

and IMPOTENCY-Restore youthful Retaintive & Erective Capacity ENSURE PLEASURE FOR ONE HOUR. Even an OLD one can fully enjoy the HEAVENLY BLISS derived From Sexual intercourse.

Complete satisfaction guarenteed. Money refunded in case of tailure. Price for 60 Pills Rs. 8. Sample phial of 20 Pills Rs. 3 only. Please write in ENGLISH.

**"SAILASRAM" (K)**
***Chandanpur,***
**(Khulna) E. B. R.**

---

### "குடி அரசு" கிடைக்குமிடங்கள்.

வெல்லூர்.
வி. டி. ராஜமாணிக்கம், நியூஸ் ஏஜண்ட்.

கரூர்.
சிங்காரவேல்பிள்ளை, ஆப்காரி கண்ட்ராக்டர்.

திருப்பூர்.
முருகேசம், நியூஸ் ஏஜண்ட்

திண்டுக்கல்.
சிக்கந்தர்கான்சாயபு.
மலைக்கோட்டைதெரு.

காரைக்குடி.
விஸ்வனுதம், வெற்றிலைக்கடை—கல்லுக்கட்டி.

சேலம்.
சிவசுப்ரமணியம், வீரராகவ செட்டி தெரு, அரிசிபாளயம்.

கொளும்பு.
சிவன் கோவில் மேற்குமடம் பருத்தித்துரை.

புதுவை.
திருவள்ளுவர் வாசிப்புசாலை 4 ஓர்லெயன்வீதி.
நடேசமுதலியார் சோடாபாக்டரி ராஜவீதி.

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோததியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.
இதன் விலை அணா. 0—2—0

## சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.
இதன் விலை அணா. 0—2—0

## சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.
இதன் விலை அணா. 0—2—0,

## சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.
இதன் விலை அணா 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.
இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.
இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.
இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0 2—0

## கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என் எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.
இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.